
KALKI
25.1.98
ரூ. 4.50
கல்கி
சோனியா பிரசாரம்:
வோட்டா? வெத்து வேட்டா?

இந்தியாவின் மிகப் பெரிய கடைகள்

சரவணா ஸ்டோர்ஸ்

தங்கநகைகள் ✧ பட்டு ஜவுளிகள் ✧ பாத்திரங்கள்

ரெங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை-17.

தங்க, வெள்ளி நகைகளுக்கு செய்கூலி இல்லை

பழைய பொன் நகைகளை கொடுத்து புன்னகையோடு புதிய பொன் நகை பெறவும்.

22 ct தங்கம்
1 கிராம் ரூ. 20
வரை குறைவு

நாங்கள் விற்கும் தங்க நகைகள் மற்ற எந்த கடைகளையும் விட உயர்வான தரம் என்று சவால் விட்டு உறுதி கூறுகிறோம்.

பட்டு
புடவைகளுக்கு
10% தள்ளுபடி




ஜவுளிகள்,
ரெடிமேட் ஆடைகள்,
பாத்திரங்கள், டி.வி.
ரேடியோ, ஃபிரிஜ், ஃபேன்

WE ACCEPT VISA,
MASTER
CARDS ONLY

ஞாயிறு விற்பனை உண்டு

L.R.SWAMI / P.P.

சிரிப்புத் தொகுதி!



கருத்து : நெய்வேலி ஜீவி

கல்கி இண்டர்நெட் முகவரி: www.kalkiweekly.com ஈ மெயில்: kalki@md2.vsnl.net.in





"இது ரஜினி ரசிகர்கள் செய்ததல்ல!"

கடந்த 8.1.98 வியாழன் இரவு 12:30 மணியிலிருந்து ஒரு மணிக்குள் கோவை இதய தெய்வம் மாளிகையைக் (அ.தி.மு.க. அலுவலகம்) குறிவைத்து பெட்ரோல் குண்டு வீசப்பட்டதாகத் தகவல். எம்.ஜி.ஆர். இளைஞர் அணி மாவட்டச் செயலாளர் ஜி. ரவீந்திரன் கார் ஒன்றும் எரிக்கப்பட்டது... இது பற்றி கோவை மாநகர அ.தி.மு.க. செயலாளர் தா. மலரவனைச் சந்தித்துக் கேட்டபோது....

"இங்கு அப்போது யாருமே இல்லை. அலுவலகக் காவலாளி மட்டுமே இருந்த நேரம்... யாரோ பாட்டிலில் பெட்ரோல் குண்டு தயாரித்து வீசியிருக்கிறார்கள்.... நல்லவேளை... அது கட்டடத்தின் பத்தடி தூரத்தில் உள்ள வேப்ப மரத்திலேயே பட்டு உடைந்து எரிந்து விட்டது. இல்லையென்றால் இந்த அலுவலகம் பலத்த சேதப்பட்டிருக்கும். இதன் பின்னணியில்தான் இங்கு முன்புறம் நிறுத்தப்பட்டிருந்த காரும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டிருக்கிறது...!

"நாங்கள் பி.ஜே.பியுடன் கூட்டு வைத்துள்ளதுதான் பிரச்னை என்றால் -



• இதயதெய்வம் மாளிகை

அதிருப்தி காட்ட வேண்டுமென்றால் சில வகுப்புவாத சக்திகள், கூட்டுச் சேர்ந்து 10, 15 நாள் கழித்து இதைச் செய்ய வேண்டியதில்லை. மதவாத அமைப்புகள், எதையும் உடனடியாகச் செய்யக்கூடியவை. ரஜினி ரசிகர்கள் கூட அப்படித்தான். எதையும் உடனுக்குடன் துடிப்புடன் செய்து விடுவார்கள். மாநாட்டில் கவிதை வாசித்ததற்குக் கண்டனம் தெரிவித்த (ஜெவுக்கு எதிரான) வால்போஸ்டர்கள் கூட அவர்கள் ஒட்டினதல்ல என்பதுதான் எங்கள் அபிப்ராயம். எப்படியென்றால் ரஜினி ரசிகர்களாயிருந்தால் தமிழ்நாடு முழுக்க ஒரே நேரத்தில் போஸ்டர் அடித்து ஒட்டியிருப்பார்கள். கவிதை வாசிக்கப்பட்ட மறுநாளே இது நடந்து முடிந்திருக்கும். அது நடந்து ஒருவாரம் கழித்து, ஒவ்வொரு மாவட்டமாக.... ஆற அமரத்தான் செய்திருக்கிறார்கள். எனவே, இதை ரஜினி ரசிகர்கள் செய்திருக்க முடியாது...



* மலரவன்

"உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். கோவையில் அப்பு என்பவர் ஒட்டிய போஸ்டரில் "தலைவா நீ ஆணையிடு.. அ.தி.மு.க.வை அழித்துக் காட்டுகிறோம்!" என்று ஒரு வாசகம். இந்த அப்புவின் அப்பா ஏ.எம். சையது முகம்மது போட்டி அ.தி.மு.க.காரர். அவர் மகன் ரஜினி ரசிகர் என்று பேர் சொல்லிக் கொண்டு போஸ்டர் ஒட்டுவது வேடிக்கையாயில்லை! ரஜினி ரசிகர் மன்றங்கள் பெயரில் ஒட்டப்பட்ட சில போஸ்டர்களில் ஊரும் காணோம், பேரும் காணோம். அச்சடித்த அச்சகத்தின் அடையாளமும் காணோம்.... போதாக்குறைக்கு செட்டி வீதியில் ரஜினி மன்றத்தினர் எங்கள் தலைவியின் கொடும்பாவியை எரித்தனர். அவர்கள் மேல் போலீஸ் நடவடிக்கை துளி கூட இல்லை. இதன் மூலமே அவர்கள் யாரென்று உறுதியாகி விடுகிறதே!" என்றார் அவர். ●

பேட்டி, படங்கள் : "கேயெஸ்வி"

நிதி மோசடி வழக்குகள்:

தாமதமாகிறதா தனி நீதிமன்றம்?

ஆயிரக்கணக்கான நடுத்தர மக்களின் கோடிக்கணக்கான ரூபாயை விழுங்கி ஏப்பம் விட்ட நிதி நிறுவன மோசடி வழக்குகள் எந்த நிலையில் இருக்கின்றன? தனி நீதி மன்றம் அமைக்கப்பட்டு விட்டதா? போலீஸ் வட்டாரத்தில் விசாரித்தோம்.

"தமிழக அரசு எடுத்த தீவிர நடவடிக்கையின் காரணமாக, சிறப்பு நீதிமன்றத்துக்கு மத்திய அரசின் அனுமதி கிடைத்து, தேவதாஸ் என்கிற மாவட்ட நீதிபதியை, சிறப்பு நீதிபதியாக நியமித்திருக்கிறார்கள். எழும்பூரில் கோர்ட்டு அறை தயாராகிக் கொண்டு இருக்கிறது. வழக்கமான அரசின் மெத்தனம் காரணமாக நாற்காலிகள், பெஞ்சுகள் போன்றவற்றை வாங்கத் தாமதம் ஆகிறது. இந்த நிதியாண்டுக்குள் நீதி மன்றம் தயாராகி விடும்!"

"வழக்குகளின் இப்போதைய நிலை என்ன?"

"சென்னை எழும்பூரிலும், சைதாப்பேட்டையிலும் உள்ள மாஜிஸ்திரேட் கோர்ட்டுகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. சிறப்பு நீதிமன்றம் செயல்படத் துவங்கியவுடன் எல்லா நிதி நிறுவனங்கள் பற்றிய குற்றப் பத்திரிகைகளும் அங்கே மாற்றப்படும்."

"சிறப்பு நீதி மன்றத்தில் வழக்குகள் முடிய எவ்வளவு காலம் ஆகும்?"

"ஒவ்வொரு நிதி நிறுவன வழக்கிலும் ஆயிரக்கணக்கான சாட்சிகள் இருக்கிறார்கள். இப்போது ஹாய்யாக ஜாமீனில் இருக்கும் நிதி நிறுவன அதிபர்கள் "பணத்தைக் கொடுத்து விடுகிறோம்" என்று சமரசத்திற்கு வந்து ஜெயில் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது!"

பி.கு: *நிதி நிறுவன அதிபர்கள் அரசியல் சூழல் மாறுமா என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். அ.தி.மு.க.வுக்கு ஏறுமுகம் என்றால், வேறு புதுப்பெயர்களில் நிதி நிறுவனங்களைத் துவங்கவும் சிலர் தயாராம்! அதுசரி, ரிசர்வ் வங்கியின் இறுக்கப்பட்ட விதிகள் இவர்களுக்குத் தெரியாதோ!*

— ஆரெஸ்வி


ரஜினியின்
அறிக்கை
மட்டும்
போதுமா?

ஒருவழியாக மௌனத்தை உடைத்து, 'தி.மு.க. - த.மா.கா. கூட்டணிக்கே இந்தத் தேர்தலிலும் ஆதரவு' என்று அறிக்கை விட்டு விட்டார் ரஜினி. 'இதைச் செய்யப் போகிறார்; அதைச் செய்யப் போகிறார்' என்று அடுப்பங்கரை வரை மூக்கை நீட்டி கவர் ஸ்டோரியெல்லாம் வெளியிட்டு பரபரப்பை உண்டாக்கத் தயாராயிருந்த புலனாய்வுப் பத்திரிகைகளின் வாயை அடைத்து விட்டார் மனிதர்.

தி.மு.க.வுக்கும் - த.மா.காவுக்கும் ரஜினி அளித்துள்ள பொங்கல் பரிசு (இனாம்?) இது. 'ரஜினி இந்தத் தேர்தலில் எந்தக் கட்சிக்கோ, கூட்டணிக்கோ ஆதரவு தெரிவிக்கக் கூடாது என்று முட்டி மோதிப் பார்த்து மூக்குடைபட்டுப் போன 'நடுநிலை'யாளர்களும் உண்டு. அவர்களது நோக்கம் ரஜினி ஆதரவில்லாமல் தி.மு.க. - த.மா.கா. கூட்டணியை முடக்கி விட்டால், 'அம்மா'வுக்கு ரத்தினக் கம்பளம் விரித்து விடலாமே என்பதுதான். ஆனால் புத்திசாலியான ரஜினிக்கு யாருமே விளக்கத் தேவையில்லை. ஊழல் வழக்குகள் அரைகுறையாக நிலுவையில் நிற்கும் நிலையில், அரசியல்ரீதியாக அம்மாவுக்கு ஏறுமுகம் என்றாகி விட்டால், நிலைமை விபரீதமாகி விடும் என்பதை உணர்ந்து சரியான நேரத்தில் நெற்றியடியாக வந்திருக்கிறது அறிக்கை!

ஆனால் ரஜினியின் வெறும் அறிக்கை தி.மு.க. - த.மா.கா. கூட்டணியின் நூறு சதவீத வெற்றிக்கு வழிவகுக்குமா? இந்தக் கேள்விக்குத் தெளிவான பதில் சொல்வது சற்று கடினம்தான். காரணம், பஸ் கட்டணம் ரேஷன் பிரச்னை போன்றவற்றில் மக்கள் மிகவும் கடுப்புடன் இருக்கிறார்கள். அடிக்கடி நிகழும் குண்டு வெடிப்புகள் வேறு சராசரி மனிதனை பீதியடைய வைத்திருக்கிறது!


இந்த நிலையில், ரஜினியைப் பார்த்து ஜெ. - வை.கோ முகாமிலிருந்து எதிர்க்கணைகள் ஏராளமாக வர வாய்ப்பிருக்கிறது. குறிப்பாக வை.கோ. போன்ற பேச்சாளர்கள் தங்களது பேச்சுத்திறனால் ரஜினி ரசிகர்களைத் தடுமாற வைக்கும் ஆற்றல் கொண்டவர்கள் என்பதை மறுக்க முடியாது. சென்ற சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, ரஜினி ரசிகர்கள் பலவிதங்களில் தி.மு.க.வினரால் உதாசீனப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக உள்ளாட்சித் தேர்தலின் போது இந்தப் பிரச்னை லோக்கல் ஏரியாக்களில் வெடித்தது. ஆகவே 'தி.மு.க. - த.மா.கா. கூட்டணிக்கு வோட்டுப் போட வேண்டும்' என்ற ரஜினியின் மெஸேஜ் அவரது கடைசித் தொண்டர்களுக்குப் போய்ச் சேர்ந்து செயல்பட வைக்க வேண்டுமென்றால் ரஜினி, அறிக்கை விட்டால் மட்டும் போதாது. அதுவும், சில உள்ளூர் ரசிகர் மன்றத் தலைவர்கள், உள்ளூர் அரசியல்வாதிகளிடம் 'சமரச'மாகப் போய்விடும் ஆபத்திருப்பதால் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டியிருக்கிறது. இல்லையேல் பல குழப்பங்கள் உண்டாகலாம்.

"தி.மு.க. - த.மா.கா. கூட்டணியை ஆதரிக்கச் சொல்லி விட்டார் தலைவர். ஆனால் நாங்கள் பிரசாரம் செய்யும்போது அரசின் குறைபாடுகளைப் பற்றி ஏகப்பட்ட கேள்விகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். சென்ற தேர்தலில் ஒட்டுமொத்த எதிர்ப்பலையில் மாபெரும் உந்துசக்தியாக நாங்கள் இருந்தோம். இப்போது நிலைமை மாறியிருக்கிறது. பணி கொஞ்சம் கடினம்தான்!" என்கிறார் ரஜினி ரசிகர் மன்றப் பிரமுகர் முரளி.

அது சரி; அப்போது ரஜினி என்னதான் செய்ய வேண்டும்?

"திருப்தியளிக்கும் வாதங்களோடு தி.மு.க. - த.மா.கா. கூட்டணியை ஆதரித்து சாட்டிலைட் சேனல்களில் பேச வேண்டும். முக்கிய நகரங்களில் பேசினாலும் நல்லது. இதுபோன்று இப்போதே செயல்படத் துவங்கினால், பின்னாட்களில் தனிக்கட்சி ஆரம்பித்தாலும் உதவியாக இருக்கும். இல்லையேல் ரஜினி ரசிகர்களின் ஒட்டுமொத்த ஆதரவும் எங்கள் கூட்டணிக்கு கிடைக்கும் என்று உறுதி கூற முடியாது!" என்கிறார்கள் இரண்டு கட்சிக்காரர்களும். ●

— ப்ரியன்



ஜெ. கூட்டணிக்கு எத்தனை இடங்கள்?

● நாடார் இன மக்கள் தமிழ் மாநில காங்கிரஸ் மீது கொஞ்சம் கோபமாக இருக்கிறார்கள். காரணம், தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி 'மீட்பு' விவகாரத்தில், எல்லாக் கட்சிகளும் அவர்களுக்கு ஆதரவாக அறிக்கை விட, த.மா.காவிடமிருந்து ஒன்றுமில்லையாம். 'இந்த விவகாரத்தில் தற்போது அடிபடும் தொழிலதிபர் ஒருவர் த.மா.கா. பிரமுகர்களுக்கு மிகவும் வேண்டியவர் என்பதால் தான் அறிக்கை விடவில்லையோ' என்று சந்தேகப்படுகிறார்கள் அவர்கள்.

● சமீபத்தில் மதி.மு.க.வை விட்டு விலகிய தென் மாவட்டப் பிரமுகர் மீது ஏகமாகப் புகார் சொல்கிறார்கள் ம.தி.மு.க. பிரமுகர்கள். நிதி வசூல் விவகாரத்தில் அந்தப் பிரமுகர், வை.கோ.வால் கடுமையாகக் கண்டிக்கப்பட்டாராம். வசூல் செய்த பணம் கட்சிக் கணக்கில் கொண்டு வரப்படவில்லையாம். ஆனால் இதை அந்தப் பிரமுகரது ஆதரவாளர்கள் பொய்ப்புகார் என்று மறுக்கிறார்கள். 'அரசியல்ரீதியாக மோதாமல் இப்படி வதந்திகளைக் கிளப்பி விடும் நிலைக்குப் போய் விட்டார்களே' என்று வருத்தப்படுகிறார்கள் அவர்கள்.

● அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டு விவகாரத்தில், பா.ஜ.க. தமிழக பிரமுகர்கள் கணேசனுக்கும், மைத்ரேயனுக்கும் கருத்து வேறுபாடு இருந்தது என்பது பரவலான பேச்சு. அ.தி.மு.க., கூட்டணிக் கட்சிகளுக்கு இடம் ஒதுக்காத நிலையில் பா.ஜ.க. வேட்பாளர்களை அறிவித்து அம்மாவை சங்கடப்படுத்தியது அல்லவா! 'இந்தக் குழப்பத்துக்குக் காரணம் கணேசன்தான்' என்று மைத்ரேயன் தரப்பில் சொல்கிறார்கள். ஜெயலலிதா விவகாரத்தில் தற்போது வாஜ்பாய் கருத்தோட்டம், அத்வானி கருத்தோட்டம் என்று இரண்டுவிதமாக இருக்கின்றன. 'கூட்டணிக் கட்சிகளுக்கு மந்திரி சபையில் இடம்கொடுப்போம்' என்று ஜெயலலிதாவை பக்கத்தில் வைத்துக் கொண்டு அத்வானி சொன்னது வாஜ்பாய் தரப்பு பிரமுகர்களுக்கு ஜீரணிக்கக் கஷ்டமாக இருந்ததாம். "வடக்கே மற்ற கட்சிகள், 'சரியான ஊழல்வாதியோடு தெற்கே கூட்டு வைத்துள்ள பா.ஜ.க.வுக்கா உங்கள் வோட்டு?' என்று பிரசாரம் செய்யத் துவங்கி விட்டார்கள். என்ன செய்வது எல்லாம் விரல் விட்டு எண்ணக்கூடிய பாராளுமன்றச் சீட்டுகளுக்காகப் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது!" என்று வருத்தப்பட்டார் பா.ஜ.க. பிரமுகர் ஒருவர்.

● சென்ற முறை பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த அதே நபர்களுக்குத் தி.மு.க.வில் இந்த முறையும் சீட்டு கிடைக்குமா? சந்தேகம் என்கிறார்கள் கட்சிக்காரர்கள். "அவர்களுடைய செயல்பாடுகளைப் பற்றி மாறன் நன்றாகக் கணித்து வைத்திருக்கிறார். ஆகையால் அதில் பாதிப் பேருக்குக் கிடைத்தால் அதுவே பெரிய விஷயம்!" என்று சொல்கிறார் தி.மு.க. பிரமுகர் ஒருவர். ஆனால் கலைஞரைப் பொறுத்தமட்டில் ஆட்களை மாற்றுவதால் பல புதிய பிரச்னைகள் வரும் என்று யோசிக்கிறாராம்.

● சந்திரலேகாவுக்கு ஒரு பாராளுமன்ற சீட் வாங்கித் தர முடியவில்லையே என்ற வருத்தத்தில் இருக்கிறார் சுவாமி. ஆனால் முயற்சியைக் கைவிடாமல் இன்னமும் அம்மாவிடம் முட்டி மோதிப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தேர்தல் சமயத்தில் மாறனைப் பற்றிய பல அதிரடி 'புகார்களை' அள்ளி விடப் போகிறாராம் சுவாமி. "ஏற்கெனவே சிதம்பரம் விவகாரத்தில் போலி ஆவணத்தைத் தயாரித்தவர் என்று சி.பி.ஐ., சுப்ரீம் கோர்ட்டில் சுவாமியைத் தோலுரித்துக் காட்டி விட்டதே அது போதாதா இவருக்கு" என்று கேட்கிறார் தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

● ஒரு தனியார் நிறுவனம் மூலம் அம்மா எடுத்த கருத்துக் கணிப்புப்படி அ.தி.மு.க. கூட்டணிக்கு ஒன்பதிலிருந்து பன்னிரண்டு இடங்கள் வரை கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்று தெரியவந்ததாம். தமிழக போலீஸார் உளவுத் துறை தனது கணிப்பில் தி.மு.க. அணி இருபது இடங்கள் பெறும் என்று குறிப்பிட்டிருக்கிறதாம்! ●

— தில்லப்பா

காதில் விழுந்தவை :

ஸ்வாமி முக்தானந்தாவின் சுயசரிதை


ஓம் குரு ஓம்

சித்சக்தி பப்ளிகேஷன்ஸ், மிகச் சிறப்பான பாராட்டைப் பெற்றுள்ள, "சித்சக்திவிலாஸ்" என்ற அற்புதமான நூலின் தமிழ் மொழிபெயர்ப்பை வெளியிடுவதில் பெருமை கொள்கிறது.

இந்த அற்புதமான புத்தகம் கணேஷ் புரியில் அமைந்துள்ள குருதேவ் சித்த பீடத்தின் மாபெரும் சித்தரான "சுவாமி முக்தானந்தா பரமஹம்சா" அவர்களின் ஆன்மீக சுய சரிதையைச் சொல்லுகிறது. சுவாமி முக்தானந்தா தமது வாழ்நாளிலேயே, உலகளவில் பல்லாயிரக்கணக்கான ஆன்மீக அன்பர்களுக்கு "சக்திபாத்" அளித்து ஒரு தியானப் புரட்சியை ஏற்படுத்தியருளினார்.

முதற்கண் ஹிந்தியில் எழுதப்பட்ட "சித்சக்திவிலாஸ்" என்ற இந்நூல், 1970-ல் வெளியிடப்பட்டபோது பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் அற்புதமான மாற்றங்களை ஏற்படுத்தி ஆன்மீக உலகில் ஒரு பெரும் புயலை உண்டாக்கியது.

இதுவரை பதினாறு மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல், இதைப் படிப்போரின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக இருந்து வருகின்றது.




சித்சக்திவிலாஸின் தமிழ்ப் பிரதியைப் பெற விரும்புவோர் கீழ்கண்ட முகவரிக்கு, புத்தகத்தின் விலை ரூ. 120/- மற்றும் அஞ்சல் தொகை ரூ. 25/-க்கு மணி ஆர்டர் அல்லது சென்னையில் பெறக்கூடிய டிமாண்ட் டிராஃப்டை, **Chitshakti Publications** என்ற பெயருக்கு அனுப்பவும்.

(Available in English under the title "PLAY OF CONSCIOUSNESS". Cost Rs. 125/- + 25/- postal charges)

சித்சக்தி பப்ளிகேஷன்ஸ்,
5, பிஷப் வாலர்ஸ் அவின்யு (கிழக்கு),
சென்னை - 600 004.
தொலைபேசி எண் : 4993371, 4993470

மூவேந்தர்

மூன்று தலைமுறைகள் பற்றிய கதையென்பதால் இந்தப் பெயர்! கதையென்னவோ இந்த நூற்றாண்டில்தான் நடக்கிறது. கணவன் மனைவியிடையே பிணக்கும் பின்னர் அது தீர்ந்து மங்களம் பாடுவதுமாக சராசரிக் கதை. மணிவண்ணன் இதிலும் சேர்த்து வைக்கும் பாத்திரம். தமாஷ் நிறைய உண்டு. கொங்கு



''சும்மா வெள்ளச்சட்டை போட்டுட்டா ஆச்சா... கட்சி நிதிக்குக் கால் ரூபா வசூல் பண்ண முடியுமா உன்னால..?''



''இவங்க ரெண்டு பேரும் சும்மா போட்டோக்காக சிரிக்கறாங்க! மத்த நேரமெல்லாம் என் மூஞ்சி மாதிரிதான் இருக்கும் இவங்களது....''



பொங்கலுக்கு வந்தவை: ஒரு பார்வை!

தேசக் கதைக்கு ராஜஸ்தானில் பாடல் காட்சி என்பதும் தமாஷ்தான்! இயக்குனர் சி.ஜி. கராஜ், சந்தர்ஜியின் சிஷ்யர்! மூவேந்தர் அவருடைய முதல் முயற்சி.

உதவிக்கு வரலாமா

கார்த்திக் மூன்று வேடங்களில் நடிக்கிறார்: பிச்சுமணி ஹுசைன், ஜேம்ஸ். சங்கர், சலீம் சைமன் ஞாபகம் வந்தால் அது நம் தப்பு! கோகுல கிருஷ்ணனுக்கும் இதில் மூன்று வேடங்கள்: திரைக் கதையாளர், வசனகர்த்தா, இயக்குனர்! தேவயானிக்கு அப்பாவாக இதிலும் மணி வண்ணன்; மம்மி; கோவை சரளா!

பொன் மனம்

குடும்பக் கதையிலும் வடிகட்டின குடும்பக் கதை இது! ஆறு குடும்பங்கள் குடியிருக்கும் பிளாக்கில் நடக்கிறது. ஸ்டில்லில் தெரியும் செழுமையைப் பார்த்து ஏமாந்துவிடக் கூடாது! பிரபுவினுடையது சோற்றுக்கு லாட்டரி யடிக்கும் குடும்பம்! மறுபடியும் மணிவண்ணன்! இதில் வீட்டு உரிமையாளராக... வாடகை வசூலுக்கு வந்துவிட்டு பிரபுவின் கஷ்டம் பார்த்து கைச் செலவுக்குத் தந்து விட்டுப் போகும் இதிகாச இரக்கக்காரர்!

மறுமலர்ச்சி

மலையாள படங்களில் உச்சத்தில் இருக்கும் 'காமெடியன்' கலாமணிக்கு இதில் 'தமிழ் அறிமுகம்'. மம்மூட்டி 'விதியே'யென்று தேவயானிக்குத் தாலி கட்டிவிட்டு தத்தளிக்கும் கதாபாத்திரமாக வருகிறார். கிராமத்துச் சூழ்நிலையில் கதை. ●

— ஐம்பு

மாமன் வழியில்...

மருமகன் ராஜ் தாக்கரேவுக்கு, மாமா பாலா சாஹேப்தான் குரு. நடை, உடை பாவனையில் மட்டுமில்லாமல், அவரைப் போலவே கார்ட்டூனிஸ்டும் கூட! இவரது அபிமான கேரக்டர்கள்..? வேறு யார்? சகன் புஜ்பலும், சரத்பவாரும்தான்! விட்டால் அவர்களையே ஏலம் விட்டு விடுவார்; அது முடியாததால் அவர்களைக் கார்ட்டூனாக்கி ஏலம் விடப் போகிறார். ஜனவரி 23-ம் தேதி பால்தாக்கரேயின் பிறந்த நாளன்று, இவர் கார்ட்டூனாக வரைந்த படங்களை எல்லாம் கண்காட்சியாக்கி, ஏலம் நடத்தி, கிடைப்பதைத் தர்மகாரியங்களுக்குப் பயன்படுத்தப் போகிறார். தேர்தல் நெருங்க நெருங்க, எல்லோருக்கும் காருண்யம் அதிகரிப்பது இயற்கைதானே?

தேர்தல் நெருங்குவதால் கருணை பிறக்கிறதா?

மோதப் போகிறார் மேதா!


"Environmentalist" மேதா பட்கர், பிரமோத் மகாஜனுக்கு (பி.ஜே.பி.) எதிராகப் பிரசாரம் செய்யப் போகிறாராம்! ரத்னகிரி தாலுகாவில் 'என்ரான்' காலூன்ற இவர் அனுமதி தந்ததைக் கண்டனம் செய்யப் போகிறாராம்! மற்றொரு பிரதான, 'என்ரான் எதிரி'யான கல்பா பிரஹ்மே, இவரை எதிர்த்துப் போட்டியிடத் தூண்டப்படுகிறார். பழைய பி.ஜே.பி. எம்.எல்.ஏ வான வாமன் ராவ் பராப் வேறு, மஹாஜனின் தான்தோன்றித்தனத்தைப் பற்றி பிட்டுப் பிட்டு வைக்கப் போகிறாராம்! என்ன செய்து என்ன பயன்? கட்சி மேலிடத்தின் ஆதரவு மட்டுமின்றி தாக்கரேயின் ஆசியும் அல்லவா மஹாஜனுக்குக் கைகொடுக்கிறது? ஆனானப்பட்ட குருதாஸ் காமத்தையே (காங்) சென்ற முறை ஒன்றரை லட்சம் வோட்டுக்களால் தோற்கடித்தவர், இந்த முறை அதிக அளவில் வெற்றி பெறுவார் என்று தானே அரசியல் பட்சி சொல்கிறது!

அந்நியப் பிரச்னைகள்

தன் வாயால் தானே கெடும் நுணல்கள் லிஸ்டில், லேட்டஸ்ட் சேர்க்கை வி.என். காட்கில்! 'எங்கள் சோனியாவை நீங்கள் அந்நியர் என்றால், உங்கள் அத்வானியும், ஏன்... குஜ்ராலும் கூட அந்நியர்தான்' என்று சொன்னாலும் சொன்னார், பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டுவிட்டார் பிரமோத் மஹாஜன்! 'அத்வானியும் குஜ்ராலும் பிறந்த மண் இன்று பாகிஸ்தானுக்குச் சொந்தமாக இருக்கலாம்; ஆனால் அவர்கள் பிறந்த போது 'பிரிவினை' என்ற சொல்லே பிறந்திருக்கவில்லை! அவர்களும், திருமணமாகி 14 ஆண்டுகள் கழித்து இந்தியக் குடியுரிமையைப் பற்றி யோசித்திருக்கும் சோனியாவும் ஒன்றாவார்களா?' என்று வினாசியிருக்கிறார். 'இந்திய மண்ணை மீண்டும் அந்நியரிடம் ஒப்படைப்பதா?' என்று தேர்தல் ராகத்தில் புதிய பல்லவியைப் பாட ஆரம்பித்திருக்கிறார்.

குழப்பங்கள் பலவிதம்

தேர்தலைக் காட்டிலும், தேர்தல் பிரசார குழப்பங்கள் அதிகமாக பயமுறுத்துகின்றன. தகுதியான வேட்பாளர் இல்லை என்றால் வோட்டே போடாதீர்கள் என்கிறார் கைர்நார். வோட்டுப் போடாதவர்களின் ரேஷன் கார்டுகளையே பறிமுதல் செய்துவிட வேண்டும் என சுதந்தரப் போராட்ட வீராங்கனையும்



• பிஜா



• பிரமோத் மகாஜன்




• மேத்தா பட்கர்

காங்கிரஸ்வாதியுமான உஷா மேத்தா முழங்குகிறார். மக்களைக் குழப்புவது போதாதென்று அரசியல்வாதிகள் தாங்களே குழம்பிக் கிடக்கின்றனர். 'எலெக்ஷன் கோடை' சாக்காக வைத்து, அரசு வாகனங்கள், டெலிஃபோன் போன்ற வசதிகளை வேட்பாளர்கள் பயன்படுத்தலாகாது என அதிகாரிகள் ஒருபுறம் எச்சரித்து வருகின்றனர்! அரசியல்வாதிகளோ செய்வதறியாது திகைக்கின்றனர்.

மேதை அல்ல; பேதை!

ஹிந்துஜா காலேஜில், இரண்டாம் வருட பி.காம்., படிக்கும் இருபது வயது மினு 'சகுந்தலா தேவி'க்கு அண்ணன்! அடிக்கடி டீ.வி. ரேடியோ நிகழ்ச்சிகளில் தோன்றி, இரண்டு ஆறு டிஜிட் நம்பர்களைப் பெருக்கி, நிமிட நேரத்தில் விடை சொல்வான்; ஏழு டிஜிட் நம்பர்களின் ஸ்கொயர், ஸ்கொயர் ரூட், 10,000 வரையில் வாய்பாடு, ஒரே சமயத்தில் 115 வெவ்வேறு ஃபோன் நம்பர்கள்... இப்படி இவன் மூளையில் பதியும் எண்கள் அலாதி! இத்தனைக்கும் 9-வது படிக்கும் வரையில், 9வது வாய்பாடே தகராறு! பள்ளி இறுதியில் 71%. முதலாண்டு பி.காமில் 43%தான்! கணக்கென்றால் ஆமணக்கு எண்ணெய்யாய்க் குமட்டலெடுத்தவனுக்குத் திடீரென்று எண்கள் மீது ஒரு ஈடுபாடு வந்து, தினமும் ஒரு மணி நேரம் வாய்பாடுகளை மனனம் செய்ய ஆரம்பித்தான். வழியில் 'பஸ்'ஸைக் கண்டால், அதன் ரெஜிஸ்ட்ரேஷன் நம்பரின் முதலிரண்டு எண்களைக் கடைசி இரண்டுடன் பெருக்குவதில் ஆரம்பித்தவன்... இன்று நிகழ்ச்சிகள் கொடுக்கும் அளவுக்கு முன்னேறி விட்டான். இவனை 'மேதை'யாகக் கணித வல்லுநர்கள் ஒப்புக் கொள்ளாவிடினும், இவனுக்கு எண்களிடம் இருக்கும் 'போதை'யை ரசிக்கின்றனர்!

• மருமகன் வரைந்த கார்டூன்



'பாஸ்' இருந்தும் "ஃபெயிலானவர்"!

மும்பையில் அவரவர் ரயிலைப் பிடிக்கும் கஷ்டத்தைக் கேளுங்கள்; கண்ணீர்க் காவியமே வடிப்பார்கள். ஆனாலும்... இது கொஞ்சம் அதிகம். விக்ரோலியில் வசிக்கும் ஒருவர், தினமும் ரயிலைப் பிடிக்க முடியாமல், ஆறரை ரூபாய் செலவழித்து, பஸ் டிக்கெட் எடுத்து, CST வரை செல்கிறார். இதிலென்ன அதிசயம் என்கிறீர்களா? அவர் ஒரு ரயில்வே அதிகாரி! அவரிடம் இலவச முதல் வகுப்பு 'பாஸ்' வேறு உண்டு!

மும்பையிலிருந்து : **ஜெயஸ்ரீராஜ்**

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

குறையொன்றுமில்லை

எம்பார் சுவாமி கை தூக்கியதற்குக் காரணம் சொன்னார்:

"இத்தனை காலமாக உபன்யாஸத்துக்கு வர மறுத்த ஒருத்தர் திடீரென்று வர முடிவு செய்தாரானால் அதற்குக் காரணம், 'வர வேண்டும்' என்கிற புத்தியை அவருக்குக் கொடுத்த பகவான்தான்..." என்றார்.

பகவான்! சாஸ்திர ரீதியாகப் பார்த்தோமானால் ஒவ்வொரு கர்மாவிலேயும் ஐந்தாவது காரணமாக இருக்கிறான். இந்த உபன்யாஸமாகிற காரியத்தையே எடுத்துக் கொள்வோம். இதற்கு ஐந்து காரணங்கள் இருக்கின்றன. அந்த ஐந்து காரணங்களும் கூடாவிட்டால் இது நடக்காது.

முதல் காரணம்: சரீரம். இங்கே உபன்யாஸம் சொல்கிறவர், கேட்க வந்திருக்கிற பாகவதோத்தமர்களின் சரீரம் இவ்விடம் வரவேண்டுமல்லவா...?

இரண்டாவது காரணம்: வாக்கு என்கிற இந்த்ரியம். அது வேலை செய்ய வேண்டும். அதே போல் கேட்கிற திறனும் வேலை செய்ய வேண்டும். இந்த இந்த்ரியங்கள் இரண்டாவது காரணம்.

இந்த்ரியங்கள் தாமாகவே இயங்குமா...? இயங்காது! அவற்றை ஏவக்கூடிய மனஸ் என்பது மூன்றாவது காரணம்.

மனமும் தானே செயல்படாது. அதை ஏவக்கூடிய ஜீவாத்மா என்கிற-நம்முன்னே இருக்கக் கூடிய நாமாகிற ஆத்மா... நான்காவது காரணம்.

அந்த ஜீவாத்மாவையும் ஏவக்கூடிய அந்தராத்மா இருக்கிறது- அதுவே பரமாத்மா. அவன் சங்கல்ப்பித்தால்தான் எதுவுமே நடக்கும் என்பதால் அவனே ஐந்தாவது காரணம்.

தேர்த்தட்டில் அமர்ந்திருந்த அர்ஜுனனைப் பார்த்து பரமாத்மா சொன்னான்.

"இப்படிச் சோர்ந்து உட்கார்ந்திருக்கிறாயே! நீ இவ்வாறு இருப்பதால் யுத்தம் நின்று போய்விடும் என்று நினைக்கிறாயா...? இவர்கள் (கௌரவர்கள்) அத்தனை பேரையும் அழிக்க நான் சங்கல்பித்திருக்கிறேனடா! நீ இச் செயலுக்கு வெறும் நிமித்தம்தான். நான்தான் சங்கல்பித்தேன் இவர்களை அழிக்க... அன்று அரக்கு மாளிகையில் இவர்கள் உங்களை அழிக்க நினைத்தார்களே... முடிந்ததா?... முடியவில்லையே...! காரணம் என்ன...? நான் சங்கல்ப்பிக்கவில்லையே! இன்று சங்கல்பித்திருக்கிறேன்- கௌரவர்களுக்கு அழிவு என்பதை..."

பகவானே இப்படிச் சொன்னதனாலே, பகவத் சங்கல்பம் இருந்தால்தான் நாம் ஒரு காரியத்தை நிறைவேற்ற முடியும் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதைத்தான் சாஸ்திரம் எடுத்துச் சொல்கிறது.

ஆனால் சொல்கிறபோது புரிகிற மாதிரி இருக்கிற விஷயம்; கேட்கிறபோது புரிகிற மாதிரி உள்ள விஷயம்... இந்த இடத்தைவிட்டு எழுந்து போய்விட்டோமானால் மறந்து போகிறது. எல்லாவற்றையுமே நாம்தான் பண்ணுகிறோம் என்கிற எண்ணம் திரும்பவும் வந்துவிடுகிறது.

இந்த உலகம் இருக்கிறதே... அது மாயா ஜகன் மோகினி!

இது நம் பக்கத்திலேயே இருந்து கொண்டு சித்திரவதை செய்கிறது. சத் விஷயங்களை நினைக்க விடாமல் பண்ணுகிறது.

புராண வைராக்கியம், ஸ்மசான வைராக்கியம் என்று சொல்லுவார்கள்.


புராண வைராக்கியம் என்றால் உபன்யாஸம் முடிந்து ஒன்பதேகால் மணிக்கு இருக்கிற வைராக்கியம்.... சொல்கிறவர்களுக்கும் சரி; கேட்கிறவர்களுக்கும் சரி... அந்த வைராக்கியமே வாழ்க்கையிலே கடைசி வரைக்கும் இருந்ததானால் ஏன் கஷ்டப்படுகிறார்கள்?! ஆனால் அப்படி இருப்பது இல்லையே! இங்கிருந்து போனவுடனே தூக்கம்! விடியற்காலை நாம் எழுந்திருந்து பார்த்தோமானால், கேட்டதற்கும் நடப்பதற்கும் சம்பந்தமேயில்லாமல் வாழ்க்கை ஓடுகிறது.

ஸ்மசானத்திலே, சிதையிலே சரீரத்தை வைத்து ஹோமாதிகளையெல்லாம் பண்ணி, பிரதக்ஷிணமாக வரும்போது நினைப்பதுண்டு.

ஐயோ! எப்படிப்பட்ட மஹான் இவர்; என்ன வாக்கு...? எப்பேர்ப்பட்ட காரியங்களெல்லாம் பண்ணினார். இவருக்கே இந்த கதி ஏற்பட்டுப் போச்சே...? நம் கதையெல்லாம் என்ன ஆகுமோ... என்று வைராக்கியம் வருமாம்.

ஸ்மசானத்துக்குப் போனால் ஏதாவது நீர் நிலையிலே ஸ்நானம் பண்ணிவிட்டு வீட்டுக்கு வரவேண்டும் என்பது சாஸ்திரம். அப்படித் தலை முழுகும் போது, ஸ்மசானத்திலே ஏற்பட்ட வைராக்கியத்துக்கும் சேர்த்து ஒரு முழுக்கு! மறுபடியும் வீட்டுக்கு வந்து பழையபடி வாழ்க்கை...! இதைத்தான் ஸ்மசான வைராக்கியம் என்பது!

பரமாத்மாதான் எல்லாவற்றையும் செயல்படுத்துகிறான், அவன்தான் அனைத்துக்கும் காரணம், அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று தெரிந்து கொண்டால் நம் மனத்திலே வியசனம் ஏற்படுமோ...? மனம் இப்படியெல்லாம் எகிரி



எதிரிக் குதிப்பதற்கு அவகாசம் கிடைக்குமா...? கிடைக்கவே கிடைக்காது. அவன் பேரிலே பூரண நம்பிக்கை கொள்ள வேண்டும்– மற்ற விஷயங்களைப் பற்றக் கூடாது!

காஞ்சிபுரத்துக்கு, பிரும்மோத்ஸவத்துக்குப் போனவர்கள் பார்த்திருக்கலாம், காட்சியை! பரமாத்மா கருடாருடனாக இருப்பான். உத்ஸவத்தை சேவிக்க யாத்ரிகர் வருவார். பெரிய மூட்டையுடன் வருவார் அவர். ஏற்கெனவே சேவித்து முடித்த ஒருவரிடம் தன் மூட்டையைக் கொடுத்துவிட்டு, "இதைப் பார்த்துக் கொள்; பெருமாளை சேவித்து விட்டு வந்துவிடுகிறேன்..." என்று புறப்பட்டுப் போய்விடுவார். போகிறவர், வேத பாராயண கோஷ்டி பின்னால் சுற்றுவார், சந்நதியெல்லாம் சென்று பார்த்து அவர் திரும்பிவர நான்கு மணி நேரம் ஆகிவிடும்!

மூட்டையை வாங்கிக் கொண்டவர் பாடு திண்டாட்டம்! ஏனென்றால் அதை ரக்ஷிக்க வேண்டும் என்கிற விசாரம் அவருடையதாகி விடுகிறது! மூட்டையை இறக்கி வைத்தவர் நிர்ப்பயமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறார்!

–இப்படித்தான்; எல்லாவற்றையும் நாம் பிடித்து வைத்துக் கொண்டோமானால் அவஸ்தை! எதுவுமே என்னுடையதில்லை என்று அவனிடம் ஒப்படைத்துவிட்டோமானால் நன்றாக மார் மேல் கையை வைத்துக் கொண்டு நிர்ப்பயமாய்த் தூங்கலாம்.



"புலம்பித் தீர்க்கும் அளவுக்கு உங்களுக்கு என்ன சோதனை வந்துவிட்டது...?"

"ஏற்கனவே நான் புலிகளின் ஆதரவாளன் என்ற பேச்சு அடிபடுது. போதாக் குறைக்கு தேர்தலில் 'புலி' சின்னம் வேறு கொடுத்துத் தொலைச்சுட்டாங்க!" – விக

நிர்ப்பரோ, நிர்ப்பயோஸ்மி! பளுவுமில்லை... பயமும் இல்லை! அவன் சர்வக்ஞன் என்பதை உணர்ந்தாலன்றி இந்த நிலை கைகூடாது. 'நீயே ரக்ஷகன்; நீ ரக்ஷிக்கா விட்டால் என்னை வேறு யார் ரக்ஷிப்பார்கள்...? நீ என்னை ரக்ஷித்துவிட்டால் வேறு யார் எனக்கு வேண்டும்...?" என்று அவனை அடி பணிய வேண்டும். திருமழிசை ஆழ்வார் சொல்கிறார் பாருங்கள்:

'நீ என்னையன்றி இல்லை கண்டாய் நாரணனே...நான் உன்னையன்றி இல்லை!'

'புகலொன்றில்லா அடியேன் நின் அடிகீழ் அமர்ந்து புகுந்தேனே...' என்று திருவேங்கடமுடையானிடத்திலே நம்மாழ்வார் தஞ்சம் புகுகிறார்.

பகவான் கீதையிலே சொல்கிறான்: "வாஸுதேவன்தான் எல்லாம் என்று சொல்லக்கூடிய ஒருவன் கிடைப்பதே அரிது..." என்கிறான். "அப்படியொருத்தன் கிடைத்தால் நான் எளிதில் அவனை விட்டு விடுவேனா...?" என்று கேட்கிறான். அத்தகைய ஒருவரை என்ன சொல்லி வர்ணிக்கிறான்...? "அடடா என்ன உதார ஹ்ருதயம்?!" என்று சிலாகித்து வர்ணிக்கிறான்.

சாதாரணமாக நாம் உலகத்திலே யாரை உதார ஹ்ருதயமுடையவர் என்று சொல்கிறோம்...? வள்ளன்மை மிக்கவரைத்தான் அவ்வாறு சொல்கிறோம். பகவான் இதை கீதையிலே அப்படியே மாற்றிவிட்டார்! தன்னிடத்திலே வந்து கைநீட்டுகிறவர்களைப் பார்த்து, 'அடடா! என்ன உதார ஹ்ருதயம்' என்று கொண்டாடுகிறான்!

சர்வமும் அவன் என்று உணர்ந்து, அவனிடத்திலே கை நீட்டுபவர்களைக் கொண்டாடுகிறான் பகவான். அந்த பக்தர்கள் இல்லையென்றால் பகவானுக்குப் பெருமை ஏது...?'


அயோத்தி மாநகரத்தை கம்பர் வர்ணிக்கிறபோது, 'அங்கே உண்மைக்கே மதிப்பில்லை...' என்கிறார். ஏனென்றால், எல்லோருமே சத்யசந்தர்கள்! 'பலத்தைக் காட்டவே இடமில்லை...' என்கிறார். ஏனென்றால், எல்லோருமே பலசாலிகள். அதே மாதிரி, வித்வத்தைக் காட்ட இடமேயில்லை... ஏனென்றால் எல்லோருமே கல்வி-கேள்விகளில் சிறந்தவர்களாய் இருக்கிறார்கள்!

ஆகையினாலே, பகவானுக்குப் பெருமை பக்தர்களினாலேதான். அவனை ஒத்தாரும் மிக்காரும் இந்த உலகிலே இல்லை என்று உணர்ந்து, அவனை அடிபணியும் பக்தர்களை அவன் ரக்ஷிக்கிறான்.

ஒருத்தர் பெருமாள் படத்துக்கு அர்ச்சனை பண்ணிக் கொண்டிருந்தார். "ஓம் கேசவாய நம: ஓம் நாராயணாய நம: ஓம் மாதவாய நம:" என்று நாமங்கள் சொல்வதைக் கேட்டு பகவான் ஆனந்தித்துக் கொண்டிருந்தார். திடீரென்று நடுவிலே 'ஓம் தாரித்ராய

மட்டைத் தேங்காய் வேண்டுதல்!

எந்தக் கோயிலிலாவது தேங்காயை நேர்ந்து கொள்ள முடியுமா? சென்னை-வளசரவாக்கத்திலுள்ள ஸ்ரீலக்ஷ்மி விநாயகர் கோயிலில் முடியும். எந்தக் காரியமாவது உங்களுக்கு நிறைவேற வேண்டுமா? உரிக்கப்படாத மட்டைத் தேங்காய் ஒன்றை வாங்கிக் கொண்டு செல்லுங்கள். பத்து ரூபாய் கட்டினால் ஒரு டோக்கன் தருவார்கள். அந்த டோக்கன் நெம்பரைத் தேங்காயின் மேலும் எழுதிவிடுவார்கள். அதை எடுத்துச் சென்றால் விநாயகர் கோயிலில் உள்ள ஆஞ்சநேயர் சந்நதியில் வைத்துத் தருவார்கள். அதைக் கொண்டு போய் இதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ள ஓர் இடத்தில் கட்டித் தொங்க விட்டு விடுங்கள்!



ஒருவாரம் கழித்து மீண்டும் போய் டோக்கனைக் கொடுத்தால், நீங்கள் கட்டிய அதே தேங்காயை உரித்து, அர்ச்சனை செய்து தருவார்கள். இந்த இடைப்பட்ட காலத்துக்குள் உங்கள் வேண்டுதல் நிறைவேறியிருக்கும்!

"இது சாத்தியமா?" என்று சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்ட போது, "இப்படி தேங்காய் நேர்ந்து கொண்டவர்கள், ஒரு லாட்டரி சீட்டை வாங்கிக் கொண்டு, அதற்கு முதற்பரிசு விழ வேண்டும் என்று வேண்டிக் கொண்டால் அது நடப்பது சாத்தியமா என்ன? நியாயமான வேண்டுதல்கள்தான் நிறைவேறும்!" என்கிறார்கள்.

படம், தகவல்: பிரபு சங்கர்

நம:' என்று ஒரு நாமாவளி வந்தது!

அதைக் கேட்டவுடனே அர்ச்சனை பண்ணியவரின் கையைப் பிடித்துக் கொண்டு விட்டான் பகவான்.

"எனக்கெங்கேயாவது தாரித்ரியம் உண்டா? ஏழைமை உண்டா...? என்னைப் பார்த்து தாரித்ராய நம: என்று எப்படி சொல்லலாம்...?" - பகவான் பக்தனிடம் கேட்டான்.

"இப்போது நீர் இப்படி அர்ச்சனை பண்ணுகிறீரே என்று எல்லோருமே பண்ண ஆரம்பித்து விடுவார்கள்! இந்த தரித்திர சப்தத்தை நான் எத்தனை காலம் கேட்பது..." என்று கவலைப்பட்டான். தரித்திர சப்தத்தைக் கேட்க பகவானுக்கே பிடிக்கவில்லை! அவ்வளவு கொடுமையானது தாரித்ரியம்.

ஊர் மத்தியில் பிச்சையெடுத்தபடி போனானாம் ஒருவன். அவனைக் கண்டதுமே எல்லோரும் கதவைச் சாத்திக் கொண்டார்களாம். இவன் மிகவும் சோர்ந்துபோய், ஊருக்கு வெளியிலே ஒரு ஸ்மசானத்திலே போய் உட்கார்ந்து கொண்டானாம். அது ஸ்மசானம் என்பது அவனுக்குத் தெரியவில்லை. அந்தச் சமயம் பார்த்து ஒரு சிதை எரிக்க ஏற்பாடாகிறது. பார்த்தான் இவன்... அந்த சவத்திடம் போய் "ஒரு விசனமில்லாமல் படுத்துண்டிருக்கியே... ஏ தோழனே! ஒரு க்ஷணம் எழுந்து இந்த தாரித்ரியத்தை நீ வாங்கிக் கொள்; நீ படுத்திருக்கிற இடத்திலே நான் படுத்துக் கொள்கிறேன்..." என்றானாம். அந்த சவம் பேசவேயில்லை; பதிலே சொல்லவில்லை...!

ஏனடா பேசவில்லை என்று கேட்டால், "ஏழைமையைக் காட்டிலும் புறப்பட்டுப் போய்விடுவதே மேல்... இவனிடம் பேசினோமானால் நமக்கு நடக்க வேண்டிய கடைசி காரியம் கூட சரியாக நடக்காது...' என்று வாயை மூடி இருந்து விட்டதாம் சவம்! அப்படிக்கு சவமே கூட பரிகசிக்கும்படியான நிலை தாரித்ரியம். யார்தான் அதை விரும்புவார்கள்?!

அதைச் சொல்லி அர்ச்சனை பண்ணவும் பகவானுக்கே கோபம் வந்து விட்டது.

"யாரைப் பார்த்து தாரித்ராய நம: என்றீர்...?"- கேட்டான்.

பக்தர் வெறுமனே விடவில்லை... இடுப்பில் துணியை இறுக்கிக் கட்டிக் கொண்டு வாக்குவாதத்தில் இறங்கினார்:

"அர்ச்சனைத் தட்டைப் பிடுங்கி வைத்துக் கொண்டால் உனக்கு தாரித்ரியம் இல்லாமல் போய்விடுமா...? இருக்கிறதே..." என்று பதில் சொன்னார்....!

(தொடரும்)





1998 ஜனவரி 25
ஈசுவர தை 12
மலர் : 56
இதழ் : 26

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



பட்டை தீட்டிய பாரத ரத்தினம்!

கடந்த நவம்பரில் கணவரை இழந்த துயரத்தில் ஆழ்ந்து கிடந்த எம்.எஸ். சுப்புலட்சுமியை சகோதர வாஞ்சையுடன் தேற்றினார் செம்மங்குடி சீனிவாச அய்யர்:

"நீ தேசத்தின் சொத்து... அழாதே! கலங்காதே..." என்று தைரியமூட்டினார்.

இன்று, அவர் சொற்களுக்குச் செயல்வடிவம் தருவதுபோல், நாட்டின் மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா எம்.எஸ்ஸைத் தேடி வந்திருக்கிறது.

இந்த நற்செய்தி கேட்டு,

இசையுலகம் ஆனந்தக் களிப்பில் அமிழ்ந்திருக்கிறது;

ரசிகர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கிறார்கள்;

பத்திரிகையுலகம் பிடிபடாத பெருமையுடன் பூரிக்கிறது;

சமுதாயப் பணிகளில் ஈடுபடுவோர் சந்தோஷத்தில் திக்குமுக்காடுகிறார்கள்;

பாரதமே போற்றி மகிழ்கிறது;

தமிழகம் தனிப்பெருமையுடன் நெஞ்சு நிமிர்த்துகிறது!

இசையுலகை மட்டுமின்றி இந்தியாவையே உயர்நிலைக்கு அழைத்துச் சென்றவர் எம்.எஸ். சுப்புலட்சுமி. அதன் காரணமாகவே 'பாரத ரத்னா' அவருக்கு வழங்கப்படுகிறது. அவரது பணிகளும் பெருமைகளும் நாடறிந்தவை என்றாலும் அவற்றைப் பட்டியலிட்டு நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய நேரம் இது :

நமது பாரம்பரிய இசையின் மிக உயர்ந்த இலக்கணங்களையும் இலக்குகளையும் கட்டிக் காத்து வருபவர் எம்.எஸ். சங்கீதம் என்பது அவருக்கு வெறும் மேடைக் கலை அல்ல... ஆத்ம சமர்ப்பணம்...


கச்சேரி என்பது ரசிகர்களை மகிழ்விக்கக் கிடைத்த வாய்ப்பு அல்ல; அவர்களை உயர்த்த, வலிமை பெறச் செய்யத் தரப்பட்ட பொறுப்பு...


ஊதியம் என்பது சொந்த சௌகரியங்களைப் பெருக்கிக் கொள்ளக் கிட்டும் செல்வம் அல்ல.... அன்பர் பணிக்கு அர்ப்பணமாக வேண்டிய ஸ்ரீதனம்.

இந்த பிரமிப்பூட்டும் கொள்கைகளை ஒருசேர ஏற்கக் கூடியவர்கள் அரிது. எம்.எஸ். இவற்றை ஒரு பூ மலர்கிற சௌலப்பியத்துடன் வாழ்க்கை முறையாகவே ஆக்கிக் கொண்டார். இந்த குணச் சிறப்பினாலே காந்திஜி, ராஜாஜி, நேருஜி போன்ற தேசத் தலைவர்களின் நன்மதிப்பையும் காஞ்சி முனிவர், சத்ய சாயி பாபா போன்ற ஞானிகளின் பூரண ஆசிகளையும் பெற்றார்.

" 'ஹரிதும் ஹரோ' பாடலை வேறு நபர் பாடக் கேட்பதைக் காட்டிலும் எம்.எஸ். வெறுமே உச்சரிக்கக் கேட்கவே விரும்புகிறேன்..." என்றார் மகாத்மா.

ஐ.நா. சபை இசை நிகழ்ச்சிக்கென, உலக அமைதி வேண்டுகிற ஒரு பிரத்யேகப் பாடலை





எம்.எஸ். பாடுவதற்காக இயற்றித் தந்தார் காஞ்சி முனிவர்.

இப்படிப்பட்ட பெருமைகள் மட்டுமின்றி, விருதுகளும் பட்டங்களும் வந்து குவிந்தாலும் அத்தனையையும் தாங்கிக் கொண்டு, காட்சிக்கு எளியவராய், சுலபத்தில் அணுகக் கூடியவராய், அடக்கமே உருவானவராய் வாழ்ந்து வருபவர் எம்.எஸ்.

எம்.எஸ். என்கிற பாரத ரத்தினத்தைப் பட்டை தீட்டி ஒளிரச் செய்தவர் அவருடைய கணவர் சதாசிவம்தான் என்பதையும் இந்த நேரத்தில் நாடு நினைவு கூர்கிறது. நண்பனாய், ஆசானாய், வழி காட்டியாய் விளங்கிய கணவர், தமது தேர்ந்த ரசனையாலும், பரந்த நோக்கினாலும், கூர்ந்த அறிவினாலும் எம்.எஸ். என்கிற பாடகியை எம்.எஸ். என்கிற சகாப்தமாக உயரச் செய்தவர். வழக்கம்போல் அவருடைய பாதங்களுக்கே தாம் பெறும் விருதினைக் காணிக்கையாக்குவார் எம்.எஸ். அந்தப் பெருமைக்கும் உயர்வுக்கும் முற்றிலும் உரியவர் சதாசிவம் என்பதை நெகிழ்ச்சியோடு பதிவு செய்கிறோம்.

நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் அறியப்படும் பெயர் எம்.எஸ். ஒவ்வோர் இந்தியனும்



அவருக்கு வாய்த்துள்ள இந்த கௌரவத்தை எண்ணி பூரிக்கவே செய்கிறான்... எனினும் கல்கி குடும்பத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் வாசகர்களுக்கும் இந்தப் பூரிப்பு மும்மடங்காகப் பெருக்கெடுக்கிறது. காரணம், கல்கி வார இதழுடன் நெருங்கிய தொடர்புடைய மூன்று நபர்கள் 'பாரத ரத்னா'வால் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள்: ஏற்கெனவே இவ்விருதைப் பெற்ற மூதறிஞர் ராஜாஜி, கல்கி இதழின் வழிகாட்டி. இசை அரசி எம்.எஸ்ஸும் அவரது கணவர் சதாசிவமும் இவ்விதழின் ஸ்தாபகர்கள். தங்கள் மூலதனத்தாலும் உழைப்பாலும் கல்கி இதழை மரியாதைக்குரிய நிலைக்கு உயர்த்தியவர்கள்.

இந்த மூவரும் காட்டியிருக்கிற வழித்தடங்களில் நாம் தொடர்ந்து நடப்போம். தேச நலன் காப்பதிலும் நேர்மையைப் போற்றுவதிலும், அழகுணர்ச்சியைப் பேணுவதிலும், கலைப்பணிகளை வளர்ப்பதிலும், பொதுத் தொண்டுகளை ஊக்குவிப்பதிலும் தன்னலங் கருதாது ஈடுபடுவோம். லட்சக்கணக்கான வாசகர்களை உள்ளடக்கிய கல்கி குடும்பத்தைச் சேர்ந்த நாம் இன்று அதற்கான உறுதிமொழியை எடுத்துக் கொள்வோம்.

சோனியா: காத்திருக்கும் கொக்கு!



படம் : சௌந்தர்ராஜன்

ஜன்பத் ரோடிலிருந்து அக்பர் ரோடு வரைக்கும் அடைத்து இருக்கும் அந்த வீட்டுக்கு இரண்டு புறமும் வாசல்கள். இரண்டு பக்கமும் ஆயுதம் தாங்கிய போலீஸார்தான் எப்போதும் நிற்கிறார்கள். பறவைகள் கூட ஓய்வுக்காக அந்த வீட்டின் முகப்பு மரங்களில் இளைப்பாற இறங்குவதில்லை. காரணம், அநாவசியமாகச் சில விநாடிகள் அங்கே நின்றால் கூப்பிட்டு விசாரிக்கிறார்கள். மிக கனமான செக்யூரிட்டி.

ஆனால் இதெல்லாம் பத்து நாட்கள் முன்பு வரைதான். இன்று சோனியா காந்தியின் பால் வெள்ளை பங்களாவுக்குத் தினசரி பொது மக்கள் படையெடுக்க ஆரம்பித்து விட்டார்கள். குறிப்பாகப் பெண்கள். சோனியா இருக்கிறாரோ, இல்லையோ – அவருக்காகக் காத்திருக்கும் கூட்டம் எப்போதும் 'உஸ் உஸ்' என்று குளிரை உறிஞ்சிக் கொண்டு அக்பர் ரோடில் சோனியா வீட்டு வாசலுக்கும் காங்கிரஸ் அலுவலகத்துக்குமாக நடந்து மாய்கிறார்கள். காணாதது கண்டாற்போல முகங்களில் பேரானந்தம். எப்போதாவது அவர் தரிசனத்துக்குச் சொர்க்கவாசல் திறந்து விடப்பட்டாலோ, யுகப்பிரளயம் வந்தாற்போல அந்தப் பிராந்தியமே அமர்க்களப்படுகிறது.

"காந்தியும் நேருவும் இந்திராவும் ராஜீவும் கூடச் செய்ததை பெரிதல்ல. சோனியாவின் அரசியல் பிரவேசம் என்பது இறந்து கொண்டிருந்த காங்கிரஸை உயிர் மீட்ட அதிசயம்!" என்று எக்கச்சக்கமாக உணர்ச்சிவசப்படுகிறார் இளைஞர் காங்கிரஸின் மாநகரச் செயலாளர் ரவி நாயக்.

இத்தனைக்கும் சோனியா, வெறுமனே

பிரசாரத்துக்கு வர ஒப்புக் கொண்டிருக்கிறாரே தவிர, வேறெந்த அதிரடி முடிவையும் அறிவிக்கவில்லை!

"அவரது சொற்களைக் கவனியுங்கள். தற்சமயம் கட்சிப் பொறுப்பு எதுவும் ஏற்க எண்ணமில்லை என்று சொல்லியிருக்கிறார். தற்சமயம் என்பதற்கு எலெக்ஷன் வரை என்று பொருள்" என்று பொழிவுரை தந்தார் சோமன் ராய். இவரும் இளைஞர் காங்கிரஸ்காரர்.

"இது, சரியான நேரத்தில் அவர் எடுத்த மிகச் சரியான முடிவு. நேரு குடும்பத்தால்தான் இந்தக் கட்சி கட்டிக் காக்கப்படும் என்பது மறுபடி ஒருமுறை நிரூபணமாகி இருக்கிறது!" என்கிறார் மாதவராவ் சிந்தியா.

நாம் சந்தித்துக் கேட்டபோது, "சோனியாஜியின் வரவு காங்கிரஸுக்குக் கூடுதலாக சீட்களைப் பெற்றுத் தரும். அடுத்த ஆட்சியை நாங்கள் அமைப்போம்!" என்று நிறைய யோசித்து விட்டுத் தயங்கிச் சொல்கிறார் சீதாராம் கேசரி.

"இனி கட்சியிலிருந்து யாரும் விலகிப் போக மாட்டார்கள். அதுவே பெரிய விஷயம்" என்று உளமார சந்தோஷப்படுகிறார் தாரிக் அன்வர்.

ஆனால், ஒன்றைக் கவனிக்க வேண்டும். சோனியாவின் இந்த அதிரடி முடிவுக்கு மூலகாரண புருஷர்களான, அவரது தீவிர ஆதரவாளர்களான அர்ஜுன் சிங்கோ, ஆர். கே. தவானோ, கருணாகரனோ, இதுதொடர்பாக வாய் திறக்கவே இல்லை! அவர்களுக்குத் தெரியும், சோனியாவின் சாணக்கியக் கணக்கு பற்றி.

"சோனியாவுக்குப் பதவி ஆசை இல்லை என்பதெல்லாம் சுத்தப் பொய். கேசரியின் கையாலாகாத்தனத்தை மிக வெளிப்படையாக எடுத்துக் காண்பித்து விட்டு, ஒரு லேசான உந்துதலில் அவரை வெளியே தள்ளிவிட்டு, தலைமைக்கு வந்து விடுவார் பாருங்கள்! அவர் காத்திருப்பது தயக்கத்தினால் அல்ல; தருணத்தை எதிர்நோக்கித்தான்!" – ஒரு பிரபல தில்லிப் பத்திரிகையாளரிடம் 'பர்ஸனலாக'ப் பேசும்போது இப்படிக் கூறியவர் யார் என்று தெரிந்தால் வியந்து போவீர்கள்... நரசிம்மராவ்!



• மாதவராவ் சிந்தியா



• கேசரி (படம் : பாண்டியராச)



• நரசிம்மராவ்

எப்படிப் பார்த்தாலும் இன்று தேசம் முழுதும் இதே பேச்சுத்தான். "சோனியா வந்தால் எங்களுக்கு என்ன? அது ஒன்றும் பிரமாத பாதிப்பை ஏற்படுத்தாது!" என்று பி.ஜே.பியின் சுஷ்மா ஸ்வராஜ் தங்களது 'மூன்று மணி ப்ரஸ் மீட்களில்' தவறாமல் சொன்னாலும் 'க்யா ராம்யா-ரோம்?' என்று பி.ஜே.பியின் பிரசார பீரங்கிகள் இப்போதே ஆரம்பித்து விட்டதைப் பார்த்தால், அவர்களும் கொஞ்சம் மிரண்டு இருப்பது தெரியவரும்!

தில்லியின் அனைத்துக் கட்சித் தலைமை அலுவலகங்களிலும் பத்திரிகையாளர்களுடனும் அரசியல் விமர்சகர்களிடமும் பேசியதிலிருந்து நமக்குக் கிடைத்த விவரங்கள் இவைதான் : சோனியாவின் ஒரே பலம் – அவர் ராஜீவின் மனைவி என்பது. அவரது பலவீனம் – அவருக்கு அரசியல் தெரியாது; கற்றுக் கொண்டிருக்கிறார்.

"ஆனால், அவர் வாய்திறந்து பேசுவதில்லை என்பதனால் அவருக்கு என்ன தெரியும், தெரியாது என்பது எதிராளிக்குப் புதிராக இருக்கிறது; மிரள்கிறார்கள். இதுவே அவருக்குச் சாதகமான ஒரு விஷயமாக அமைந்துவிடுகிறது" என்கிறார் ஒரு பெரிய செய்தி நிறுவனத்தின் முதல் நிலை அதிகாரி ஒருவர்.

"நீங்கள் எதுவுமே செய்ய வேண்டாம். பிரசாரக் கூட்டங்களில் முகம் காட்டினால் போதும். மிச்சத்தை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று சோனியாவிடம் கேசரியின் தீவிர எதிரிகளான அர்ஜுன்சிங்கும் கருணாகரனும் சொல்லியதாகப் பேச்சு.

ஆனால் சோனியா, இவர்கள் சொல்வதையும் முழுக்க ஏற்கத் தயாராக இல்லை என்கிறது காங்கிரஸ் வட்டாரம்.

"அவரது சுற்றுப்பயணத் திட்டத்தைக் கவனித்தாலே புரியும். வடகிழக்கு மாநிலங்களிலும் கேரளா, கோவா போன்ற கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் கடலோரப் பிரதேசங்களிலும் மிக விரிவான பயணங்களுக்கு ஆயத்தமாகிக்

கொண்டிருக்கிறார். பெண்கள், சிறுபான்மை மதத்தினர் அதிகம் உள்ள பகுதிகளிலேயே அவர் கூர்மையாக கவனம் செலுத்துகிறார். பி.ஜே.பியின் 'இந்துத்வா'வுக்கு எதிராக உள்ள வோட்டுக்கள் சிதறாமல் சேகரிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார். இதன் காரணமாகவே (காங்கிரஸிலிருந்து விலகினாலும்) மேற்கு வங்கத்தில் மம்தா, உ.பி. யில் முலயம்சிங் போன்றவர்களுடன் 'தனிப் பட்ட' முறையில் தோழமை கொண்டிருக் கிறார். ஒருவேளை 'எதிர்பாராதவிதமாக' காங் கிரஸ் ஆட்சி அமைக்கும் நிலைக்கு 'உயர்ந்து' விட்டால் பிரிந்துபோன மம்தா, சித்தார்த் சங்கர் ரே போன்றவர்கள் மீண்டும் சேர வாய்ப்பு இருக்கிறது. (கேசரிதான் பிறகு வீட்டுக் குப் போய் விடுவாரே!)" என்கிறார்கள் தீவிர சோனியா விசுவாசிகள்.

தேர்தல் வரைக்கும் வாயைத் திறக்காமல் இருப்பது; தேர்தல் முடிவுகளைப் பார்த்து விட்டு - கடந்த தேர்தலில் பெற்ற 142 சீட்டு களுக்குக் குறைந்தால் கேசரியைக் காரணம் சொல்லி நகர்த்தி விடுவது; அதிகமானால், தானே காரணம் என்கிற பதாகையுடன் வந்து விடுவது - ஆனால் எப்படியும் தீவிர அரசிய லுக்கு வந்துவிடும் முடிவில்தான் அவர் இருக் கிறார் என்று உறுதியாகச் சொல்கிறார்கள் புது தில்லியிலுள்ள அரசியல் நோக்கர்கள்.

ஸ்ரீபெரும்புதூரில் சோனியாகாந்தியின் தேர்தல் பிரசாரம் அட்டகாசமாகத்தான் துவங்கியது. ஆனால்...

'நேரு குடும்பம்' என்கிற மந்திரச் சொல் லுக்கு இன்னமும் ஒரு மகிமை இருப்பதை அந்தக் கூட்டம் பளிச்சென்று விளக்கி விட்டது. கருநீலப் பச்சைப் புடைவை, அதே கலரில் மேட்சிங் ப்ளவுஸ், கூடவே, இளம் புய லாக, பிரியங்கா வர, மேடையிலிருந்து சோனியா கைகளை ஆட்டியபோது கூட்டம் ஜுர வேகத்தில் எழுச்சியைக் காட்டியது. ஆனால் பெரும்பாலானவர்கள் கார்களிலும், வேன்களிலும், பஸ்களிலும் அழைத்து வரப் பட்ட காங்கிரஸ் தொண்டர்கள், மற்றும் அவர் கள் குடும்பத்தினர்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

காலை ஒன்பது மணிக்கே வந்து விடுவார் என்று எதிர்பார்ப்புடன் கூட்டம் காத்துக் கொண்டிருக்க, பதினொன்றே முக்காலுக்கு வந்து சேர்ந்தார் சோனியா. மண்டையைப் பிளக்காவிட்டாலும், மனிதனை எரிச்சலூட் டிய மார்கழி மாதத்து வெயிலில் (பனியெல் லாம் பார்த்து ரொம்ப காலமாகிவிட்டது) இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக ஏதோ ஒரு புண்ணியவான் காங்கிரஸ்காரர் பத்திரி கையாளர்கள் உட்பட வி.ஐ.பிக்களுக்கு கதர்க் குல்லாய் கொடுத்தார்.

'அன்னை இந்திரா வடிவமே; எங்கள் அன்னை தெரஸாவே; நேரு குடும்பத்து வாரிசே; சோனியா தாயே தயாபரியே' என்று ஒரு 'சோனியா' அந்தாதியே பாடி விட்டார் தங்கபாலு. 'காங்கிரஸைக் காப்பாற்றுங்கள்; நாட்டைக் காப்பாற்றுங்கள்!' என்று மண்டி யிடாத குறையாக மனமுருகி, தமிழிலும், ஆங்கிலத்திலும் சோனியாவைக் கேட்டுக் கொண்டார். 'அம்மா' என்ற சொல் தமிழக அரசியல் சூழலில் ஒரு கேலிக்குரிய வார்த்தை யாகப் போய்விட்ட நிலையில் சோனியாவை 'அன்னை' என்றும் 'தாயே' என்றும் அழைத்து தப்பித்துக் கொண்டார்.

அந்த 'அம்மா'வுக்கு கொடுக்கப்பட்ட மரி யாதை போல், ஸ்ரீபெரும்புதூர் பழைய எம்.எல்.ஏ. வரதன் பொன்னாடை போர்த்தி விட்டு 'டபக்கென்று' அன்னையின் காலில் விழுந்தபோதுதான் பலர் முகம் சுளித்ததைப் பார்க்க நேர்ந்தது.

பனை மரங்களுக்கிடையே உள்ள பள்ளித் திடலில் அமைக்கப்பட்டிருந்த மேடை. எதிரே மக்களைப் பிரிக்கும் சவுக்குக் கட்டைத் தடுப் புகள். அதையொட்டி தலைவர்களின் 60 அடி கட் அவுட்கள்; (ராஜீவை விட உயரமான சோனியா கட் அவுட்!) டெல்லியிலிருந்து வந்த குண்டு துளைக்காத கார்கள். ரவி ஆறுமுகம் தலைமையில் மேடைக்குப் பின்புறம் காங்கிர ஸாருக்குப் போட்டியாக காக்கி சட்டைகள். "அந்த மவராசனுக்கு இம்புட்டு பாதுகாப்பு கொடுக்கலையே தம்பி" என்று உருக்கமான குரலில் நம்மிடம் சொன்னார் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த மூதாட்டி சந்திரமதி.

"இந்திராகாந்தி குடும்பத்தில் ஒருவராகத்

வோட்டா? வெத்து வேட்டா?

“தென் வாட் அபவுட் ப்ரியங்கா?” அடுத்தபடியாக இந்தக் கேள்விதான் முந்திரிக் கொட்டை மாதிரி முன்நிற்கிறது.

“தற்சமயம் அவர் உறுதியாக வர மாட்டார்!” என்றே காங்கிரஸ் கூடாரத்தில் அடித்துச் சொன்னாலும் தம் வருகைக்குப் ‘பேரலலாக’ அவரையும் கொண்டு வந்துவிட சோனியா முடிவு செய்திருப்பதாக, தில்லியிலுள்ள ஜனதா தள அலுவலகத்தில் நாம் சந்தித்த முன்னாள் காங்கிரஸ் புள்ளி ஒருவர் ரகசியமாகச் சொன்னார். ஆனால் தற்செய



தாம் மாறி விட்டதையும், ராஜீவ் காந்தி என்ற குடும்பத் தலைவருக்கு நாட்டின் மேல் இருந்த பற்றையும், இப்போது நாடு இருக்கும் சூழ்நிலையில், காங்கிரஸ் மட்டுமே நிலையான ஆட்சி தர முடியும் என்பதையும் சாதி, மத, இன வேறுபாடுகளைத் தூண்டிவிட்டு ஆட்சிக்கு வர நினைப்பவர்களைக் கண்டித்தும் பேசிய சோனியா உரைக்கு, அழகு தமிழில், அடுக்கு மொழியில் உணர்வுக் கலவையாக மொழி பெயர்த்தார் குமரி யார். ராஜீவைப் பற்றி குறிப்பிடுகையில் பல தாய்க்குலங்களின் முந்தானை கண்களுக்குச் சென்றதைப் பார்க்க முடிந்தது.

‘அன்னையின் அட்டாக்’ பி.ஜே.பி.யின் மீதுதான் என்பது பத்திரிகைகாரர்களின் உடனடி ரீ ஆக்ஷன். “நீங்க எப்படி தி.மு.க. - த.மா.கா ஆகிய கட்சிகளைத் தாக்குவாங்கன்னு எதிர்பார்க்க றீங்க... கணவருக்கு இப்பத்தான் அஞ்சலி செலுத்தி விட்டு வர்றாங்க... அடுத்த கூட்டத்திலே பாருங்க..” என்று நம்மிடம் சொன்னார் திண்டிவனம் ராமமூர்த்தி.

சிவகங்கை மாவட்ட காங்கிரஸ் தலைவர் சுப்பிரமணியம் “அடுத்த நூற்றாண்டுக்கு காங்கிரஸுக்கு ஒரு தலைவர் கிடைத்து விட்டார்!” என்று பிரியங்காவைப் புகழ்ந்து தள்ளினார்.

“காங்கிரஸுக்கு வோட்டு போடுங்கன்னு சொன்னாலே மற்ற கட்சிகளைப் புறக்கணிங்க” என்று சொல்வதாகத்தானே பொருள்” என்று வியாக்கியானமும் சொன்னார் அவர். மேலும் ஜெயின் கமிஷன் விவகாரத்தைத் தேர்தல் பிரச்னையாக்க மாட்டோம் என்று கேசரி சொன்னதை நினைவு கூர்ந்தார் அவர்.

கடந்த சில வருடங்களாக காலி மைதானங்களையே பார்த்துப் பழகி விட்ட காங்கிரஸாருக்கு ஸ்ரீபெரும்புதூர் கூட்டம் வித்தியாசமான காட்சிதான். முக்கிய நகரங்களில் சோனியா பேசினால் கூட்டம் அலை மோதும்; நம்பலாம். ஆனால் கூட்டத்தை வோட்டாக மாற்றும் ‘கை’ வண்ணம் சோனியாவுக்கு உண்டா? தமிழக காங்கிரஸ், த.மா.கா என்று பெரிதாக உடைந்து பிரிந்து விட்ட நிலையில், அடித்தளம் மிக்க திராவிடர் கட்சிகள் தோழமையாக இல்லாத சூழலில், மிச்சம் மீதி இருக்கும் காங்கிரஸாரிடையே கோஷ்டி காரணமாக ‘பாராமுகம்’ இருக்கும் யதார்த்தத்தில், தமிழகத்தை பொறுத்தவரை சோனியாவின் பிரசாரம் விழலுக்கு இறைத்த நீராக மாறி விடும் அபாயமே இருக்கிறது.

— ப்ரியன்

அட்டை வண்ணப்படம், படம்: சௌந்தர்ராஜன்



பஸ்ஸின் வேகம் குறைக்கப்பட்டால், அதில் இணைக்கப்பட்டிருக்கும் அணுகுண்டு வெடித்துவிடும். இப்படி ஒரு நிலையில் பஸ்ஸிலுள்ள பயணிகளை நாயகனும் நாயகியும் துணிச்சலும் புத்திசாலித்தனமுமாகக் காப்பாற்றுவதுதான் இரு வருடங்களுக்கு முன் வெளியான, பாக்ஸ் ஆபீஸ் சரித்திரம் படைத்த, 'ஸ்பீட்' படத்தின் மைய இழை.

இப்போது இரண்டாம் பாகம். இதில் பஸ்ஸுக்கு பதிலாகக் கப்பல். கம்ப்யூட்டர் மேதையான வில்லனின் கைவண்ணத்தால் அழிந்து கொண்டிருக்கும் கப்பலை நிறுத்த முடியாத நிலை. நிறுத்தும் முயற்சிகள்தான் படத்தின் ஹைலைட்.

ஸ்பீடு-2 - க்ரூஸ் கண்ட்ரோல்

படத்தொடக்கத்தில் ஜேஸன் பாட்ரிக் செய்யும் மோட்டார் சைக்கிள் சேஸிங் அற்புதம். கிளைமாக்ஸில் கடற்கரையில் அமைந்துள்ள நகரின் பல கட்டடங்களைத் தகர்த்துக் கொண்டு, கப்பல் தரைதட்டும் காட்சியில் ஆர்ட் டைரக்டர் பாராட்டுப் பெறுகிறார்.

இயக்குனர் 'ஜேக் டே போன்ட்'டின் ஆஸ்தான நாயகியான (ஸ்பீட் மற்றும் ட்விஸ்டர் ஆகிய படங்களிலும் இடம் பெற்ற) சான்ட்ரா புல்லக் இதிலும் இடம் பெற்று கவர்ச்சி மற்றும் திறமையைச் சரிசமமாக வெளிப்படுத்துகிறார்!

கப்பலை அடிப்படையாகக் கொண்டு 'பொஸிடன் அட்வென்ச்சர்' போன்ற படங்களைப் பார்த்தவர்களுக்கு, இதன் பிரம்மாண்டம் மனத்தில் தைப்பது குறைவாகவே இருக்க வாய்ப்பு உண்டு. என்ன இருந்தாலும் பஸ்ஸின் வேகம் கப்பலுக்கு இருக்காதுதானே!

— ஜி.

லாகத் தெற்கு தில்லியிலுள்ள 'நைவேத்யம்' என்ற பணக்கார உடுப்பி ரெஸ்டாரெண்டில் நாம் சந்திக்க நேர்ந்த வினு மாணவ்சிங் என்ற ராபர்ட் வதேராவின் நண்பர், "ராபர்ட்டுக்கு, ப்ரியங்கா அரசியலில் நுழைவதில் துளியும் விருப்பமில்லை. ஆனால், பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருப்பது உண்மை. சோனியாவுடன் ஓரிரு இடங்களுக்கு, ப்ரியங்கா உடன் செல்லக் கூடும்" என்று சொன்னார்.

மத்தியப்பிரதேசம், கேரளா, கோவா, அஸ்ஸாம், உ.பி. போன்ற மாநிலங்களில் சென்ற தேர்தலில் காங்கிரஸுக்குக் கிடைத்த இடங்களைக் காட்டிலும் கொஞ்சம் கூடுதலான இடங்கள், சோனியாவால் கிடைக்கும் என்று பி.ஜே.பி. தரப்பினரே ஒப்புக் கொள்கிறார்கள்.

"பாஸிடிவாக நினைப்போம். நல்லதே நடக்கும்" என்று கேசரி சொல்கிறார்.

"தோழமைக் கட்சிகளின் ஆதரவு கட்டாயம் இருக்கும். நாங்கள் ஆட்சி அமைப்போம்!" என்று சிந்தியா சொல்கிறார்.

"காங்கிரஸின் உயிர் இன்னும் கொஞ்சம் நாள் ஒட்டிக் கொண்டிருக்குமே தவிர மிராக்கிள் எதுவும் நடந்து விடாது!" என்று கம்யூனிஸ்ட் கட்சியின் CITU பிரிவு மத்தியக் குழுச் செயலாளர் டபிள்யூ. ஆர். வரதராஜன் சொல்கிறார்.

"ஆட்சி அமைப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை. காங்கிரஸால் single largest party என்கிற தகுதிக்குக் கூட வர முடியாது. சோனியாவின் வருகை, பெரும் புழுக்கத்துக்கு நடுவே லேசாகத் தொட்டுவிட்டு மறையும் தென்றல் போன்றது. அவ்வளவுதான்!" என்கிறார்கள் தில்லி பத்திரிகையாளர்கள்.

எதற்கும் பதில் சொல்லாமல், எதுபற்றியும் கவலைப்படாமல், உறுமீனுக்காகக் காத்திருக்கிறார் சோனியா.

வீட்டுக்குப் போகும் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறார் கேசரி. ●

புதுதில்லியிலிருந்து : **ஔரங்கசீப்**

இது 'ஏசியாட்' மெடல் வாங்கின விநாயகர் அல்ல; ஆசியாவிலேயே மிகப் பெரிய விநாயகர். உயரம் 19அடி. எடை 200 டன்...



உருவாகி விட்டார் 'ஏசியாட்'

"முதல் விநாயகர் பாதி உருவம் ஆகும் போது உடைபட்டது; இரண்டாவது, கல் எடுக்கும் போதே உடை பட்டு விட்டது. இதை ஒரு சவாலாகவே எடுத்துக் கொண்ட இந்த மூன்றாவது முயற்சி வெற்றியடைந் துள்ளது!'' என்கின்றனர் கோயில் கமிட்டியினர்.


இந்த விநாயகரில் அப்படி யென்ன விசேஷம் என்கிறீர் களா? இதன் பீடத்துக்கான கல் 90 டன் எடை. செதுக் கப்பட்ட பீடம் 75 டன்னா கவும், செதுக்கப்பட்ட இந்த விக்ரகம் 125 டன்னாகவும், மொத்த எடை 200 டன் னாகவும் உருவெடுத்துள்ளது என்றால் சும்மாவா! பதி னொரு ஆண்டுகளாய் நூற் றுக்கணக்கானோர் வேலை செய்த இவ் விநாயகர், பீடத் துடன் 19 அடி, 10 அங்குலம் உயரமும், 11.5 அடி அகலமும், 7.25 அடி கனமும் கொண்டவர். இந்த விநாயகர், 'முந்தி விநா யகர்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளார். நந்தி வாகனத்துடன் திகழும் இந்த வலம் புரி விநாயகர் எழுந் தருளும் போது இந்தி யாவில் மட்டுமல்ல- ஆசியாவிலேயே மிகப் பெரிய விநாயகர் என்று பேர் பெறுவார் என்கின்றனர் அனைவரும்.

"இப்பிடிப்பட்ட விநாயகரை உரு வாக்கும் எண்ணம் எப்படி ஏற் பட்டது? ஐங்கரத்தோன் ஏதாகினும் ஒரு பக்தர் கனவில் வந்து அருளி னாரா...? வேண்டுகோள் வைத்தாரா?'' என்று இந்த விநாயகர் எழுந்

தருளவிருக்கும் கோவை-புலியகுளம் -அருள்மிகு முந்தி விநாயகர் திருப்பணிக்குழு செயலாளர் அருணகிரிநாதனிடம் கேட்டோம்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயத்தில் மிகப் பெரிய விநாயகரை உருவாக்கும் நோக்கில் ராஜராஜசோழன் குடகு மலையில் கல் எடுத்து விநாயகர் செய்து கொண்டு வந்ததாகவும், அது வல்லம் என்கிற இடத்தில் உடைந்து போனதால் அம்முயற்சி கைவிடப்பட்டதாகவும் 1982-ல் தினமணி ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. அதன் அடிப்படையில் எங்கள் புலியகுளத்தில் உள்ள முந்தி விநாயகரை (400 ஆண்டுகள் முந்தையது; கோவில் பழுதடைந்த நிலையில்) உருவாக்கும் எண்ணம் வந்தது. தஞ்சையிலுள்ள வல்லம் சென்று உடைந்த விநாயகரைப் போய் நாங்கள் பார்த்தோம். அங்கே அதிக கூட்டம் இல்லாமல் சிறிய அளவிலேயே பூஜைகளும் செய்யப்பட்டு வந்தன. இதைச் சிறப்பாக நாம் செய்ய வேண்டும் என்று கோயில் கமிட்டிக்கே வைராக்யம் உருவானது.

"பிறகு சிரவை ஆதீனம் 'சுந்தர சுவாமிகளால்' அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணி துவங்கி, இன்று வரை பதினொரு ஆண்டுகளாக நடைபெற்று, வரும் பிப்ரவரி 1-ந்தேதியன்று பிரதிஷ்டை செய்ய ஏற்பாடு செய்து வருகிறோம்...!" என்றார்.




அருணகிரிநாதன்

அது சரி. இவ்வளவு பெரிய கல்லை எப்படி எங்கிருந்து எடுத்துக் கொண்டு வந்தார்கள்?

திருப்பூர்-ஊத்துக்குளியில் 28 அடி ஆழத்திலிருந்து எடுத்த விநாயகருக்கான கல்லை மேலே கொண்டு வர 28 நாட்களும், அதை இங்கே கொண்டு வந்து சேர்க்க 20 நாட்களும் ஆனதாம். பீடம், கிணத்துக் கடவு - ஏழூரில் 104 அடி ஆழத்திலிருந்து எடுக்கப்பட்டு இங்கே கொண்டு சேர்க்க 48 நாட்கள் ஆனதாம். இதை எந்த 'க்ரேன்' உதவியும் இல்லாது (க்ரேன் லோடு தாங்காதாம்) கொண்டு வந்து பத்திரமாய்ச் சேர்த்தது அனைத்தும் மனித சக்திதான் என்கின்றனர்.

எல்லாம் சரி... இவ்வளவு பெரிய விநாயகருக்குக் கோயில் எப்போது...?

''இப்போது விநாயகரை மட்டுமே பிரதிஷ்டை செய்கிறோம்... இதற்கே பதினொரு ஆண்டுகள் பிடித்து விட்டன. கோயில் அமைப்பு அத்திபிஷ்டம். முழுக்கக் கல்வேலை. அதோடு 84 அடி கோபுரம்... என வடிவமைக்கப்பட்டு அதற்கு 45 லட்ச ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு இனி முந்தி விநாயகர் அருள் பெறும் பக்தர்கள் செய்யும் கைங்கர்யம்தான் இதனை உருவாக்க வழி செய்யும்.. கண்டிப்பாக இதற்கும் இந்த முந்தி விநாயகரே துணையிருப்பார்...'' என்றனர் கோயில் கமிட்டியினர்.



''எங்க ஊர் சாலைகளைப் பழுதுபார்க்கணும்னு அமைச்சருக்கு மனு கொடுத்தோம், அதைக் கிடப்புல போட்டுட்டாங்க.''

''பிறகு எப்படி செப்பனிட்டாங்க?''

''அமைச்சர் தலைமையில் ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்தோம்; தன்னால சாலைகளைச் சீர்செய்துட்டாங்க!''

– சீர்காழி வி. ரேவதி

விநாயகர்...!

கட்டுரை, படம்: 'கேயெஸ்வி'

கொத்துக் கொத்தாக நடக்கும் கோழி வதம்!



"ஹாங்காங்கிற்கு ஏதோ அழிவு நேரப் போவதற்கான அறிகுறி இது" என்று சீனாவில் உள்ள புத்த பிட்சுக்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். சுமார் பன்னிரெண்டு லட்சம் கோழிக்குஞ்சுகளை ஒரே மூச்சில் ஹாங்காங் அரசு சுட்டுத் தள்ளியதற்குத்தான் ('ஆபரேஷன் சிக்கன்'?) இந்த எதிர்ப்பு. கொத்துக்கொத்தாக இப்படிக் கோழி குஞ்சுகளை வதம் செய்தது கொடூரம்தான் என்றாலும் ஹாங்காங் அரசுக்கு வேறு வழி புலப்படவில்லை.

ஹாங்காங்கின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் நான்கு பேர் இறந்துவிட, கணிசமானவர்களின் உடல்நிலை மோசமடைந்தது. இதுவரை அறிமுகமாகாத ஒருவகை ஃப்ளூவினால் அவர்கள் பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. அதேசமயம் அந்தப் பகுதியில் உள்ள செங் ஷா வான் என்ற கோழிக்கறி மார்க்கெட்டில், நூற்றுக்கணக்கான கோழிக்குஞ்சுகள் திடீரென்று இறந்துவிட, சந்தேகம் எழுந்தது. மருத்துவர்கள் தீவிர ஆராய்ச்சி செய்து, புதிதாக முளைத்துள்ள ஒரு வைரஸ் கிருமியால் தாக்கப்பட்ட அந்தக் கோழிகளின் இறைச்சியைச் சாப்பிட்டதால்தான் அவர்கள் இறந்தனர் என்று கண்டுபிடித்தனர்.

ஹாங்காங்கை பதற்றம் தொற்றிக் கொண்டது. 1968 ஆம் ஆண்டில்தான் வேறு ஒரு வகை ஃப்ளூவினால் (கோழிகள் மூலமாக அல்ல என்றாலும்) 46,000 பேர் இறந்து விட்டிருந்தனர். இப்போது இந்த ஃப்ளூவினாலும் அப்படியொரு நிலை நேர்ந்து விட்டால்? உடனே ஹாங்காங் அரசு உத்தரவிட, பாதிக்கப்பட்ட பகுதியை ஒரு பெரும் வட்டமாகச் சுற்றி வளைத்துக் கொண்டு, அங்குள்ள கோழிகளை சுட்டுத் தள்ளினார்கள். கரியமில வாயுவைச் செலுத்தியும் அவற்றைச் சாகடித்தார்கள். இதற்கென்றே அவசரமாகத் தயாரிக்கப்பட்ட ராட்சத குப்பைக் கூடைகளில் அவற்றைத் திரட்டி, ஒரு பெரிய குழியில் - கூடவே பல வித கிருமி நாசினிகளையும் போட்டுப் புதைத்தனர்.

கோழிக்குஞ்சுகள் நோயால் மடிவதும், அவற்றால் சிலவகை நோய்கள் மனிதர்களுக்கு ஏற்படுவதும் தெரிந்ததுதான். ஆனால் இப்படி வைரஸால் பாதிக்கப்பட்ட கோழிக்குஞ்சுகளை வயிற்றுக்குள் தள்ளியவர்கள் வைகுண்டத்தை அடைந்ததாகக் கேள்விப்பட்டதில்லை. இந்தியாவிலும்கூட முட்டையையும் கோழியையும் உணவாகக் கொள்பவர்கள் , ஏராளமாயிற்றே. இங்கும் அதுபோன்ற விபரீதம் ஏற்பட வாய்ப்பு உண்டா? இப்படிப்பட்ட சந்தேகங்களுடன் பிராணிகள் நலத்துறை கூடுதல் இயக்குனரான காப்டன் டாக்டர் எபினேசரை சந்தித்தோம்.

"கிளி போன்ற பறவைகள் கடிப்பதால் நம்



ரத்தத்தில் சிலவகை வியாதிகள் பரவுவதுண்டு. முட்டை மற்றும் கோழிக்குஞ்சுகள் மூலமாக சால்மனாஸிஸ் என்ற வியாதி பரவுவதும் உண்டு. ஆனால் மனிதனைக் கொல்லும் அளவுக்கு அது போயிருப்பது இதுதான் முதல்முறை. ஹாங்காங் அதிகாரிகள் செய்தது சரியான செயல்தான். கடப்பட்ட கோழிக்குஞ்சுகளை அவர்கள் கையாண்ட விதமும் பாராட்டுக்குரியது. நல்லவேளையாக இந்த விஷயத்தை அவர்கள் மூடிமறைக்கவில்லை. இதனால் உலகம் தழுவிய ஆராய்ச்சிகள் நடப்பது விரைவு படுத்தப்படும்.

"நம் நாட்டில் கோழிகளையோ அவற்றின் குஞ்சுகளையோ ஃப்ரஷ்ஷாகவும், வறுத்தும்தான் சாப்பிடுவது வழக்கம். ஹாங்காங்கில் – அதுவும் கடற்கரையிலிருந்து கொஞ்சம் உள்ளடங்கிய பிரதேசத்தில் கோழி இறைச்சியை அப்படியே ஃப்ரீஸரில் வைத்துவிட்டுச் சாப்பிடுவதும், 'ஸ்மோகிங்' என்ற முறையில் நெருப்பில் லேசாகக் காட்டிவிட்டுச் சாப்பிடுவதும் சகஜம். இதில் ஆபத்தும் அதிகம்.

"புதுவித வைரஸ்கள் அவ்வப்போது தோன்றி பயமுறுத்திக் கொண்டுதான் இருக்கின்றன என்றாலும் இங்கே இதுபோன்ற ஒரு நிகழ்வு தோன்ற எந்த அறிகுறியும் இல்லை. கோழிக்கறி வாங்குபவர்கள் இரண்டு விஷயங்களில் கவனம் செலுத்தலாம். அதன் உடல் பகுதி கொழகொழவென்று ஜெல்லி போல் இல்லையென்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். (ஃப்ரீஸரிலிருந்து எடுத்தால் அப்போது கெட்டியாகத்தான் தோற்றமளிக்கும். கொஞ்ச நேரம் கழித்துப் பாருங்கள்). அதன் உடலின் ஒவ்வொரு பாகமும் அதற்குரிய வடிவத்தில் இருக்கிறதா என்பதிலும் கவனம் தேவை. உதாரணமாக தொடைப் பகுதி ஏதோ இறகு போல் இளைத்திருந்தால் அங்கே ஏதாவது நோய் தாக்கியிருக்க வாய்ப்பு உண்டு! ஜாக்கிரதை!"

— ஜி.எஸ்.எஸ்.

பாட்டுப் பாடவா?



நெல்லை மாநாடு முடிந்ததும், தொண்டர்களை உற்சாகப்படுத்த வேண்டி ஜெயலலிதா மேடையில் ராகம் போட்டு ஒரு பாட்டுப் பாடினார் :

கண்மணி, கண்மணி, கண்ணே,
திருமணி!
பொன்மணி, பொன்மணி, பூவே
மாங்கனி!
முத்தமிழ், முக்கனி, முப்பாலே,
இந்த மூவுலகும் உனக்கு அப்பாலே!

மற்ற தலைவர்களுக்கும் இப்படிப் பாட ஆசை வந்து விடுமே, பாட்டுக்கு என்ன செய்யப் போகிறார்கள் என்ற கவலையில், இதோ, நாமே பாட்டுக்களை எழுதிக் கொடுத்து விட்டோம்!

வாழப்பாடி ராமமூர்த்தி : *(ராகம் : அட(டா)ணா)*
குட்டிக்கரணம் போட்டு வாடா,
குட்டிக்கரணம் போட்டு வாடா!
கட்சிவிட்டுக் கட்சி மாறி, குட்டிக்
கரணம் போட்டு வாடா!



ஒரு நாளைக்கிருந்த கட்சியில்
மறுநாள் இருக்காதே!
கட்சி பெரிசில்லே, பதவிதான் பெரிசுன்னு
காலம் உணர்த்தும்வரை காத்திருக்காதே!
பாடுபட்டாவது பார்லிமெண்ட் போயிடு
பாவபுண்ணியம் பாக்கிற நேரம் இல்லை
இது!



வை.கோ. : *(ராகம் : (ஜெய)லலிதா)*
தந்தை பெரியாருக்கு அல்வா
தலைவர் அண்ணாவுக்கு ஒரு நாமம்.
தம்பி பிரபாகரா!
இனிமே நீ அரோகரா!

அதிமுகவோடு கூட்டணியை வச்சா
அட, கோபால்சாமி மட்டும் மோசமா
சாமி?
கூட்டணி வச்சா கிடைக்குமே சீட்டு
வக்கிலேன்னா போயிடுமே டெபாசிட்டு!

கேக்குற சீட்டுக் கொடுத்தா வை.கோ.
பிரசாரம்,
கொடுக்காமல்போனா அம்மாக்குத்
தான்கிரகசாரம்!

சுப்பிரமணிய சுவாமி *(ராகம் : பதவி மோக(ன)ம்)*
நான் சொன்னால் எதுவும்
நடக்காமல் போகாது தம்பி!
நம்பலேன்னா நீட்டுநீ கும்பி!



மூப்பனார் : ((சமரச) கானடா)
காமராஜர் ஆட்சி தருகிறவரை
கலைஞர் ஆட்சி தானென்று,
நாற்பது தொகுதிகள் சுற்றி
தொண்டர்கள் கருத்தறிந்தேன்.
சொந்தக் காலில் நிற்காதபோது
எந்தக் காலில் நின்றால் என்ன?
எஸ்.ஆர்.பி., சிதம்பரம், ஜெயந்தி,
தனுஷ்கோடி
எப்படித்தான் அமைச்சராவது மறுபடி!

ஏப்ரல் ஒண்ணாம் தேதி
கருணாநிதி பதவி காலி,
அய்யாதான் முதல்வர் - சந்திர
லேகாதான் அமைச்சர்!
இப்போதைக்கு எனக்கு, ஜெயலலிதா
தோழி,
எப்போது அவர் காலை, விடுவேனோ
வாரி!





தங்கபாலு : (ராகம் : இதானே(கதன)
குதூகலம்!)
சோனியா, தாயே சோனியா!
கேசரியாலே வந்த வினை எல்லாம்
தீர்க்க வந்த தாயே, ஜகன்மாதா!
த.மா.க. கூடாரம் கலையுதாம்
தி.மு.க. வட்டாரமே கலங்குதாம்!
கொட்ரோச்சி, போஃபர்ஸ்
மிரட்டினாலும்
டிட்கோ, ஸ்பிக் முன் இவையெல்லாம்
கால்தூசு!
அஞ்சாத நேரு குடும்ப வாரிசே,
கெஞ்சுகிறோம் எங்களைக் காத்திடு!

கருணாநிதி : ((நிஜ) ஆனந்த பைரவி)
எங்கிருந்தோ வந்தார்
என்பேர் ரஜினி என்றார்
என்னோட ஆதரவு
த.மா.கா. - தி.மு.க. கூட்டணிக்கென்றார்
ஆகா, இதற்காக எத்தனை நாள்
காத்திருந்தோம்!
ரஜினி பேச்சு இனி எடுபடாது என்று
தூண்டினார் அம்மா ரோசம்
இல்லேன்னா ரஜினி மட்டும்
கலைச்சிருப்பாரா வேசம்?




கற்பனை : எஸ்.வி.என்.

மயக்கம் ஏன் வருகிறது?

காதுக்குள், நாம் நிற்கவும் நடக்கவும் பாலன்ஸ் பண்ண ஒரு சின்ன எலும்பு இருக்கிறது. தலையை நாம் எந்தப் பக்கம் ஆட்டினாலும், அது பாலன்ஸ் பண்ணிடும். அந்தப் பகுதியோ, அல்லது அந்தப் பகுதியின் நரம்போ, பாதிக்கப்பட்டாலும் அல்லது பலவீனப்பட்டாலும், மயக்கம் வரும்.

- தலைக்கு இரத்த ஓட்டம் குறைந்தால், குறிப்பாக வயதானவர்களுக்கு, மயக்கம் வரலாம்.
- இரத்தக் கொதிப்பு உள்ளபோது, அல்லது இரத்தத்தில் கொழுப்புகள் அதிகமாகச் சேரும்போது, மயக்கம் வரும்.
- சில நேரத்தில், நீரிழிவு நோய் இருப்பவர்கள், மாத்திரை சாப்பிடுவார்கள். ஆனால் உணவைச் சரியான நேரத்தில் சாப்பிட மாட்டார்கள். அப்போது உடம்பில் சர்க்கரை அளவு குறைந்து, அதனால் மயக்கம் வரும்.
- இன்னும் ஒருவகை மயக்கம் கண் பார்வைக் கோளாறினால் வரும். ஒரே பொருள் இரண்டாகத் தெரியும். இதுதான் அறிகுறி. பிறகு மயக்கம் தொடரும்.
- சில நேரங்களில், சில மாத்திரைகளினால் மயக்கம் வரும். ஒவ்வாமை காரணமாக, anti-allergy மாத்திரை சாப்பிடுவார்கள். இந்த வகை மாத்திரைகள், தூக்கம் வரச் செய்வது போல், மயக்கம் வருகிற மாதிரி செய்யும்.
- சில சமயங்களில், சிறு மூளையில் பாதிப்பு ஏற்பட்டால் மயக்கம் வரும். குடித்துவிட்டு நினைவு தடுமாறி, வரும் மயக்கம் இந்த வகையைச் சேர்ந்ததுதான்!



மயக்கம் ஆண்கள், பெண்கள் இருபாலருக்குமே வரும். ஆனால் பெண்களுக்கு, இரத்தசோகை காரணமாக வரலாம்.

பாதுகாப்பு என்ன, டாக்டர்?

ஒரு தடவை மயக்கம் வந்தால், செக்-அப் செய்து கொள்ள வேண்டும்.

கொழுப்பு (கொலஸ்ட்ரால்), இரத்த அழுத்தம், வயதானவர்களாயிருந்தால், கழுத்துப்புற எலும்பில் பிடிப்பு இருக்கிறதா என்று எல்லாம் பார்க்க வேண்டும்.

உயர் இரத்த அழுத்தம், குறைந்த இரத்த அழுத்தம் (High BP - Low BP) இரண்டின் காரணமாகவும் மயக்கம் வரும்.

கழுத்துப்புறப் பகுதியில், எலும்பில் பிடிப்பு இருக்கிறதா என்று ஏன் பார்க்க வேண்டும்?

ஸ்பாண்டிலோஸிஸ் இருக்கிறது என்றால் கவனமாக இருக்க வேண்டும் அல்லவா? அதற்காகத்தான். ஏனென்றால் கழுத்துப்புற எலும்பு ஒரு முக்கியமான ஜங்ஷன் மாதிரி. அங்கே ஏற்படுகிற பாதிப்பு மயக்கம் வரக் காரணம் ஆகும்.

— சாருகேசி



• டாக்டர் சேதுராமன்

டாக்டர் அக்பர் கவுசருக்கு ரூ. 5 கோடி தரத் தயார்!

— மதுரை டாக்டரின் சவால்

வாணியம்பாடி மூலிகை மருத்துவர் அக்பர் கவுசர், ஒருபுறம் டி.வி, பத்திரிகைகளில் பிரபலமாகிக் கொண்டிருக்க, மறுபுறம் 'அவரது வைத்தியம் – பித்தலாட்டம் என்ற வாதங்களும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. ஏற்கெனவே ஒரு வார இதழில் ஒரு நடிகை இவரை கடுமையாகக் குறை கூறி பேட்டி கொடுத்திருந்தார். இப்போது தென்னகத்தில் பிரும்மாண்ட மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையமாக விளங்கும் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை அக்பர் கவுசருக்கு ஐந்து கோடி ரூபாய்க்குச் சவால் விட்டுள்ளது.

ஒரு சக மருத்துவருக்குச் சவால் விட்டு வம்புக்கு இழுக்க வேண்டிய அவசியமென்ன? மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் நிறுவனரும், சேர்மனுமாகிய டாக்டர் சேதுராமனைச் சந்தித்தோம்.

"நான் அலோபதி டாக்டர் என்பதால் மூலிகை மருத்துவத்தின் மீதுள்ள பொறாமையால் சவால் விடவில்லை. தவிர, இது என்து தனிப்பட்ட சவாலும் இல்லை, பலவித ஆபரேஷன்களிலும், புது நவீன இயந்திரங்களை நிறுவுவதிலும் 'தென்னகத்திலேயே முதல்', 'தமிழகத்திலேயே முதல்', 'இந்தியாவிலேயே முதல்' என்று சாதனை படைத்திருக்கும் மீனாட்சி மிஷன் மருத்துவமனை சார்பில்தான் இந்தச் சவால் விடப்பட்டுள்ளது. ஏனென்றால் – அவரது கண்டுபிடிப்பு என்று அவர் கூறிக் கொள்ளும் காசினிக் கீரை வைத்தியம் முற்றிலும் ஏமாற்று வேலை. வருமானத்திற்காக மக்களின் உயிர்களோடு விளையாடிக் கொண்டிருக்கிறார் அவர்.

"எந்த நோய் என்றாலும் முதலில் அந்நோய் எதனால் ஏற்பட்டது என்பதை அறிய வேண்டும். பிறகு எந்த எந்த உறுப்புகள் எந்த எந்த அளவுகளில் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்ததும் எந்த வகை சிகிச்சை தேவை (மருந்தா, அறுவை சிகிச்சையா) என்பதை முடிவு செய்ய வேண்டும். மருந்து என்றால் எந்த மருந்தை எவ்வளவு டோஸ் தர வேண்டும் என்பதையும், பக்க விளைவு ஏற்படுமா என்பதையும் கவனிக்க வேண்டும்.

"இதில் எதையும் கவனிக்காமல் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத, வெவ்வேறு காரணங்களால் ஏற்படும், பல்வேறு உறுப்புகளை பாதிக்கும் பல நோய்களுக்கு (கிட்னி கோளாறு, லிவர் கோளாறு, மூட்டு வலி, மஞ்சள் காமாலை... என்று நீளமான லிஸ்ட்!) ஒரே காசினிக் கீரையை மருந்து என்று விளம்பரப் படுத்துகிறார் அவர். இது முற்றிலும் ஏமாற்று வேலை.

"இப்போது நான் திரும்பவும் சவால் விடுகிறேன். இரு தேர்ந்த சிறுநீரக மருத்துவர்களால் 'குணப்படுத்த முடியாது' என்று கூறப்படும் ஒரு சிறுநீரக நோயாளியை அவர் தமது காசினிக் கீரை மூலம் குணமாக்கிக் காட்டட்டும்; நாங்கள் ஐந்து கோடி ரூபாய் பரிசளிக்கிறோம். அவர் உண்மையான காசினிக் கீரை மருத்துவராய் இருந்தால் இந்தச் சவாலை ஏற்கட்டும். இல்லையெனில் அப்பாவிகளை ஏமாற்றுவதை அவர் நிறுத்திவிட வேண்டும்" என்று எச்சரிக்கை தொனியில் சொன்னார் டாக்டர் சேதுராமன்.


கூடவே, "அவர் சொல்கிற மாதிரி காசினிக் கீரையே எல்லா நோய்களுக்கும் சிறந்த மருந்து என்றால் எதற்கு இத்தனாயிரம் கோடி செலவில், இத்தனை லட்சம் மருத்துவமனைகள்? பேசாமல் எல்லாவற்றையும் இடித்துத் தள்ளிவிட்டு காசினிக் கீரையே பயிரிட்டு விடலாமே?!" என்றார் நக்கலாய்.

சந்திப்பு: **எஸ். ஜே. இதயா**

படம்: **கிரண் நியூஸ்**

டாக்டர் அக்பர் கவுசரின் பதில் அடுத்த பக்கம்....

"அந்தப் பணத்தை அவரே வைத்துக் கொள்ளட்டும்!"



டாக்டர் சேதுராமன் விட்டிருக்கும் சவாலுக்கும் கூறுகிற குற்றச்சாட்டுகளுக்கும் டாக்டர் அக்பர் கவுஸரின் பதில் என்ன? அவரிடமே கேட்டோம்... அவரே கூறுகிறார்...

காசினிக் கீரை புதிய கீரை அல்ல. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1400 ஆண்டுகளுக்கு முன்பும் நம் நாட்டில் நம் முனிவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பும் கண்டுபிடித்த அரிய கீரை இது. இந்தக் கீரை எந்தெந்த நோய்களைக் கட்டுப்படுத்தும் என்பதை உலகப்புகழ் பெற்ற "Indian medicinal plants" by Arya Vaidya Sala, Kottakkal, published by Orient Longman, 1994; The complete New Herbal-Richard Mabe-London 1988; The Indian Materia Medica-Nad karni-1991 மற்றும் நூற்றுக்கணக்கான மூலிகை மருத்துவ நூல்களில் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. சென்னை பல்கலைக் கழகம் கடந்த இரண்டு ஆண்டு காலமாக காசினிக் கீரை கூட்டுக் கலவையை ஆய்வு செய்து, கிட்னி ஃபெய்லியர் நோய்க்குச் சிறந்த மருந்து என்று அறிக்கை அளித்துள்ளது. கிட்னி ஃபெய்லியர் நோயில் யூரியா, கிரியாட்டினின் அதிகரிக்கும். அதற்கு வாரத்தில் மூன்று முறை டயாலிஸிஸ் செய்து ரத்தத்தைச் சுத்தம் செய்வார்கள். காசினிக் கீரை, கூட்டுக் கலவை டயாலிஸிஸ் செய்யாமல் ரத்தத்தைச் சுத்தம் செய்கிறது. யூரியா கிரியாட்டினின்னை வெளியேற்றுகிறது என்று சென்னை பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது.

"கிட்னி ஃபெய்லியர் என்னும் நோயில் "End stage renal failure" கட்டத்தில் யுனானி மருந்துகளால் குணப்படுத்த முடியுமா?" என்று டாக்டர் சேதுராமன் கேட்கிறார். உயிர் பிரியும் கால கட்டத்தில் அவராலும் எங்களாலும் யாராலும் குணப்படுத்த முடியாது. டயாலிஸிஸ் செய்து மேலும் இரண்டு நாட்கள் வாழ்வை நீடிப்பதைப் போல், மூலிகை மருந்துகளைச் சாப்பிட்டு வாழ்வை நீடிக்கச் செய்ய முடியும்.

சிறுநீரக மாற்று சிகிச்சை, டயாலிஸிஸ் என்பதெல்லாம் எப்படி தாற்காலிக நிவாரணமோ, அதே போல்தான் யுனானி மருத்துவமும். டயாலிஸிஸ் செய்து கொள்ள முடியாதவர்கள், சிறுநீரகத்தை மாற்றிக் கொள்ள முடியாதவர்கள் மாற்று சிகிச்சை ஏதாவது கிடைக்குமா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்குப் பயன்தரும் வகையில் சிறுநீரக நோய்களுக்கு யுனானி மூலிகைகளைக் கொண்டு சிகிச்சை அளித்து வருகிறோம்.

சிறுநீரக நோய்க்கு டயாலிஸிஸ் செய்ய வேண்டும் என்ற நிலையில் ஆங்கில மருத்துவர்கள் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை டயாலிஸிஸ் செய்கிறார்கள். இதற்கு மாதத்தில் பல ஆயிரம் ரூபாய் செலவாகிறது. ஆயுள் முழுவதும் இதைச் செய்ய வேண்டும். இந்த டயாலிஸிஸ் வசதி தமிழகத்தில் எத்தனை இடங்களில் உள்ளது? கிராமத்தில் வசிப்பவர்களுக்கு வசதி கிடைக்குமா? ஒவ்வொரு முறையும் சுமார் ஆயிரம் ரூபாய் கட்டணம் செலுத்தி டயாலிஸிஸ் செய்து கொள்ள வேண்டும். சாதாரண ஏழை மக்கள் கூலி

வேலை செய்பவர்கள், ஏன், அரசு ஊழியர்களால் செய்து கொள்ள முடியுமா? சிறுநீரகத்தை மாற்றித்தான் ஆக வேண்டும், அதுவரை டயாலிஸிஸ் செய்து கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் ஆங்கில மருத்துவர்கள் மட்டும் நூறு சதவிகிதம் குணமளிக்கின்றார்களா? லட்சக்கணக்கில் பணம் செலவழித்து டயாலிஸிஸ் செய்து கொண்டால் மட்டும் செயலிழந்த சிறுநீரகங்கள் மீண்டும் செயல்படுகின்றனவா? டயாலிஸிஸ் செய்த பின் சிறுநீரகத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறீர்களே, அப்படி சிறுநீரகத்தை மாற்றிக் கொண்டால் மட்டும் 100 சதம் அனைவரும் பிழைத்து விடுகிறார்களா? அப்படியே ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்தாலும், எத்தனை ஆண்டுகள் உயிர்வாழ முடியும் என உத்தரவாதம் கொடுக்க முடியுமா? ஆங்கில மருத்துவர்கள் செய்கிற அளவிற்குத் தான் நாமும் செய்கிறோம்.

ஒரு கோடி ரூபாய் பணச் செலவில் டயாலிஸிஸ் சிறுநீரக மாற்று சிகிச்சை செய்யப்பட்டு மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களை ஒன்றரை ஆண்டுகளுக்கு மேல் வாழ வைக்க முடியவில்லை. அவருடைய துணைவியார் திருமதி ஜானகி அம்மாள் டயாலிஸிஸ் சிகிச்சையில்தான் மரணமடைந்தார்கள். முதல்வர்களுக்கே இந்த நிலை என்றால் பாமர மக்களின் நிலை என்ன?

டாக்டர் சேதுராமன் ஒரு நடிகையின் தகப்பனாருக்கு நான் சிகிச்சை அளித்து இறந்து போனதாகக் கூறி இருக்கிறார். அவருக்கு இரண்டு ஆண்டுகாலம் இலவசமாகச் சிகிச்சை அளித்து டயாலிஸிஸ் என்னும் சித்திரவதை இல்லாமல் வாழவைத்த பெருமை காசினிக் கீரைக்கு உண்டு. அதை அவரே தொலைக் காட்சிப் பெட்டியில் கூறினார். ஏழைகளுக்கு எட்டும் வகையில் காசினிக் கீரையின் நிலை கட்டுக்கு ரூபாய் ஐந்து என நிர்ணயித்து, தமிழகம் முழுவதும் விநியோகித்து வருகிறேன்.

மனித சமுதாயத்துக்குப் பயன்கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் காசினிக் கீரை, காசினிக் கீரை கூட்டுக் கலவை ஆகியவற்றை தமிழக அரசுக்கும், தமிழக நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு நா. ஆற்காடு வீராசாமி அவர்களுக்கும் வழங்கியுள்ளேன். சென்னை பல்கலைக் கழகத்திற்கும் கொடுத்துள்ளேன். உங்கள் மருத்துவமனைக்கும் ஆராய்ச்சிக்காகக் கொடுக்கத் தயாராக உள்ளேன். எனக்குப் பரிசு வேண்டாம். அதை நீங்கள் செய்யும் நல்ல பணிகளுக்கே வைத்துக் கொள்ளுங்கள்.

யுனானி மருத்துவத்தின் வளர்ச்சியைப் பார்க்க முடியாதவர்கள், எங்கள் பணியை நேரில் காணாமல் தொழில் பொறாமையால் டாக்டர் சேதுராமன் போன்ற பணம் படைத்தவர்கள் அவதூறாகப் பேசுவதும் எழுதுவதும் சகஜம். தாம் ஒரு பெரிய கோமகஸ்வரர் என்பதைக் காட்டிக்கொள்ளவும் போலியான விளம்பரத்தைத் தேடிக் கொள்ளவும்தான் இப்படிப்பட்ட மலிவான செயல்களில் அவர் ஈடுபட்டிருக்கிறார் என்பதே என் கருத்து. ●

‘க்ளோனிங்’ மனிதன் சாத்தியமா?

சென்ற வருடத்தில் டாலி என்ற ஓர் ஆட்டை, ‘க்ளோனிங்’ மூலம் செய்தார் ஒரு விஞ்ஞானி. அதற்கே ஏகப்பட்ட கண்டனம் எழுந்தது.

இப்போது மனிதனைக் கூட ஒரே வருடத்தில், ‘க்ளோனிங்’கில் படைத்துக் காட்டுகிறேன் என்று சவால் விட்டிருக்கிறார், சிகாகோ விஞ்ஞானி டாக்டர் ரிச்சர்ட் ஸீட்.

டாலியை உருவாக்கிய போதே அதிபர் கிளின்டன் ஒரு பயோ - எதிக்ஸ் கமிட்டியை நியமித்து, ஐந்து வருடங்களுக்கு இனி யாரும் இந்த மாதிரி பரிசோதனைகளே செய்து பார்க்கக் கூடாது என்று தடை விதித்திருக்கிறார்.

‘க்ளோனிங்’ முறையை ஆதரிக்கக் கூடாது என்றாலும், இது தொடர்பான விஞ்ஞான ஆராய்ச்சி மூலம், குழந்தை பெற முடியாத வயதான பெண்களுக்கு உதவலாமே என்கிறார் ஜேமி க்ரீஃபோ. இவர் நியூயார்க் பல்கலைக்கழக என்டோக்ரினாலஜி துறை இயக்குநர். ‘‘இளம் பெண்ணின் ஆரோக்கியமான முட்டையிலிருந்து அதன் ‘நியூக்ளிய’சை மட்டும் எடுத்துக் கொண்டு, வயதான பெண்ணின் வளர்ச்சியடைய முடியாத முட்டையுடன் இணைத்து அதை வளரச் செய்ய முடியுமா என்று ஆராய்ச்சி செய்து பார்க்கலாம்!’’ என்கிறார்.


• ரிச்சர்ட் ஸீட்

ஆனால் அதிபர் கிளின்டன், இந்த மாதிரி அநாவசிய ஆராய்ச்சிகளுக்கு எல்லாம் அரசுப் பணம் எதுவும் கொடுக்கக் கூடாது என்று தடை விதித்திருக்கிறார்.

‘‘ரிச்சர்ட் ஸீடால் அவர் சொல்கிற மாதிரி ‘க்ளோனிங்’ முறையில் மனிதனைப் படைக்க முடியாது. அவர் சொல்வதை எல்லாம் சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை!’’ என்று சொல்லிவிட்டார், செயற்கைக் கருத்தரிப்பு முறையில் ஆராய்ச்சிகள் பல செய்திருக்கும் லார்டு ராபர்ட் வின்ஸ்டன். லண்டனைச் சேர்ந்த இவர்தான், உலகின் முதல் டெஸ்ட் ட்யூப் பேபி உருவாக உதவியவர்.

– நம்பி

மாதவன்

அ. சி. மணியன்

நான் திடுக்கிட்டுப் போனேன். மலையூர் வேணுகோபாலன் சைக்கிளில் வந்து இறங்கினார். பின்னால் ஒரு பையனும் வந்தான்.

"வாங்க தம்பி வேணு. பார்த்து ரொம்ப நாளாச்சு!"

நான் சொல்லிக் கொண்டே எழுந்தேன். எல்லாரும் உட்கார்ந்து பேச அந்த இடம் போதாது. அதுவும் இல்லாமல் அது பூ வியாபாரம் நடக்குமிடம்.

நான் மெல்ல பக்கத்தில் பூட்டிக்கிடந்த கடை வாசலுக்கு வேணுவை அழைத்துக் கொண்டு போனேன். அவரும் தனிமையில் பேச விரும்பியவர் போல என்னுடன் வந்தார்.

"அண்ணே, நீங்க மாட்டேன்னு சொல்லாம ஓர் உதவி செய்யணும். மறுக்கக் கூடாது."

"என்ன தம்பி, பீடிகை எல்லாம் போடுறீங்க! நீங்க சொல்லி நான் எதை மறுத்திருக்கேன்? இன்னைக்கு நேத்துப் பழக்கமா? இருபத்தஞ்சு வருசப் பழக்கம். சொல்லுங்க..."

எங்களுக்குச் சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்த அந்தப் பையனை அருகில் அழைத்தார், வேணு. தயங்கியபடியே அவன் வந்தான்.

"இவன் என் மூணாவது பையன். சின்னப் பிள்ளையில பார்த்திருப்பீங்க. பேர் மாதவன்."

பையன் லேசாகப் புன்னகைத்தான். வேணு தொடர்ந்தார். "இவன் 'ப்ளஸ் ஒன்'ல சேரணும். ஹெட்மாஸ்டர்கிட்ட நீங்கதான் சிபாரிசு பண்ணணும்."

"பண்ணிட்டா போச்சு. என்ன பிரமாதம்! ஆமா டென்த்ல எவ்வளவு மார்க் வாங்கி இருக்கே?"

பையன் வாய் பேசவில்லை. சான்றிதழ்களை என்னிடம் கொடுத்தான். எனக்குப் பகீரென்றது.

தலைமை ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர்.

போதுமான மார்க் இல்லாவிட்டால் அவர் சேர்க்க மாட்டார். யார் சிபாரிசு செய்தாலும் அவரிடம் அகப்பட்டுக் கொள்ள வேண்டும். அவர் கேட்கும் கேள்விகளுக்கு நாம் பதில் சொல்ல முடியாது. இந்த விஷயத்தில் அவர் விட்டுக் கொடுக்க மாட்டார்.

முன் யோசனை இல்லாமல், பையனை விசாரிக்காமல் வேணுவிடம் சிபாரிசு செய்ய ஒத்துக்கொண்டேனே! இப்போது என்ன செய்வது? நிலைமை எனக்குத் தர்மசங்கடமாக இருந்தது. இதை வேணுவிடம் காட்டிக் கொள்ள முடியுமா?

மனதில் நிறையச் சோர்வோடு, ஆனால் வெளிக் காட்டிக் கொள்ளாமல், வேணுவையும் மாதவனையும் அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடம் கிளம்பினேன். முன்னால் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் மிகவும் சிரமப்பட்டேன்.

தலைமை ஆசிரியர் அறைக்குள் நுழைந்து அமர்ந்தேன். வேணுவும், மாதவனும் என் பக்கத்தில் நின்றிருந்தார்கள்.

வகுப்புக்குப் போயிருந்த தலைமை ஆசிரியர் வந்தார்.

நான் எழுந்து நின்று வணக்கம் சொன்னேன்.

அவர் இருக்கையில் அமர்ந்ததும், நானும் அவர் எதிரில் அமர்ந்தேன்.

"என்ன சேதி? ரொம்ப நாளா இந்தப் பக்கம் காணோமே!"

நான் ஒன்றும் சொல்லாமல், புன்னகைத்தபடி, "இந்தப் பையன் மாதவனைப் ப்ளஸ்-ஒன்னில் சேர்க்கணும். இவன் அப்பா எனக்கு நெருங்கிய நண்பர்!" என்றேன்.

தலைமையாசிரியர் மாதவன் சான்றிதழ்களை வாங்கிப் பார்த்தார். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

தலைமை ஆசிரியர் நிமிர்ந்தார்.

"ஏன் மணி, இந்த 'சர்டிபிகேட்ஸ்'ஸெல்லாம் பார்த்திட்டுத்தான் அழைச்சிக்கிட்டு வந்தீங்களா? இல்லே, நண்பருக்காக உடனே வந்தீங்களா? எந்த வகையிலும் இவனைச் சேர்க்க வாய்ப்பே இல்லியே! இவனுக்குப் போய் நீங்க சிபாரிசுக்கு வந்திருக்கீங்களே!"

"பையன் ரொம்ப ஆசைப்படுறான். இனிமே ஒழுங்கா படிக்கிறேன்னு சொல்றான். படிக்கணும்ன்னு ஒரே பிடிவாதமா இருக்கான். அதான் அழைச்சிக்கிட்டு வந்தேன். தயவு

செஞ்சு தவறா நினைக்காதீங்க!''

''இதுவரை படிக்காதவன், இனிமேலா ஒழுங்கா படிக்கப் போறான்?''

தலைமை ஆசிரியர் கேள்விக்கு நான் என்ன பதில் சொல்ல? மௌனமாக இருந்தேன். வேணு முகத்தைப் பார்த்தேன். பாவம், அது வேறு முகமாக இருந்தது.



மாதவன் இதே பள்ளிக்கூடத்தில் படித்தவன். ஒன்பதாம் வகுப்போடு பள்ளிக்கூடம் வருவதை நிறுத்தி விட்டான்.

இடையில் என்னென்ன செய்தானோ?

கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் 'பிரைவேட்'டாய் டென்த் எழுதியிருக்கிறான். அதிலும் ஒரே தேர்வில் வெற்றி பெற்றானா? அதுவும் இல்லை.

கஜினி முகமதுதான்! விடாப்பிடியாகப் போர் தொடுத்து மூன்றாம் முறையாக வெற்றி பெற்றிருக்கிறான். அதை வெற்றி என்றும் சொல்ல முடியாது. பத்தாம் வகுப்பை நிறைவு செய்திருக்கிறான். அவ்வளவுதான்!

ஒன்றுக்கு மூன்று சான்றிதழ்கள் வாங்கியிருக்கிறான். மார்க் என்னவோ நூற்று எண்பதுதான்!

வயது இருபது. பதினாறு வயதில் சேர வேண்டிய வகுப்பில் இவனை எப்படிச் சேர்ப்பது? இவ்வளவிலும் 'சயன்ஸ் குரூப்' தான் வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறான்.

எப்படி அவனைப் பள்ளியில் சேர்த்துக் கொள்வார், தலைமை ஆசிரியர்?

எப்படியோ துணிச்சலை வரவழைத்துக் கொண்டேன். தலைமை ஆசிரியரிடம் கதை சொன்னேன்.

''வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒரு திருப்புமுனை உண்டு. நீங்க பையனைச்

அருள்வாக்கு

நம் மனஸ் ரொம்பவும் சஞ்சல ஸ்வபாவமுள்ளதாகையால் தெய்வ ஸம்பந்தமான நூல்களை, ஸ்தோத்ரங்களை நாமே படிக்கும்போதும் சொல்லும்போதுங்கூட மனஸ் கொஞ்ச நாழிக்கு அப்புறம் வேறெங்கேயோ ஓட ஆரம்பிக்கிறது. ஆனால் இந்தச் சலன மனஸையும் இழுத்து அதிக நாழி தன்னில் தோய்த்து வைத்துக் கொள்ளும் சக்தி கலைகளுக்கு இருக்கிறது. ஒரு அழகான சிற்பம், சித்ரம் என்றால் நீண்ட நாழி அதையே நாம் பார்த்துக் கொண்டிருக்கும்படிப் பண்ணுகிறது. "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து," "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்" "பொன்னார் மேனியனே" போன்ற பக்திப் பரவசத்தில் பிறந்த அம்ருத வாக்குகளை நாமாகச் சொல்லும்போது அந்த அம்ருதத்தை அரை நிமிஷம் ஒரு நிமிஷந்தான் ருசி பார்க்க முடிகிறது என்றால், இவற்றையே உருக்கமான ரக்தி ராகங்களிலோ, கம்பீரமாயிருக்கிற கன ராகங்களிலோ இழைத்து இழைத்து, பலுக்கிப் பலுக்கி கானம் செய்தால் கால்மணி அரைமணி கூட ஒரு விருத்தத்தையே விந்யாஸம் செய்தாலும் அவ்வளவு நேரம் மனம் அதிலே தோய்ந்திருந்து தெய்வ ஸ்மரணத்தில் விலகாமலிருக்கிறது. அம்ருதத்திலேயே ஒரு தேவஜாதி மாம்பழத்தை ஊறப் போட்டு விட்டால் எப்படி அதை ரொம்ப நாழி கொஞ்சம் கொஞ்சமாக ஆஸ்வாதம் பண்ணுவாமோ அப்படி அம்ருத வாக்கு ஸங்கீதப் பழத்தில் ஊறும்போது ஆகிறது. அதனால், நாம் தப்பாகப் பிரயோஜனப்படுத்திக் கொள்வதால் கீதமும் ந்ருத்யமும் சித்த விகாரத்தை உண்டாக்குவதாயிருந்தாலும் வாஸ்தவத்தில் இவை நம்முடைய சலன சித்தத்தை ஈச்வரனிடம் நன்றாக நிறுத்தி, அப்புறம் அந்த ஸ்டேஜில் ஈச்வரன் என்றுகூட ஒன்று தெரியாமல் சித்தமே ஸமாதியில் நிறுத்தப்படுவதற்கு உபயோகமாகிறது. அலைபாயும் சித்தத்தை நிலை பரவ வைக்கக் கலை உதவுகிறது. அதனால்தான் பூஜையின் உபசாரங்களில் சேர்த்தார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.



சேர்த்துக்கங்க. பிளஸ்-டு வில் அவன்தான் 'ஸ்கூல் பர்ஸ்ட்'! நீங்க வேணும்ன்னா பாருங்க!" சொல்லி விட்டுத் தலைமை ஆசிரியரைப் பார்த்தேன்.

அவர், சிரித்துக் கொண்டே சொன்னார்.

"உங்களுக்காக இவனைப் பள்ளியில் சேர்த்துக்கிறேன். அவன் கேட்ட 'சயன்ஸ் குரூப்'பே தர்றேன். ஆனா பையனுக்குப் பொறுப்பு நீங்கதான். அவன் ஒரு சின்னக் குறும்பு செய்தாலும், உங்களுக்கு ஆள் விடுவேன். அதை மட்டும் ஞாபகம் வச்சுக்கங்க. சேர்த்து விட்டோமா, அதோடு நம்ம கடமை முடிஞ்சதுன்னு உங்களைப் போக விட மாட்டேன்!"

"ஆகா... தாராளமா...!"

இந்த அளவுக்குத் தலைமை ஆசிரியர் இறங்கி வந்திருக்கிறாரே அது போதாதா, எனக்கு!

தலைமை ஆசிரியர் மாதவனைப் பார்த்துச் சொன்னார்.

"மாதவா, நீ கேட்ட 'குரூப்'பே கொடுத்திருக்கேன். எல்லாம் மணி வந்து சிபாரிசு செய்ததாலேதான்! நீ ஒழுங்கா படிக்கணும். ஞாபகம் வச்சுக்க. இன்னும் இரண்டு நாள் டயம். நீ யூனிபாரம் டிரஸ்லதான் வரணும். அதையும் ஞாபகம் வச்சுக்க. போய் இருநூறு ரூபாய் 'பீஸ்' கட்டிடு."

எல்லாவற்றிற்கும் சம்மதிப்பது போல மாதவன் தலையாட்டினான்.

என் தலை மீது ஏறி உட்கார்ந்திருந்த சுமை, தானாக இறங்கியது போலிருந்தது.

மறுபடியும் வேணுவின் முகத்தைப் பார்த்தேன். புன்னகையோடு இருந்தது!

தலைமை ஆசிரியரிடம் விடைபெற்று வெளியே வந்தோம்.


பக்கத்தில் அலுவலகத்தில் நுழைந்து, மாதவன் விண்ணப்பப் படிவத்தை எழுத்தரிடம் கொடுத்தேன். வேணு, மாதவன் முகத்தைப் பார்க்க, அவன் இருநூறு ரூபாய் எடுத்துக் கொடுத்தான். நான் அதை எழுத்தரிடம் கொடுத்தேன்.

"கொஞ்சம் நேரமாகும். பையனை இருக்கச் சொல்லிட்டு நீங்க போங்க. நான் ரசீது போட்டு அனுப்புறேன்."

எழுத்தர் சொன்னதும், நானும் வேணுவும் அங்கிருந்து கிளம்பினோம்.

மறுபடியும், பூக்கடைக்கு வந்து உட்கார்ந்தோம். பக்கத்து டீக்கடையில் இரண்டு டீக்கு ஆர்டர் செய்தார் வேணு. டீ வந்தது. இருவரும் சாப்பிட்டோம்.

டீ கிளாஸ்களை எடுத்த பையனிடம், ஒரு பத்து ரூபாயை நீட்டினார். அவன் அதை



''பக்கிரி அண்ணே, உங்களுக்கு "மாமூல் சக்ரவர்த்தி'ங்கிற பட்டத்தை யார் கொடுத் தாங்க?!"

"B-2, போலீஸ் ஸ்டேஷன்ல தான்!"

— யமுனா ரெங்கநாதன்

வாங்கிக் கொண்டான்.

வேணு என்னைப் பார்த்து, ''இந்தப் பணம் ஏது தெரியுமாண்ணே!'' என்று கேட்டார்.

எனக்கென்ன தெரியும்? நான் விழித்தேன். வேணுவே சொன்னார்.

''இது நம்ம பயல் மாதவன் கொடுத் ததுதான். இப்போ நாம பள்ளிக்கூடத்திலிருந்து வந்தப்ப, நீங்க முன்னால நடந்தீங்க. பின்னால வந்து என்கிட்ட ரகசியமா இந்தப் பத்து ரூபாயைக் கொடுத்திட்டுப் போறான்!"

வேணு சொல்வது முழுவதும் எனக்குப் புரியாவிட்டாலும் எனக்குப் பெருத்த வியப்பாக இருந்தது.

அப்பனுக்கு மகன் பணம் கொடுப்ப தாவது? ஓ...! பீஸ் கட்டக்கூட வேணு பணம் கொடுக்கவில்லையே! மாதவன்தானே கொடுத்தான்? இது என்ன மர்மம்?

வேணு சொன்னார்.

"மாதவன் பணம் கட்டிட்டு, அப்படியே திருவாரூர் போறான். யூனிபாரம் ரெண்டு செட் எண்ணூறு ஆகுதாம். 'நான் வாங்கிட்டு வாரேன். நீங்க ஊருக்குப் போங்க'ப்பான்னு சொல்லிட்டான்."

அதற்கு மேலும் எனக்குத் தாங்க முடிய வில்லை.

"என்ன வேணு, பீஸ் கட்ட அவன்தான் பணம் கொடுத்தான். உங்ககிட்ட பத்து ரூபாய் அவன் கொடுத்ததாச் சொல்றீங்க. இப்போ அவனே யூனிபாரம் வாங்கத் திருவாரூர் போறான். எனக்கு ஒண்ணும் புரியலியே! நீங்க செலவு பண்ண வேண்டியதுதானே! சின்னப் பையன் கையில் அவ்வளவு பணத்தைக் கொடுக்கலாமா?"

வேணு சிரித்தார்.

"நீங்க ஒண்ணுண்ணே! நான் எங்கே அவன் கிட்ட பணம் கொடுத்தேன். எல்லாம் அவன் பணம். அவன் சம்பாதிச்சது! அவனே தன் செலவைப் பண்ணிக்கிறான். அவ்வளவுதான்!"

எனக்கு வியப்பிற்கு மேல் வியப்பாக இருந்தது. ஆனால் இன்னும் புரிந்து கொள்ள முடியவில்லை.

துணைக்கு மட்டுமே தகப்பனை அழைத்து வந்து பிளஸ்-ஒன்னில் சேர்ந்திருக்கிறான், மாதவன். மற்றபடி எல்லாச் செலவும் அவன் பணந்தானாம். எங்கே சம்பாதித்தான்? எப் படிச் சம்பாதித்தான்?


மேலும் மேலும் எனக்கு வியப்பு கூடியது.

''இதே பள்ளியில் படித்த மாணவன் இவன். ஒன்பதாம் வகுப்போடு நிறுத்திவிட்டுத் திருப்பூரில் நூற்பாலையில் வேலை பார்க்கும் அவன் அண்ணனிடம் போய் விட்டான். அங்கே பாக்டரியில் மாதம் அறுநூறு ரூபாய்ச் சம்பளத்தில் வேலைக்குச் சேர்ந்திருக்கிறான். இவன் சுறுசுறுப்பை நேரில் பார்த்த முதலாளி, ஆறாவது மாதத்தில் ஆயிரம் சம்பளம் போட் டுக் கொடுத்திருக்கார். அடுத்த ஆறாவது மாதத் தில் ஆயிரத்தைநூறு சம்பளம். இப்போதான் சோதனை. இவனோட வேலை பார்த் தவனெல்லாம் நிறைய படிச்சவனுங்க. தான் ஒன்பதாம் கிளாஸ்னு சொல்லிக் கொள்ள வெட்கம்! பிறகுதான் பதினெட்டு வயது முடிந் ததும் 'பிரைவேட்'டா 'டென்த்' எழுதினான். ஒரே தடவையில் பாஸாகி இருப்பான். அங்கே இருக்கிற மாமன் யோசனை! மூணு தடவையா எழுதினான். இப்போ ஒரே குறிக்கோள்! பிளஸ்-டூவைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிச்சிப் பாஸாகணும். அவன் பிடிவாதத்தில் பள்ளிக்கூடத்திலே சேர்ந்திருக்கான். ரெண்டு வருசம் சம்பாதிச்ச பணத்தைச் சேமித்து வைச் சிருக்கான். இப்போ தனது செலவெல்லாம் அவனே செய்துக்கிறான்."

''அடப்பாவி வேணு... இதை முன் னாலேயே சொல்லி இருக்கக் கூடாதா? இப்போ வந்து சொல்றீங்களே. அவனுடைய பலஹீனத்தைச் சொன்னீங்களே தவிர, அவன் பலத்தைச் சொல்லலியே. நீங்க ஊருக்குப் போங்க. நான் திரும்பப் போய்த் தலைமை ஆசிரியர்கிட்டே மாதவனைப் பத்திச் சொல்லிட்டு வர்றேன். நான் சிபாரிசு பண் ணின பையன் எப்பேர்ப்பட்டவன்னு அவருக்குத் தெரிய வேண்டாமா?"

நான் வேணுவை அங்கேயே விட்டு விட்டுப் பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடி னேன்.

கல்கி
கலெக்ஷன்



பொன்னியின்

ஐந்தாம் அத்தியாயம்

குரவைக் கூத்து

அந்தப்புரத்திலிருந்து நண்பர்கள் இருவரும் வெளியே வந்தார்கள். உள்ளேயிருந்து, ஒரு பெண் குரல், "கந்தமாறா! கந்தமாறா!" என்று அழைத்தது.

"அம்மா என்னைக் கூப்பிடுகிறாள். இங்கேயே சற்று இரு! இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கந்தமாறன் உள்ளே போனான். பெண்களின் குரல்கள் பல சேர்ந்தாற்போல் அடுத்தடுத்துக் கேள்விகள் கேட்டதும், கந்தமாறன் தட்டுத்தடுமாறி மறுமொழி கூறியதும் வந்தியத்தேவன் காதில் விழுந்தது. பின்னர் அந்தப் பெண்கள் கலகலவென்று சிரித்த ஒலியும் உள்ளேயிருந்து வந்தது.

தன்னைப் பற்றித்தான் அவ்விதம் அவர்கள் கேலிசெய்து சிரிக்கிறார்களோ என்ற எண்ணம் வந்தியத்தேவனுக்கு வெட்கத்தையும் கோபத்தையும் உண்டாக்கியது. கந்தமாறன் வெளியே வந்ததும் வந்தியத்தேவனின் கையைப் பிடித்துக் கொண்டு, "வா! எங்கள் மாளிகையைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம்!" என்று சொல்லி இழுத்துக் கொண்டு போனான்.

கடம்பூர் மாளிகையின் நிலாமுற்றங்கள், ஆடல் பாடல் அரங்கங்கள், பண்டகசாலைகள், பளிங்கு மண்டபங்கள், மாடகோபுரங்கள், ஸ்தூபி கலசங்கள், குதிரைலாயங்கள் ஆகியவற்றை வந்தியத்தேவனுக்குக் கந்தமாறன் காட்டிக் கொண்டு சென்றான்.

இடையில் வந்தியத்தேவன், "கந்தமாறா! என்னை அந்தப்புர வாசலில் நிறுத்தி நீ மறுபடியும் உள்ளே போன போது, அந்தப்புரத்தில் ஒரே சிரிப்பும் குதூகலமுமாயிருந்ததே, என்ன விசேஷம்? உன்னுடைய சிநேகிதனைப் பார்த்ததில் அவர்களுக்கு அவ்வளவு சந்தோஷமா?" என்று கேட்டான்.

"உன்னைப் பார்த்ததில் அவர்களுக்கெல்லாம் சந்தோஷந்தான். உன்னை அம்மாவுக்கும் மற்றவர்களுக்கும் பிடித்திருக்கிறதாம். ஆனால் உன்னைக் குறித்து அவர்கள் சிரிக்கவில்லை...."

"பின்னே எதற்காகச் சிரித்தார்களாம்?"

"பழுவேட்டரையர் இருக்கிறார் அல்லவா? இத்தனை வயதுக்குப் பிறகு அவர் புதிதாக ஒரு இளம்பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டிருக்கிறார். மூடு பல்லக்கில் வைத்து அவளை இங்கே அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார். ஆனால் அந்தப்புரத்துக்கு அவளை அனுப்பாமல், அவருடைய விடுதியிலேயே அடைத்துப் பூட்டி வைத்திருக்கிறாராம்! அந்தப் பெண்ணைப் பலகணி வழியாக எட்டிப் பார்த்துவிட்டு வந்த ஒரு தாதிப் பெண் அவள் அழகை வர்ணித்தாளாம். அதைக் குறித்துத்தான் சிரிப்பு! அவள் சிங்களப் பெண்ணோ, கலிங்கத்துப் பெண்ணோ, அல்லது சேரநாட்டுப் பெண்ணோ என்று சர்ச்சை செய்கிறார்கள்! பழுவேட்டரையரின் முன்னோர்கள் சேரநாட்டிலிருந்து தமிழகத்துக்கு வந்தவர்கள் என்று உனக்குத் தெரியும் அல்லவா?"

"கேள்விப்பட்டிருக்கிறேன். ஏன், நீதான்

பொன்னியின் செல்வன்

நான் பயந்தவன் அல்ல. அது உனக்குத் தெரியும். மேலும் நான் அனுசித மான காரியம் எதுவும் செய்யவும் இல்லை. வீரநாராயணபுரத்தில் பழுவேட்டரையரின் பரிவாரங்கள் சாலையோடு சென்றபோது கூட்டத் தோடு கூட்டமாய் நானும் சாலை ஓரமாக ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். யானை, குதிரை, பல்லக்கு, பரிவட்டம் எல்லாம் நீங்கள் அனுப்பி வைத்த மரியாதைகளாமே? அது உண்மையா?"

"ஆம், நாங்கள்தான் அனுப்பி வைத்தோம். அதனால் என்ன?...."

"அதனால் என்ன? ஒன்றுமில்லை. பழுவேட்டரையருக்கு நீங்கள் அளித்த வரவேற்பு மரியாதைகளையும் எனக்கு அளித்த வரவேற்பையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். வேறொன்றுமில்லை...!"

கந்தமாறன் இலேசாகச் சிரித்துவிட்டு, "இறை விதிக்கும் அதிகாரிக்குச் செலுத்த வேண்டிய மரியாதையை அவருக்குச் செலுத்தினோம். சுத்த வீரனுக்கு அளிக்க வேண்டிய வரவேற்பை உனக்கு அளித்தோம்! ஒருகாலத்தில், முருகன் அருளால், நீ இந்த வீட்டுக்கு மருமகப் பிள்ளையானால் தக்கவாறு மாப்பிள்ளை மரியாதை செய்து வரவேற்போம்!" என்றான். பிறகு, "வேறு என்னமோ சொல்ல வந்தாய்; அதற்குள் பேச்சு மாறி விட்டது. ஆம், பழுவேட்டரையருடைய ஆசை நாயகி நல்ல சிவப்பு நிறம் என்று சொன்னாயே, அது எப்படி உனக்குத் தெரிந்தது?" என்றான்.

"கடம்பூர் மாளிகையின் கரிய பெரிய மத்தகஜத்தின் மீது பழுவேட்டரையர், எருமைக்கடா மீது யமதர்மன் வருவது போல் வந்து கொண்டிருந்தார்! என்னுடைய ஞாபகமெல்லாம் அவர் மேலே தானிருந்தது. ஒரு காலத்தில் அவரைப் முன்னொரு தடவை சொல்லியிருக்கிறாய். இருக்கட்டும், கந்தமாறா! பழுவேட்டரையர் இந்த மர்ம சுந்தரியான மங்கையை மணந்து எத்தனை காலம் ஆகிறது?"

"இரண்டு ஆண்டுக்குள்ளேதான் இருக்கும். மணம் செய்து கொண்டதிலிருந்து அவளைத் தனியாகச் சிறிது நேரங் கூட அவர் விட்டு வைப்பதில்லையாம்! எங்கே போனாலும் கூடப் பல்லக்கில் ஆசை நாயகியையும் அழைத்துப் போகிறார். இதைக் குறித்து நாடெங்கும் கொஞ்சம் பரிகாசப் பேச்சு நடந்து வருகிறது. வந்தியத்தேவா! ஒரு பிராயத்தைத் தாண்டியவர்களுக்கு இந்த மாதிரி ஸ்திரீ சபலம் ஏற்பட்டால் எல்லோருக்கும் சிறிது இளக்காரமாகத்தானே இருக்கும்?"

"காரணம் அது ஒன்றுமில்லை. உண்மைக் காரணத்தை நான் சொல்லட்டுமா, கந்தமாறா? பெண்களே எப்போதும் சற்றுப் பொறாமை பிடித்தவர்கள். உன் வீட்டுப் பெண்களைப் பற்றிக் குறைவாகச் சொல்லுகிறேன் என்று நினைக்காதே! பெண் உலகமே இப்படித்தான்! உன் குடும்பத்துப் பெண்கள் கருநிறத்து அழகிகள். பழுவேட்டரையரின் ஆசை நாயகியோ செக்கச் செவேலென்று பொன்னிறமாயிருக்கிறாள். ஆகையால் அவளை இவர்களுக்குப் பிடிக்கவில்லை! அது காரணமாக வேறு ஏதேதோ கதை கட்டிச் சொல்கிறார்கள்!...."

"அடே! இது என்ன விந்தை! உனக்கு எப்படி அவளுடைய நிறத்தைப் பற்றித் தெரியும்? அவளை நீ பார்த்திருக்கிறாயா, என்ன? எங்கே, எப்படிப் பார்த்தாய்? பழுவேட்டரையருக்கு மட்டும் இது தெரிந்தால், உன் உயிர் உன்னுடையது அல்ல!...."

"கந்தமாறா! இதற்கெல்லாம்

அமரர் கல்கி

போல் நானும் ஆகவேண்டும் என்று மனோராஜ்யம் செய்து கொண்டிருந்த போது, அடுத்தாற்போல், ஒரு மூடு பல்லக்கு வந்தது. மூடு பல்லக்கில் யார் வரக்கூடும் என்று நான் யோசித்துக் கொண்டிருந்தபோதே பல்லக்கின் திரையை உள்ளிருந்து ஒரு கை சிறிது விலக்கியது. விலக்கிய திரை வழியாக ஒரு முகமும் தெரிந்தது. கையும், முகமும் நல்ல பொன்னிறமாயிருந்தன! அவ்வளவுதான், நான் பார்த்ததெல்லாம்! நீ இப்போது சொன்னதிலிருந்து அந்தப் பெண்தான் பழுவேட்டரையரின் ஆசை நாயகி என்று ஊகிக்கிறேன்."

"வந்தியத்தேவா! நீ அதிர்ஷ்டக்காரன். ஆண் பிள்ளை எவனும் அந்தப் பழுவூர் இளையராணியைக் கண்ணாலும் பார்த்ததில்லை என்று பேச்சு. ஒரு விநாடி நேரமாவது அவள் கரத்தையும் முகத்தையும் நீ பார்த்தாயல்லவா? பார்த்த வரையில் அவள் எந்த தேசத்திலே பிறந்த சுந்தரியாயிருக்கலாம் என்று உனக்கு ஏதாவது உத்தேசம் தோன்றுகிறதா?" என்று கந்தமாறன் கேட்டான்.

"அச்சமயம் நான் அதைப் பற்றி யோசிக்கவில்லை. இப்போது எண்ணிப் பார்க்கும்போது, அவள் ஒருவேளை காஷ்மீர தேசத்துப் பெண்ணாயிருக்கலாம்; அல்லது கடல்களுக்கு அப்பாலுள்ள சாவகம், கடாரம், யவனம், மிசிரம் முதலிய நாடுகளிலிருந்து வந்த பெண்ணரசியாகவும் இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஒருவேளை அரபுதேசத்துப் பெண்ணாக இருந்தாலும் இருக்கலாம். அந்த நாட்டிலேதான் பெண்கள் பிறந்தது முதல் இறக்கும் வரையில் முகமூடி போட்டே வைத்திருப்பார்களாம்!"

அச்சமயம் எங்கேயோ சமீபத்திலிருந்து வாத்தியங்களின் முழக்கம் கேட்கத் தொடங்கியது. சல்லி, கரடி, பறை, புல்லாங்குழல், உடுக்கு ஆகியவை சேர்ந்து சப்தித்தன.

"இது என்ன முழக்கம்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"குரவைக் கூத்து நடக்கப் போகிறது! அதற்கு ஆரம்ப முழக்கம் இது! நீ குரவைக் கூத்து பார்க்க விரும்புகிறாயா? அல்லது சீக்கிரம் உணவு அருந்திவிட்டு நிம்மதியாகப் படுத்துத் தூங்குகிறாயா?"

ஆழ்வார்க்கடியான் குரவைக் கூத்தைப் பற்றிக் குறிப்பிட்டது அச்சமயம் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தது.

"குரவைக் கூத்து நான் பார்த்ததேயில்லை; கட்டாயம் பார்க்க வேண்டும்" என்றான். அந்த நண்பர்கள் இன்னும் சில அடி தூரம் சென்று ஒரு திருப்பத்தில் திரும்பியதும் குரவைக்கூத்து மேடை அவர்களுடைய கண்களுக்குப் புலனாயிற்று. மேடைக்கு முன்னால் சபை கூடவும் தொடங்கி விட்டது.

சுற்றிலும் அரண்மனைச் சுவரும் கோட்டை கொத்தளங்களின் மதிலும் சூழ்ந்த இடத்தில், வெண்மணல் விரித்த விசாலமான முற்றத்தில் குரவைக் கூத்து மேடை அமைக்கப்பட்டிருந்தது. மேடையில் கோழியைப் போலும், மயிலைப் போலும், அன்னத்தைப் போலும், சித்திரங்கள் போட்டு அலங்கரித்திருந்தார்கள். செந்நெல்லை வறுத்த வெள்ளிய பொரிகள், மஞ்சள் கலந்த தினையரிசிகள், பலநிற மலர்கள், குன்றி மணிகள் முதலியவற்றினாலும் அந்த மேடையை அழகுபடுத்தியிருந்தார்கள். குத்து விளக்குகளுடன் தீவர்த்திகளும் சேர்ந்து எரிந்து இருளை விரட்ட முயன்றன. ஆனால் நறுமண அகில் புகையுடன் தீவர்த்திப் புகையும் சேர்ந்து, மூடுபனியைப் போல் பரவி, தீபங்களின் ஒளியை மங்கச் செய்தன. மேடைக்கு எதிரிலும் பக்கங்களிலும் வாத்தியக்காரர்கள் உட்கார்ந்து அவரவர்களுடைய வாத்தியங்களை ஆவேசமாக முழக்கினார்கள். மலர் மணம், அகில் மணம், வாத்திய முழக்கம் எல்லாமாகச் சேர்ந்து வந்தியத்தேவனுடைய தலைசுற்றும்படி செய்தன.

முக்கிய விருந்தாளிகள் அனைவரும் வந்து சேர்ந்ததும், குரவைக் கூத்து ஆடும் பெண்கள் ஒன்பது பேர் மேடைக்கு வந்தார்கள். ஆட்டத்திற்குத் தகுந்தவாறு உடம்பை இறுக்கி ஆடை அணிந்து, உடம்போடு ஒட்டிய ஆபரணங்களைப் பூண்டு, கால்களில் சிலம்பு அணிந்து, கண்ணி, கடம்பம், காந்தள், குறிஞ்சி, செவ்வலரி ஆகிய முருகனுக்கு உகந்த

மலர்களை அவர்கள் சூடியிருந்தார்கள். மேற்கூறிய மலர்களினால் கதம்பமாகத் தொடுத்த ஒரு நீண்ட மலர் மாலையினால் ஒருவரையொருவர் பிணைத்துக் கொண்டவாறு, அவர்கள் மேடையில் வந்து நின்றார்கள். சிலர் கைகளில் சந்தன மரத்தினால் செய்து வர்ணம் கொடுத்த அழகிய பச்சைக் கிளிகளை லாகவமாக ஏந்திக் கொண்டிருந்தார்கள்.

சபையோருக்கு வணக்கம் செய்துவிட்டுப் பாடவும் ஆடவும் தொடங்கினார்கள். முருகனுடைய புகழைக் கூறும் பாடல்களைப் பாடினார்கள். முருகனுடைய வீரச் செயல்களைப் பாடினார்கள். சூரபத்மன், கஜமுகன் முதலிய அசுர கணங்களைக்கொன்று, கடல் நீரை வற்றச் செய்த வெற்றிவேலின் திறத்தைப் பாடினார்கள். தேவலோகத்துக் கன்னியர் பலர் முருகனை மணந்து கொள்ளத் தவங் கிடந்து வருகையில், அந்தச் சிவகுமாரன் மண்ணுலகத்தில் தமிழகத்துக்கு வந்து, காட்டில் தினைப்புனம் காத்து நின்ற மலைக்குறவர் மகளை மணந்துகொண்டதைப் புகழ்ந்து பாடினார்கள். வேலவனுடைய கருணைத் திறத்தைக் கொண்டாடினார்கள். இத்தகைய பாடலும் ஆடலும் பறை ஒலியும் குழல் ஒலியுமாகச் சேர்ந்து பார்த்திருந்தவர்களையெல்லாம் வெறி கொள்ளச் செய்தன.

> **"பசியும் பிணியும் பகையும் அழிக!**
> **மழையும் வளமும் தனமும் பெருக!"**

என்ற வாழ்த்துக்களுடன் 'குரவைக் கூத்து முடிந்தது. பெண்கள் மேடையிலிருந்து இறங்கிச் சென்றார்கள்.

பின்னர், 'தேவராளன்', 'தேவராட்டி என்னும் ஆடவனும் பெண்ணும் வேலனாட்டம் ஆடுவதற்காக மேடை மீது வந்து நின்றனர். அவர்கள் இரத்த நிறமுள்ள ஆடைகளை உடுத்தியிருந்தனர். செக்கச் சிவந்த இரத்த நிறமுள்ள செவ்வலரிப் பூமாலைகளைச் சூட்டிக் கொண்டிருந்தனர். நெற்றியில் செந்நிறக் குங்குமத்தை அப்பிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய வாய்களும் வெற்றிலைப் பாக்கு மென்றதினால் சிவந்து இரத்த நிறமாகக் காணப்பட்டன. கண்கள்



கோவைப் பழம் போலச் சிவந்திருந்தன.

முதலில் சாந்தமாகவே ஆட்டம் ஆரம்பித்தது. தனித்தனியாகவும் கைகளைக் கோத்துக் கொண்டும் ஆடினார்கள். நேரமாக ஆக, ஆட்டத்தில் வெறி மிகுந்தது. மேடையிலே ஒரு பக்கத்தில் சாத்தியிருந்த வேலைத் தேவராட்டி கையில் எடுத்துக் கொண்டாள். தேவராளன் அதை அவள் கையிலிருந்து பிடுங்க முயன்றான். தேவராட்டி தடை செய்தாள். இறுதியில் தேவராளன் மேடை அதிரும்படியாக ஒரு பெரிய குதிகுதித்து, ஒரு பெரிய தாண்டல் தாண்டி தேவராட்டி கையிலிருந்த வேலைப் பிடுங்கிக் கொண்டான். தேவராட்டி அந்த வேலைக் கண்டு அஞ்சிய பாவனையுடனே மேடையிலிருந்து இறங்கி விட்டாள்.

பிறகு, தேவராளன் தனியே மேடை மீது நின்று கையில் வேல் பிடித்து வெறியாட்டம் ஆடினான். சூரன் முதலிய அசுர கணங்கள் தவிடுபொடியாகி விழுந்தனர். அறுக்கப்பட்ட சூரன் தலை திரும்பத் திரும்ப முளைத்தது. முளைக்க முளைக்க வேலனுடைய உக்கிரம் அதிகமாக வளர்ந்தது. அவனுடைய கண்ணிலிருந்து தீப்பொறி பறந்தது. கடைசியில் சூரபத்மன் இறந்து விழுந்தான். தேவராளனும் கைவேலைக் கீழே போட்டான்.

இப்போது மற்ற வாத்தியங்கள் எல்லாம் நின்று விட்டன. உடுக்கின் சத்தம்

மட்டும் கேட்டது. மேடைக்கு அருகே நின்று பூசாரி ஆவேசமாக உடுக்கு அடித்தான். தேவராளன் உடம்பில் ஒவ்வொரு அணுவும் பதறி ஆடியது. "சந்நதம் வந்து விட்டது'' என்று சபையில் ஒருவருக்கொருவர் மெதுவாகப் பேசிக் கொண்டார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் பூசாரி ஆவேசம் வந்து ஆடிய தேவராளனைப் பார்த்து, "வேலா! முருகா! தேவசேநாபதி! கந்தா! சூரசம்ஹாரா! அடியார்களுக்கு அருள்வாக்குச் சொல்ல வேண்டும்!'' என்று வேண்டிக் கொண்டான்.

''கேளடா! சொல்லுகிறேன்! என்ன வேண்டுமோ, கேள்!'' என்று சந்நதம் வந்தவன் கூவினான்.

''மழை பொழியுமா? வெள்ளம் பெருகுமா? நாடு செழிக்குமா? நினைத்த காரியம் கைகூடுமா?'' என்று பூசாரி கேட்டான்.

"மழை பொழியும்! வெள்ளம் பெருகும்! நாடு செழிக்கும்! நினைத்த காரியம் கைகூடும்! ஆனால், என் அன்னைக்கு நீங்கள் பூசை போடவில்லை! துர்க்கை பலி கேட்கிறாள். பத்திரகாளி பலி கேட்கிறாள். மகிடாசுரனை வதைத்த சண்டி கேசுவரி பலி கேட்கிறாள்!....'' என்று சந்நதக்காரன் ஆவேசத்துடன் ஆடிக் கொண்டே அலறினான்.

"என்ன பலி வேண்டும்?" என்று பூசாரி கேட்டான்.

"கேட்டால் கொடுப்பீர்களா?'' என்றான் வெறியாடியவன்.

"கொடுப்போம்; கட்டாயம் கொடுப்போம்!'' என்றான் பூசாரி.

"மன்னர் குலத்து இரத்தம் கேட்கிறாள். ஆயிரங்கால அரசர் குலத்து இரத்தம் கேட்கிறாள்!'' என்று வெறியாடியவன் கோர பயங்கரக் குரலில் கூவினான்.

மேடைக்கு முன்னால் வீற்றிருந்த பழுவேட்டரையர் சம்புவரையர், மழவரையர் முதலிய பிரமுகர்கள் ஒருவருடைய முகத்தை ஒருவர் நோக்கினார்கள். அவர்களுடைய செக்கச் சிவந்த வெறி கொண்ட கண்கள் சங்கேதமாகப் பேசிக் கொண்டன.

சம்புவரையர் பூசாரியைப் பார்த்துத் தலையை அசைத்துச் சமிக்ஞை செய்தார்.

பூசாரி உடுக்கு அடிப்பதை நிறுத்தினான். வெறியாட்டம் ஆடிய தேவராளன் அடியற்ற மரம் போல் மேடை மீது விழுந்தான். தேவராட்டி ஓடிவந்து அவனைத் தூக்கி எடுத்துக் கொண்டு போனாள்.

சபை மௌனமாகக் கலைந்தது. வெளியில் எங்கேயோ தூரத்தில் நரிகள் ஊளையிடும் சப்தம் கேட்டது.

இத்தனை நேரம் பார்த்துக் கேட்ட




வற்றினால் பரபரப்புக்குள்ளாகியிருந்த வந்தியத்தேவன், நரிகள் ஊளையிடும் சப்தம் வந்த திசையை நோக்கினான். அங்கே, அம் மாளிகையின் வெளிமதில் சுவரின் மீது ஒரு தலை தெரிந்தது. அது ஆழ்வார்க்கடியானுடைய தலைதான்! ஒரு கணம் வந்தியத்தேவன் ஒரு பயங்கர உணர்ச்சிக்கு உள்ளானான். ஆழ்வார்க்கடியானுடைய தலையை வெட்டி அந்த மதில் மேல் வைத்திருந்தது போன்ற பிரமை உண்டாயிற்று. கண்ணிமைகளை மூடித் திறந்து பார்த்தபோது அந்தத் தலையை அங்கே காணவில்லை! அத்தகைய வீண்சித்தப் பிரமைக்குத் தான் உள்ளானது குறித்து வெட்கமடைந்தான். இதுவரை அனுபவித்து அறியாத வேறு பலவகை உணர்ச்சிகளும் அவன் உள்ளத்தைக் கலங்கச் செய்தன.

ஆறாம் அத்தியாயம்

நடுநிசிக் கூட்டம்

குரவைக் கூத்துக்கும் வெறியாட்டுக்கும் பின்னர், வந்திருந்த விருந்தினருக்குப் பெருந்தர விருந்து நடைபெற்றது. வல்லவரையனுக்கு விருந்து ருசிக்கவில்லை. அவன் உடம்பு களைத்திருந்தது; உள்ளம் கலங்கியிருந்தது. ஆயினும் அவன் பக்கத்திலிருந்த அவனுடைய நண்பன் கந்தமாறன் அங்கிருந்த மற்ற விருந்தாளிகள் யார் யார் என்பதைப் பெருமிதத்துடன் எடுத்துக் கூறினான்.

பழுவேட்டரையரையும், சம்புவரையரையுந் தவிர அங்கே மழபாடித் தென்னவன் மழவரையர் வந்திருந்தார்; குன்றத்தூர்ப் பெருநிலக்கிழார் வந்திருந்தார்; மும்முடிப் பல்லவரையர் வந்திருந்தார். தான்தொங்கிக் கலிங்கராயர், வணங்காமுடி முனையரையர், தேவசேநாதிபதிப் பூவரையர், அஞ்சாத சிங்கமுத்தரையர், இரட்டைக் குடை ராஜாளியார், கொல்லிமலைப் பெருநில வேளார் முதலியோரை இன்னின்னார் என்று கந்தமாறன் தன்



நண்பனுடைய காதோடு சொல்லிப் பிறர் அறியாதபடி சுட்டிக்காட்டித் தெரியப் படுத்தினான்.

இந்தப் பிரமுகர்கள் சாமான்யப்பட்டவர்கள் அல்ல; எளிதாக ஒருங்குசேர்த்துக் காணக்கூடியவர்களுமல்ல. அநேகமாக ஒவ்வொருவரும்



குறுநில மன்னர்கள்; அல்லது குறுநில மன்னருக்குரிய மரியாதையைத் தங்கள் வீரச் செயல்களினால் அடைந்தவர்கள். ராஜா அல்லது அரசர் என்பது மருவி அக்காலத்தில் **அரையர்** என்று வழங்கி வந்தது. சிற்றரசர்களுக்கும், சிற்றரசர்களுக்குச் சமமான சிறப்பு வாய்ந்தவர்களுக்கும் அரையர் என்ற பட்டப் பெயர் சேர்த்து வழங்கப்பட்டது. அவரவர்களுடைய ஊரை மட்டும் கூறி அரையர் என்று சேர்த்துச் சொல்லும் மரபும் இருந்தது.

அந்த நாளில் சிற்றரசர்கள் என்றால் பிறப்பினால் மட்டும் 'அரசர்' பட்டம் பெற்று அரண்மனைச் சுகபோகங்களில் திளைத்து வாழ்ந்திருப்பவர்கள் அல்ல. போர்க்களத்தில் முன்னணியில் நின்று போரிடச் சித்தமாயுள்ள வீராதி வீரர்கள் தாம் தங்கள் அரசுரிமையை நீடித்துக் காப்பாற்றிக் கொள்ள முடியும். எனவே



ஒவ்வொருவரும் பற்பல போர்க்களங்களில் போரிட்டுப் புகழுடன் காயங்களையும் அடைந்தவர்களாகவே இருப்பார்கள். இன்று அத்தனை பேரும் பழையாறைச் சுந்தரசோழ சக்கரவர்த்தியின் ஆட்சிக் கடங்கித் தத்தம் எல்லைக்குள் அதிகாரம் செலுத்தி வந்தார்கள். சிலர் சோழப் பேரரசில் பெருந்தரத்து அரசாங்க அதிகாரிகளாகவும் பதவி வகித்து வந்தார்கள்.

இவ்வளவு முக்கியமான சோழ சாம்ராஜ்யப் பிரமுகர்கள் எல்லாரையும் ஓரிடத்தில் பார்த்தது பற்றி வல்லவரையன் நியாயமாக உவகை கொண்டிருக்க வேண்டும். ஆயினும் அவனுடைய உள்ளத்தில் உவகை ஏற்படவில்லை.

"இவ்வளவு பேரும் எதற்காக இங்கே கூடியிருக்கிறார்கள்?" என்ற எண்ணம் அவனுக்கு அடிக்கடி தோன்றியது. ஏதேதோ தெளிவில்லாத ஐயங்கள் அவன் உள்ளத்தில் தோன்றி அலைத்தன.

மனத்தில் இத்தகைய குழப்பத்துடனேயே வல்லவரையன் தனக்கென்று கந்தமாறன் சித்தப்படுத்திக் கொடுத்திருந்த தனி இடத்தில் படுக்கச் சென்றான். விருந்தினர் பலர் வந்திருந்தபடியால் வல்லவரையனுக்கு அம் மாபெரும் மாளிகையின் மேல்மாடத்தில் ஒரு மூலையிலிருந்த திறந்த மண்டபமே படுப்பதற்குக் கிடைத்தது. "நீ மிகவும் களைத்திருக்கிறாய்; ஆகையினால் நிம்மதியாகப் படுத்துத் தூங்கு. மற்ற விருந்தாளிகளைக் கவனித்துவிட்டு நான் உன் பக்கமே வந்து படுத்துக் கொள்கிறேன்" என்று கந்த மாறன் சொல்லிவிட்டுப் போனான்.

படுத்தவுடனே வந்தியத்தேவனுடைய கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்தது. மிக விரைவில் நித்திராதேவி அவனை ஆட்கொண்டாள். ஆனாலும் என்ன பயன்? மனம் என்பது ஒன்று இருக்கிறதே, அதை நித்திரா தேவியினால் கூடக் கட்டுக்குள் வைக்க முடிவதில்லை. உடல் அசைவற்றுக் கிடந்தாலும், கண்கள் மூடியிருந்தாலும், மனத்தின் ஆழத்தில் பதிந்து கிடக்கும் எண்ணங்கள் கனவாகப் பரிணமிக்கின்றன. பொருளில்லாத, அறிவுக்குப் பொருத்தமில்லாத, பற்பல நிகழ்ச்சிகளும் அநுபவங்களும் அந்தக் கனவு லோகத்தில் ஏற்படுகின்றன.

எங்கேயோ வெகு தூரத்திலிருந்து ஒரு நரி ஊளையிடும் சப்தம் கேட்டது. ஒரு நரி, பத்து நரியாகி, நூறு நரியாகி, ஏகமாக ஊளையிட்டன! ஊளையிட்டுக் கொண்டே வந்தியத்தேவனை நெருங்கி, நெருங்கி, நெருங்கி வந்தன. காரிருளில் அந்த நரிகளின் கண்கள் சிறிய சிறிய நெருப்புத் தணல்களைப் போல் ஜொலித்துக் கொண்டு அவனை அணுகி வந்தன.

மறுபக்கம் திரும்பி ஓடித் தப்பிக்கலாம் என்று வந்தியத்தேவன் பார்த்தான். அவன் பார்த்த மறுதிசையில் பத்து, நூறு, ஆயிரம் நாய்கள் ஒரே மந்தையாகக் குரைத்துக் கொண்டு பாய்ந்து ஓடி வந்தன. அந்த வேட்டை நாய்களின் கண்கள் அனல் பொறிகளைப் போல் ஜொலித்தன.

நரிகளுக்கும் வேட்டை நாய்களுக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டால் தன்னுடைய கதி என்னவாகும் என்று எண்ணி வந்தியத்தேவன் நடுநடுங்கினான். நல்ல வேளை, எதிரே ஒரு கோயில் தெரிந்தது. ஓட்டமாக ஓடித் திறந்திருந்த கோயிலுக்குள் புகுந்து வாசற்கதவையும் தாளிட்டான். திரும்பிப் பார்த்தால், அது காளி கோயில் என்பது தெரிந்தது. அகோரமாக வாயைத் திறந்து கொண்டிருந்த காளி மாதாவின் சிலைக்குப் பின்னாலிருந்து பூசாரி ஒருவன் வெளிக்கிளம்பி வந்தான். அவன் கையில் ஒரு பயங்கரமான வெட்டரிவாள் இருந்தது. "வந்தாயா? வா!" என்று சொல்லிக் கொண்டு பூசாரி அருகில் நெருங்கி, நெருங்கி, நெருங்கி வந்தான்.

"நீ பிறந்த அரச குலத்தின் வரலாறு என்ன? எத்தனை ஆண்டுகளாக உன் குலத்தினர் அரசு புரிகின்றனர்? உண்மையைச் சொல்" என்று பூசாரி கேட்டான்.

"வாணர்குலத்து வல்லவரையர் முந்நூறு ஆண்டுகள் அரசு புரிந்தவர்; என் தந்தையின் காலத்தில் வைதும்பராயர்களால் அரசை இழந்தோம்" என்றான் வந்தியத்தேவன்.

"அப்படியானால், நீ தகுந்த பலி அல்ல! ஓடிப் போ!" என்றான் பூசாரி.

திடீரென்று காளிமாதாவின் இடத்தில் கண்ணபெருமான் காட்சி அளித்தான். கண்ணன் சந்நிதியில் இரண்டு பெண்கள்

கையில் பூமாலையுடன் ஆண்டாள் பாசுரம் பாடிக் கொண்டு வந்து நடனம் ஆடினார்கள். இதை வல்லவரையன் பார்த்துப் பரவசமடைந்திருக்கையில், அவனுக்குப் பின்புறத்தில், "கண்டோம், கண்டோம், கண்டோம், கண்ணுக்கினியன கண்டோம்" என்ற பாடலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். பாடியவன் ஆழ்வார்க்கடியான் நம்பிதான். இல்லை. ஆழ்வார்க்கடியானுடைய தலை பாடியது! அந்தத் தலை மட்டும் பலி பீடத்தில் வைக்கப்பட்டிருந்தது!

இந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக்காமல் வல்லவரையன் திரும்பினான்; தூணில் முட்டிக் கொண்டான். கனவு கலைந்தது. கண்கள் திறந்தன. ஆனால் கனவையும் நனவையும் ஒன்றாய்ப் பிணைத்த ஒரு காட்சியை அவன் காண நேர்ந்தது.



அவன் படுத்திருந்த இடத்துக்கு நேர் எதிர்ப்புறத்தில் கடம்பூர் மாளிகைச் சுற்று மதிலின் மேலே ஒரு தலை தெரிந்தது. அது, அந்த ஆழ்வார்க்கடியான் நம்பியின் தலைதான். இந்தத் தடவை அது கனவல்ல, வெறும் பிரமையும் அல்ல வென்பது நிச்சயம். ஏனெனில், எத்தனை நேரம் பார்த்தாலும் அந்தத் தலை அங்கேயே இருந்தது. அது வெறும் தலை மட்டுமல்ல, தலைக்குப் பின்னாலே உடம்பு இருக்கிறது என்பதையும் எளிதில் ஊகிக்கக்கூடிய தாயிருந்தது. ஏனெனில், ஆழ்வார்க்கடியானுடைய கைகள் அந்த மதில் ஓரத்தின் விளிம்பைப் பிடித்துக் கொண்டிருந்தன. அதோடு, அவன் வெகு கவனமாக மதிலுக்குக் கீழே உட்புறத்தை உற்றுநோக்கிக் கொண்டிருந்தான். அவன் அவ்வளவு கவனமாக அங்கே என்னத்தைப் பார்க்கிறான்!... இதில் ஏதோ வஞ்சகச் சூழ்ச்சி இருக்கவே வேண்டும். ஆழ்வார்க்கடியான் நல்ல நோக்கத்துடன் அங்கு வந்திருக்க முடியாது. ஏதோ துஷ்ட நோக்கத்துடன் தீய செயல் புரிவதற்கே வந்திருக்கிறான். அவன் அவ்விதம் தீச் செயல் புரியாமல் தடுப்பது கந்தமாறனின் உயிர் நண்பனாகிய தன் கடமையல்லவா? தனக்கு அன்புடன் ஒரு வேளை அன்னம் அளித்தவர்களின் வீட்டுக்கு நேரக்கூடிய தீங்கைத் தடுக்காமல் தான் சும்மா படுத்துக் கொண்டிருப்பதா?

வல்லவரையன் துள்ளி எழுந்தான். பக்கத்தில் கழற்றி வைத்திருந்த உறையுடன் சேர்ந்த கத்தியை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டான். ஆழ்வார்க்கடியானுடைய தலை காணப்பட்ட திக்கை நோக்கி நடந்தான்.

மாளிகை மேல்மாடத்தில் ஒரு மூலையிலிருந்த மண்டபத்தில் அல்லவா வல்லவரையன் படுத்திருந்தான்? அங்கிருந்து புறப்பட்டு மதில் சுவரை நோக்கி நடந்த போது, மேல்மாடத்தை அலங்கரித்த மண்டபச் சிகரங்கள், மேடைகள், விமான ஸ்தூபிகள், தூண்கள் ஆகியவற்றைக் கடந்தும், தாண்டியும், சுற்றி வளைத்தும் நடக்க வேண்டியதாயிருந்தது. சற்று தூரம் அவ்விதம் நடந்த பிறகு, திடீரென்று எங்கிருந்தோ பேச்சுக்குரல் வந்ததைக் கேட்டு, வல்லவரையன் தயங்கி நின்றான். அங்கிருந்த ஒரு தூணைப் பிடித்துக் கொண்டு, தூணின் மறைவில் நின்றபடி எட்டிப் பார்த்தான். கீழே குறுகலான முற்றம் ஒன்றில், மூன்று பக்கமும் நெடுஞ் சுவர்கள் சூழ்ந்திருந்த இடத்தில் பத்துப் பன்னிரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். பாதி மதியின் வெளிச்சத்தை நெடுஞ் சுவர்கள் மறைத்தன. ஆனால் ஒரு சுவரில் பதித்

திருந்த இரும்பு அகல் விளக்கில் எரிந்த தீபம் கொஞ்சம் வெளிச்சம் தந்தது.

அங்கிருந்தவர்கள் அத்தனை பேரும் அன்று இரவு விருந்தின் போது அவன் பார்த்த பிரமுகர்கள்தான்; சிற்றரசர்களும் சோழ சாம்ராஜ்ய அதிகாரிகளுந்தான். அவர்கள் ஏதோ மிக முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கலந்தாலோசிக்கவே நள்ளிரவு நேரத்தில் அங்கே கூடியிருக்க வேண்டும். அவர்கள் என்ன செய்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பதைத்தான் ஆழ்வார்க்கடியான் மதில் சுவர் மீதிலிருந்து அவ்வளவு கூர்மையாகக் கவனித்துக் கொண்டு வருகிறான். ஆழ்வார்க்கடியான் மிகப் பொல்லாத கெட்டிக்காரன் என்பதில் ஐயமில்லை. அவன் இருக்குமிடத்திலிருந்து கீழே கூடிப் பேசுகிறவர்களை ஒருவாறு பார்க்க முடியும்; அவர்களுடைய பேச்சை நன்றாய்க் கேட்க முடியும். ஆனால் கீழேயுள்ளவர்கள் ஆழ்வார்க்கடியானைப் பார்க்க முடியாது. அந்த இடத்தில் மாளிகைச் சுவர்களும் மதில் சுவர்களும் அவ்வாறு அமைந்திருந்தன. அத்தகைய இடத்தை ஆழ்வார்க்கடியான் எப்படியோ கண்டுபிடித்துக் கொண்டு வந்திருக்கிறான்! கெட்டிக்காரன் தான்; சந்தேகமில்லை. ஆனால் அவனுடைய கெட்டிக்காரத்தனமெல்லாம் இந்த வாணர்குலத்து வந்தியத்தேவனிடம் பலிக்காது! அந்த வேஷதாரி வைஷ்ணவனைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வந்து... ஆனால் அப்படி அவனைப் பிடிப்பதாயிருந்தால், கீழே கூடியுள்ளவர்களுடைய கவனத்தைக் கவராமல் அவன் உள்ள மதில் சுவரை அணுக முடியாது. அப்படி அவர்கள் பார்க்கும்படி தான் நடந்து போவதில் ஏதேனும் அபாயம் இருக்கலாம். "இன்றைக்கு நான் பார்த்து இவன் இங்கே வந்திருக்க வேண்டியதில்லை!" என்று சம்புவரையர் கூறியது அவன் நினைவுக்கு வந்தது. இவர்கள் எல்லாரும் ஏதோ முக்கிய காரியமாகக் கலந்தாலோசிப்பதற்காக இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுடைய யோசனையைப் பற்றிப் பிறர் அறிந்து கொள்வதில் அவர்களுக்கு விருப்பமில்லையென்பது தெளிவு. அப்படியிருக்கும்போது தன்னைத் திடீரென்று அவர்கள் பார்த்தால், தன்பேரில் சந்தேகப்பட்டு விடலாம் அல்லவா? ஆழ்வார்க்கடியானைப் பற்றி அவர்களுக்குத் தான் சொல்வதற்குள் அவன் மதில் சுவரிலிருந்து வெளிப்புறம் குதித்து ஓடிவிடுவான். ஆகையால் தன் பேரில் சந்தேகம் ஏற்படுவது தான் மிச்சமாகும். "படுத்திருந்தவன் இங்கு எதற்காக வந்தாய்?" என்றால் என்ன விடை சொல்லுவது? கந்த மாறனின் நிலைமையை சங்கடத்துக்கு உள்ளாக்குவதாகவே முடியும். ஆகா! அதோ கந்தமாறன் இந்தக் கூட்டத்தின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறான். அவனும் இந்தக் கூட்டத்தாரின் ஆலோசனையில் கலந்து கொண்டிருக்கிறான் போலும்! காலையில் கந்தமாறனைக் கேட்டால், எல்லாம் தெரிந்துவிடுகிறது.



அச்சமயம் அக் கூட்டத்தாருக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த மூடு பல்லக்கு வந்தியத்தேவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. ஆ! இந்தப் பல்லக்கு பழுவேட்டரையருடன் அவருடைய யானையைத் தொடர்ந்து வந்த பல்லக்கு அல்லவா? அதற்குள்ளேயிருந்த பெண், ஒருகணம் திரையை நீக்கி வெளியே பார்த்த பெண், இப்போது இந்த மாளிகையில் எந்தப் பகுதியில் இருக்கிறாளோ? அந்தப்புரத்துக்குக் கூட அவளை இந்தக் கிழவர் அனுப்பவில்லையாமே?

கொஞ்சம் வயதானவர்கள் இளம் பெண்களை மணந்து கொண்டாலே இந்தச் சங்கடந்தான். சந்தேகம் அவர்கள் பிராணனை வாங்குகிறது. ஒரு நிமிஷம் கூடத் தங்களுடைய இளம் மனைவியை விட்டுப் பிரிந்திருக்க அவர்களுக்கு மனம் வருவதில்லை. ஒருவேளை, இப்போது கூட இந்தப் பல்லக்கிலேயே பழுவேட்டரையருடைய இளம் மனைவி இருக்கிறாளோ, என்னமோ? ஆகா! இந்த வீராதி வீரரின் தலைவிதியைப் பார்! இந்த வயதில் ஓர் இளம்பெண்ணிடம் அகப்பட்டுக் கொண்டு அவளுக்கு அடிமையாகித் தவிக்கிறார்! அப்படியொன்றும் அவள் ரதியோ, மேனகையோ, ரம்பையோ இல்லை! வந்தியத்தேவன் ஒரு கணம் அவளைப் பார்த்தபோது ஏற்பட்ட அருவருப்பு உணர்ச்சியை அவன் மறக்கவில்லை. அத்தகையவளிடம் இந்த வீரப் பழுவேட்டரையருக்கு என்ன மோகமோ தெரியவில்லை. அதைவிட அதிசயமானது ஆழ்வார்க்கடியானது பைத்தியம். இந்தப் பல்லக்கு இங்கே வைக்கப்பட்டிருப்பதினாலேதான் அவனும் சுவர்மேல் காத்திருக்கிறான் போலும்! ஆனால் அவனுக்கும் அவளுக்கும் என்ன உறவோ என்னமோ, நமக்கு என்ன தெரியும்? அவள் ஒருவேளை அவனுடைய சகோதரியாயிருக்கலாம் அல்லது காதலியாகவும் இருக்கலாம். பழுவேட்டரையர் பலவந்தமாக அவளைக் கவர்ந்து கொண்டு போயிருக்கலாம்! அவ்வாறு அவர் செய்யக்கூடியவர் தான். அதனால் அவளைப் பார்த்துப் பேச ஒரு சந்தர்ப்பத்தை ஆழ்வார்க்கடியான் எதிர்பார்த்து இப்படியெல்லாம் அலைகிறான் போலும்! இதைப் பற்றி நமக்கு என்ன வந்தது? பேசாமல் போய்ப் படுத்துத் தூங்கலாம்.

இப்படி அந்த இளைஞன் முடிவு செய்த சமயத்தில், கீழே நடந்த பேச்சில் தன்னுடைய பெயர் அடிபடுவதைக் கேட்டான். உடனே சற்றுக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான்.

"உம்முடைய குமாரனுடைய சிநேகிதன் என்று ஒரு பிள்ளை வந்திருந்தானே? அவன் எங்கே படுத்திருக்கிறான்? நம்முடைய பேச்சு எதுவும் அவனுடைய காதில் விழுந்து விடக் கூடாது. அவன் வடதிசை மாதண்ட நாயகரின் கீழ் பணி செய்யும் ஆள் என்பது நினைவிருக்க வேண்டும். நம்முடைய திட்டம் உறுதிப்பட்டு நிறைவேறும் காலம் வருவதற்குள் வேறு யாருக்கும் இதைப் பற்றித் தெரியக் கூடாது. அந்தப் பிள்ளைக்கு ஏதாவது கொஞ்சம் தகவல் தெரிந்துவிட்டது என்ற சந்தேகமிருந்தால் கூட அவனை இந்தக் கோட்டையிலிருந்து வெளியே அனுப்பக் கூடாது. ஒரேயடியாக அவனை வேலை தீர்த்து விடுவது உசிதமாயிருக்கும்..."

இதைக் கேட்ட வந்தியத்தேவனுக்கு எப்படி இருந்திருக்குமென்று நேயர்களே ஊகித்துக் கொள்ளலாம். ஆனாலும் அந்த இடத்தை விட்டு அவன் நகரவில்லை. அவர்களுடைய பேச்சை முழுதும் கேட்டேவிடுவது என்று உறுதிசெய்து கொண்டான். வடதிசை மாதண்ட நாயகர் யார்? சுந்தரசோழ சக்கரவர்த்தியின் மூத்த குமாரர். அடுத்தபடி சோழ சிம்மாசனம் ஏறவேண்டிய பட்டத்து இளவரசர். அவரிடம் தான் வேலை பார்ப்பதில் இவர்களுக்கு என்ன ஆட்சேபம்? அவருக்குத் தெரியக்கூடாத விஷயம் இவர்கள் என்ன பேசப் போகிறார்கள்?

அச்சமயம் கந்தமாறன் தன் சிநேகிதனுக்குப் பரிந்து பேசியது வல்லவரையனின் காதில் விழுந்தது.

"மேல்மாடத்து மூலை மண்டபத்தில் வந்தியத்தேவன் படுத்து நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான். இந்தக் கூட்டத்தின் பேச்சு அவன் காதில் விழப் போவதில்லை. தனக்குச் சம்பந்தமில்லாத காரியத்தில் அவன் தலையிடுகிறவனும் அல்ல. அப்படியே அவன் ஏதாவது தெரிந்து கொண்டாலும், அதனால் உங்கள் யோசனைக்குப் பாதகம் ஒன்றும் நேராது. அதற்கு நான் பொறுப்பு!'' என்றான் கந்தமாறன்.

''உனக்கு அவனிடம் அவ்வளவு நம்பிக்கை இருப்பது குறித்து எனக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் எங்களில் யாருக்கும் அவனை முன்பின் தெரியாது. ஆகையினால்தான் எச்சரிக்கை செய்தேன். நாம் இப்போது பேசப் போகிறதோ, ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் உரிமை பற்றிய விஷயம். அஜாக்கிரதை காரணமாக ஒரு வார்த்தை வெளியில் போனாலும் அதனால் பயங்கரமான விபரீதங்கள் ஏற்படலாம். இது உங்கள் எல்லாருக்குமே நினைவிருக்க வேண்டும்!'' என்றார் பழுவேட்டரையர்.

(தொடரும்)

கொள்ளையோ கொள்ளை!

சில நாளைக்கு முன்னால் காப்பிக் கொட்டை விஷயம் ஒரு பெருந் தொல்லையாக இருந்து வந்தது. இப்போது அது கொள்ளையாக மாறிப்போயிருக்கிறது! இரண்டு வாரத்துக்கு முன்னால் காப்பிக் கொட்டை விலை வீசை மூன்று ரூபாய்! இன்று வீசை ஆறு ரூபாய்! பைசாவுக்குப் பைசா விலை அதிகமாகியிருக்கிறது! அவ்வளவுதான். அதிக விலைக்காவது கிடைக்கிறதா என்றால், கிடையாது! அரை வீசை காப்பிக் கொட்டைக்காக ஆனரபிள் ஹைகோர்ட் ஜட்ஜ்....... அவர்கள் ஆள்மேல் ஆள்விட்டு சிபார்சு மேல் சிபார்சு செய்து 'போன்' மேல் 'போன்' பேசிச் சம்பாதிக்க வேண்டியிருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

தென்னிந்தியாவிலுள்ள மத்திய வகுப்பார் ஏற்கெனவே எத்தனையோ கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இந்தக் காப்பிக் கொட்டைக் கொள்ளையும் இப்போது சேர்ந்து அவர்களை மேலும் வதைக்கத் தொடங்கியிருக்கிறது.

இந்தக் காப்பிக் கொள்ளைக்குக் காரணம் நமது இந்திய சர்க்காரின் அரை குறைத் திட்டம் என்பதை நினைக்கும் போது வேதனை அதிகமாகிறது.

பாதிக் கிணறு தாண்டினால்?

காப்பிக் கொட்டை விஷயமாகப் பாதிக் கிணறு தாண்டுவது போன்ற காரியத்தை இந்திய சர்க்கார் செய்திருக்கிறார்கள். விலைக் கட்டுப்பாட்டை மட்டும் எடுத்து விட்டார்கள்.

ஆனால் காப்பிக் கொட்டை உற்பத்தி செய்யும் தோட்டக்காரர்களும் காப்பிக் கொட்டை வியாபாரிகளும் எப்படியோ போகட்டும் சும்மா என்று விட்டு விடுகிறார்களா என்றால், அதுதான் கிடையாது.

இந்தியக் காப்பி போர்டு என்று ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. அது இந்திய அரசாங்கத்தின் அதிகாரம் பெற்ற காப்பிக் கொட்டை முதலாளிகள் ஸ்தாபனம்.



கொள்ளையோ

இந்தியக் காப்பி போர்டார் எல்லாக் காப்பிக் கொட்டைகளையும் திரட்டிச் சேகரித்துக் கொள்ளுகிறார்கள். எங்கேயாவது ஒரு மூலை முடுக்கில் ஏலம் போடுகிறார்கள். அந்தந்த இடத்துக்கு வேண்டிய அளவு ஏலம் போடுகிறார்களா என்றால் அதுவும் இல்லை. சென்னை நகருக்கு 150 டன் காப்பிக் கொட்டை தேவை. நூற்றைம்பது டன்னுக்குப் பதிலாகப் பதினேழு டன் சமீபத்தில் ஏலம் போட்டார்கள். இப்படிக் குறைவாக ஏலம் போடும் இடங்களில் கொள்ளை லாபம் பெற விரும்பும் கள்ள வியாபாரிகள் திரண்டு வந்து ஏலம் எடுக்கிறார்கள். சென்ற மாதம் 120 ரூபாய்க்கு விற்ற ஒரு 'அந்தர்' காப்பிக் கொட்டை இந்த மாதம் 250 ரூபாய்க்கு ஏலம் போயிருக்கிறது. இப்படி அதிக

அமரர் கல்கி

கொள்ளை!

விலைக்கு ஏலம் எடுக்கிறவர்கள் வாங்கிய காப்பிக் கொட்டையை இன்னும் அதிக விலைக்கு விற்பதற்காக அமுக்கி வைத்துக் கொள்கிறார்கள்! ஆகவே, வழக்கமாகக் காப்பிக் கொட்டை வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்குக் காப்பி கொட்டை கிடைப்பதில்லை.

இந்தியாவில் காப்பிப் பழக்கம் உள்ளவர்கள் எல்லாருக்கும் தேவையான அளவு காப்பிக் கொட்டை இந்நாட்டிலேயே விளைகிறது. நியாயமான விலைக்குக் காப்பிக் கொட்டையை விற்றுத் தோட்டக்காரர்கள், வியாபாரிகள் அனைவரும் நியாயமான லாபத்தை அடையக் கூடும். அப்படியிருந்தும் இந்தக் கொள்ளையும் அநியாயமும் நடைபெறுவதற்குக் காரணம் இந்தியக் காப்பி போர்டு என்னும் அரசாங்க முத்திரை பெற்ற ஸ்தாபனந்தான். இப்படிக் கொள்ளையில் வருகிற பணம் இந்திய சர்க்காருக்குப் போனால், ஒருவாறு திருப்தியடைய இடம் உண்டு. "ஏதோ, நம் தலைவர்களின் சர்க்கார் நடக்கிறது; பணத்தட்டு இல்லாமல் ராஜ்யம் நன்றாய் நடக்கட்டும்; நாம் கஷ்டப்பட்டாலும் பாதகமில்லை!" என்று பல்லைக் கடித்துக் கொண்டிருக்கலாம். அப்படியும் இல்லாமல் கொள்ளை லாபப் பணம் எல்லாம் காப்பித் தோட்ட முதலாளிகளுக்கே போய்ச் சேருகிறது.

ஒன்று, இந்திய சர்க்கார் இந்தியக் காப்பி போர்டைக் கலைத்து விட்டு, "தோட்ட முதலாளி ஆயிற்று; காப்பிக் கொட்டை வியாபாரி ஆயிற்று; பொது ஜனம் ஆயிற்று" என விட்டு விட வேண்டும். இல்லாவிடில், காப்பிக் கொட்டையைக் கட்டுப்படுத்தி, எல்லா இடங்களுக்கும் போதிய அளவு காப்பிக் கொட்டை அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

இல்லாவிடில், பெரிய 'காப்பிக் கலகம்' நாட்டில் ஏற்படும் என்று எச்சரிக்கிறோம். ஒவ்வொரு நடுத்தர வகுப்பினர் வீட்டிலும் பொழுது விடிந்த உடனே ஏற்படக் கூடிய 'கலக'த்தைத்தான் குறிப்பிடுகிறோம்! அமெரிக்காவில் பாஸ்டன் துறைமுகத்தில் முன்னொரு சமயம் நடந்த டீ கலகத்தைப் போல் இங்கே நடக்குமென்று தோன்றவில்லை.



"பிரிட்டிஷ் கப்பலில் வரும் டீ எங்களுக்கு வேண்டாம்" என்று அமெரிக்கர், துறைமுகத்தில் நின்ற கப்பலில் ஏறி அதிலிருந்த தேயிலையை எல்லாம் கடலில் கொட்டி விட்டார்களாம்! அந்த விதமெல்லாம் இந்த நாட்டில் உள்ள நடுத்தர வகுப்பினர் செய்யச் சக்தி அற்றவர்கள். இந்திய சர்க்கார் அதிகாரிகளாகப் பார்த்து, மேற்படி அநியாயக் கொள்ளையை நிறுத்தினால்தான் காப்பி குடிப்பவர்களுக்கு விமோசனம்.

(என்ன சேதி?- கல்கி 14.3.48)



சுதந்திரக் குழந்தை

சுதந்திரக் குழந்தை அம்மா! இதை
நிரந்தரம் புரந்திட வேணும் அம்மா!

முந்தையர் செய்த நல் தவத்தாலே — பல
முனிவர்களின் யோக பலத்தாலே — நம்
எந்தை காந்தி மகான் இன்னுயிரைத் தியாகம்
செய்ததாலே பெற்ற செல்வம் அன்றோ? அம்மா!

ஆயிரம் ஆண்டுகள் அவனியிலே — நாம்
அடிமைகளாய் உழன்றோம் இருளினிலே — இள
ஞாயிறு போலிங்கே அவதரித்து — இந்த
ஞாலத்திலே உயர் மேன்மையெல்லாம் தந்த
(சுதந்திரக்....)

தினந்தோறும் மதலையின் இசைபாடி — நித்தம்
சிறந்து வளர்ந்திட வகை தேடி
கனவிலும் நினைவிலும் கொண்டாடி — இந்தக்
காசினியில் என்றும் நிகரில் புகழ்சூடி

கண்ணிலும் இனிய குடியரசு — அன்னை
புண்ணியத்தால் வந்த புது அரசு!
எண்ணில் அடங்கா முடியரசர் — எம்மை
ஏத்தி வணங்கிடும் மேட்டிமை தந்த — நம்
(சுதந்திரக் குழந்தை...)

— அமரர் கல்கி

(கல்கி குடியரசு மலர் — 1951)

புகழ் பெற்ற ஜோதிஷர், மந்திர சாஸ்திர நிபுணர் பண்டித காழியூர் ம. பத்மநாபன்



எனது தந்தையார் அடியேனுக்கு மந்திரோபதேசம் செய்யும் காட்சி

பிரபல ஜோதிஷர் (பண்டித காழியூர் பத்மநாபன்) காழியூர் ஸ்ரீனிவாச்சாரியாரின் மூத்த புதல்வரும், ஜோதிஷ மந்திர சாஸ்த்திரங்களில் 45 வருட காலம் நன்கு தேர்ச்சியும், ஆசீர்வாதமும், பெற்றவரால் மகத்தான சக்தி வாய்ந்த, யந்திரங்கள், சக்ரங்கள் (வெள்ளியில் தயாரிக்கப்படுகின்றன) மகாலக்ஷ்மி கவசம் ரூ. 250/- மகா சுதர்சன யந்திரம் ரூ. 250/- லக்ஷ்மி நரசிம்ம கவசம் ரூ. 350/- தனாகர்ஷண யந்திரம் ரூ. 350/- மகா சுதர்சன சக்கரம் ரூ. 600/- மஹாலக்ஷ்மி சக்கரம் ரூ. 600/- இவை தவிர அநேக விதமான யந்திரங்களும், கவசங்களும், (விசேஷ பூஜாக்ரமப்படிக்கு) தயாரித்து அனுப்பப்படும். வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை டி.டி. மூலம் அனுப்ப வேண்டும். தபால் செலவு ரூ. 50/- B.P.O. மூலம் அனுப்பி பெறலாம்.

கம்ப்யூட்டர் ஜாதகம் தமிழ்/ஆங்கிலம் ரூ. 50/- ஜாதகத்தின் பொதுப் பலன்கள் நேரில் சொல்வதற்கு ரூ. 100/- ஆயுள் பலன் (வருஷம், மாதம், தேதி, நேரம், ஊர்) ரூ. 200/- சாதாரண தபால் மூலம் அனுப்ப ரூ. 10/- பதிவுத் தபால் மூலம் அனுப்ப ரூ. 25/-

மூன்று கேள்விகளுக்கு ரூ. 50/- வேண்டுவோர் கடிதத் தொடர்பு கொண்டு விபரம் அறிந்து பணம் அனுப்பி சகல நன்மைகளும் அடைவீர்களாக.

பிரபல ஜோதிஷர்

பண்டித காழியூர் பத்மநாபன்

'தபோநிதி'

நெ. 5. வித்யோதயா முதல் மெயின் தெரு
த.பெ. எண்: 1411, தி. நகர்
சென்னை - 600 017. போன் : 8263814
தென் இந்தியா (கிளைகள் ஏதும் கிடையாது)

நேரில் சந்திக்க: காலை 8 மணி முதல் 11 மணி வரை

முக்கிய கவனிப்பு: தபால் மூலம் வரும் எல்லா கடிதங்களும் வெகு கண்டிப்பாக பரம இரகசியமாக வைக்கப்படுகின்றன. வீட்டில் கிரகதோஷம் மற்றும் எந்த தோஷங்களும் பாதிக்காமலிருப்பதற்கு, சுதர்சன ஹோமம், மகா சுதர்சன சக்கரம் பிரதிஷ்டை செய்து தரப்படும். உள்ளூர் வாசிகளுக்கு மட்டுமே செய்யப்படும். நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

ஆஸ்தீக அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கீழ்கண்ட புனித யாத்திரைகள் மேற்கொள்ளப்படுகிறது.

1. ***8.4.98*** *முதல் 9 நாட்கள்- மதுரை-திருபரங்குன்றம்-அழகர்கோயில்-பழமுதிர்சோலை-பழனி-குருவாயூர்-மருதமலை-காலடி-சபரிமலை.*
2. ***9.5.98*** *முதல் 11 நாட்கள் கொண்ட திரிவேணி-காசி-கயா மற்றும் அதை சுற்றி உள்ள இடங்கள்.*
3. ***29.5.98*** *முதல் 9 நாட்கள் கொண்ட உடுப்பி-கொல்லூர்-தர்மஸ்தலா-அன்னபூர்ணா-சிருங்கேரி மற்றும் அதை சுற்றியுள்ள இடங்கள்.*
4. ***21.7.98*** *முதல் 8 நாட்கள் கொண்ட குற்றாலம்-பாபநாஸம்-ஆடி அம்மாவாசைக்கு பாணதீர்தம்-திருநெல்வேலி-திருசெந்தூர்-நாகர்கோவில்-சுசீந்திரம்-கன்யாகுமாரி-திருவனந்தபுரம் (ஆடி அம்மாவாசைக்கு பாணதீர்த்த தர்பணம் செய்தல் சிறந்தது)*
5. ***8.8.98*** *முதல் 11 நாட்கள் கொண்ட திரிவேணி-காசி-கயா-மற்றும் அதை சுற்றி உள்ள பல இடங்கள்.*
6. ***5.9.98*** *முதல் 11 நாட்கள் கொண்ட திரிவேணி-காசி-கயா மற்றும் அதை சுற்றி உள்ள பல இடங்கள்.*
7. ***19.10.98*** *அன்று தீபாவளிக்கு கங்கா ஸ்னானம் செய்ய 11 நாட்கள் கொண்ட காசி-கயா-திரிவேணி மற்றும் அதை சுற்றி உள்ள பல இடங்கள்.*


இதை தவிர சபரிமலையில் மாதாந்திர பூஜைக்கு யாத்திரைகள் மேற்கொள்ளபடும்.

மேலும் விவரங்களுக்கு

அன்னபூர்ணா யாத்திரா சர்வீஸ்

18, தெற்கு கங்கையம்மன் கோவில் 2வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
(சின்னமணி வள்ளியம்மாள் கல்யாண மண்டபம் அருகில்)
போன்: 4835862, 238900

ஜனவரி 21 முதல் 27 வரை




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உற்சாகத்தோடு ஆரம்பமாகிற வாரம் இது. எதைத் தொட்டாலும் ஜெயிச்சுக் காட்டுவீங்க. லைப்ல ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பிக்கற நேரமும் இதுதாங்க. பெத்த பிள்ளைங்களால சின்னச் சின்ன பிரச்னைகள் வரும்னாலும் எல்லாம் சுகமாவே முடியும். சங்கீதம், நாட்டியம் மாதிரியான கலைத் துறைக்காரங்களுக்குச் சுமாரான பலன்தான். அரசியல்வாதிங்க எதையும் யோசிச்சுச் செயல்படணும். எல்லோருமே கொடுக்கல் - வாங்கலில் உஷாராயிருக்கணும். ஷேர் கீரெல்லாம் இந்த வாரம் வாங்கிடாதீங்க. வயசுல பெரியவங்க உடல் நலத்தில கவனமா இருக்கணும்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

நகை, நட்டுன்னு வாங்கப் போறதால அம்மணிகள் சந்தோஷமா இருப்பாங்க. உடன் பிறப்புக்களால் (அட, கட்சிக்காரங்க இல்லீங்க) ஆதாயம் கிடைக்க சான்ஸ் இருக்கு. வீட்டுக்கு விருந்தாளிங்க வர்றதாலயோ, அல்லது திருமண ஏற்பாடுகள் நடக்கறதாலோ குடும்பமே சந்தோஷமா இருப்பீங்க. பண விஷயமும் தாராளமாவே இருக்கும். அலுவலகப் பணியாளர்கள், விவசாயிகளுக்கு நல்ல வளர்ச்சி இருக்கு. யாருகிட்டயாச்சும் கடன் கேட்டிருந்தா கண்டிப்பா கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் கவனம் காட்டணும். கம்ப்யூட்டர், கணிதம், ரசாயனத் துறையினருக்கு நல்ல வாரம்தான். ஸ்பெகுலேஷன், ஷேரெல்லாம் வேண்டாம்னாலும் கொடுக்கல் வாங்கலில் ஜாக்கிரதையா இருந்தா பயன் கிடைக்கும்.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

நீங்க நெனச்சதெல்லாம் சுலபமா நடக்கக் கூடிய வாரம் இதுதான். வெளிநாட்டுத் தொடர்பால ஆதாயம் கிடைக்கும். பொருளாதார வளர்ச்சி அமோகமா வளரும்கிறதால குடும்பமே சந்தோஷமா இருக்கும்! டாக்ஸி, லாரி, பஸ் முதலாளிங்களும் ஏற்றுமதி - இறக்குமதித் தொழில் பண்றவங்களும் இயந்திரப் பணியாளர்களும் நல்ல பயன் அடைவாங்க. கணிதம், விஞ்ஞானத்துறையினருக்கும் வெற்றி வாய்ப்புகள் உண்டு. சிலருக்கு வீண் அலைச்சலால டென்ஷன் ஏற்படும். வீடு, மனை வாங்கறவங்க, ஒரு வாரம் தள்ளிப் போடறது நல்லது. ஸ்பெகுலேஷன், ஷேர் எல்லாம் சுத்தமாவே வேண்டாம். வீட்டிலிருக்கிற தந்தையின் உடல் நலத்துல அவசியம் அக்கறை செலுத்தணும்.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

குருவின் இடமாற்றம் காரணமாக உங்கள் காரியங்கள் எதுவுமே சுலபமாக முடியாது; தடைகள் வந்து கொண்டேயிருக்கும். ஆனாலும் உங்கள் திறமையால் சமாளிச்சிடுவீங்க. சிலருக்குப் பயணத்தால சில நல்லது நடக்க சான்ஸ் இருக்கு. காவல், சட்டம், ரசாயனத் துறைக்காரங்களுக்கு மாத்திரம் முன்னேற்றத்துக்கான சான்ஸ் நிறைய. கம்ப்யூட்டர், கணிதத் துறைக்காரர்கள் நிதானம் காட்டறது நல்லது. வெளிநாட்டுத் தொடர்புகளால பிரயோஜனம் இருக்காது. காஸ் சிலிண்டர் மாதிரியான எரிபொருள்களைக் கையாள்றவங்க ஜாக்கிரதையா இருக்கணும். பெண்கள் மௌனம் காட்டறதுதான் நல்லது. டூ வீலர் பயணர்கள் ஜாக்கிரதை. பொதுவா எந்தக் காரியமானாலும், இந்த வாரம் அவசரமே வேண்டாம்.




சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

'சூரியனைக் கண்ட பனிபோல'ன்னு சொல்லுவாங்களே.. அந்த மாதிரி உங்க பிரச்னைகளுக்கெல்லாம் ஒரு விடிவு காலம் வந்தாச்சு. உங்களோட அறிவாற்றலும் செயல் திறனும் காரிய வெற்றி தரும். பெண்டிங்கா இருக்கற வழக்கெல்லாம் உங்களுக்கே சாதகமா முடியும். பந்தயம், ஸ்பெகுலேஷனிலும் வெற்றிதான். வியாபாரிகள், தொழிலாளர்களுக்கும் ஆதாயம்தான். டாக்டர்களுக்கு எல்லா ஆபரேஷனும் சக்சஸாகும். பணம் தாராளமாப் புரளும். வீடு, நிலம், ரியல் எஸ்டேட் விஷயங்களிலும் ஆதாயம்தான். குடும்பமே குதூகலத்தில மிதந்தாலும் பெண்கள் மாத்திரம் இந்த வாரம் நிதானம் காட்றது நல்லது. அப்பா, அம்மா ஆரோக்கியத்திலும் கவனம் காட்டுங்க.




சிம்ம ராசிக்காரரான 'சோ' அவர்களின் அறிவாற்றலும் செயல் திறனும் காரிய வெற்றி தருமாம், பிரச்னைகளெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் விலகி ஓடுமாம். (அதுசரி, சோ அவர்களால் பிறருக்கு வருகிற குழப்பங்கள் விலகுமா, விலகாதா என்கிறீர்களா!)



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


'குடுக்கற தெய்வம் கூரையைப் பிய்ச்சுக்கிட்டுக் குடுக்கும்' இந்த வாரம். ஆனாலும் இது சிலருக்குத்தான். மத்தவங்க, நண்பர்கள் - பக்கத்து வீட்டுக்காரங்கன்னு பழகறபோது ஜாக்கிரதை காட்டணும். இல்லேன்னா சிக்கலாயிடும். தொழிலாளர்களுக்கு அளவான பலன்தான். சிலருக்கு வாகனங்களால் செலவு வரும். கொடுக்கல் வாங்கலில் எல்லோருமே உஷாராயிருங்க. இருந்தாலும் வாரப் பின்பாதியில குடும்பத்தில உற்சாகமான சூழ்நிலை வந்திடும். பணக்காரங்க,

பெரியவங்க எல்லாம் உங்களுக்கு உதவுவாங்க. எழுத்தாளர்கள், கணிதம், சட்டத் துறையில் உள்ளவங்க நல்ல மதிப்புப் பெறுவாங்க. சங்கீதத் துறையினருக்கும் நிறைவு கிடைக்கும்.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

ஒரு புதிய தென்போடு ஆரம்பிக்கிற வாரம் உங்களுக்கு. அப்புறமென்ன, எதிரிகள் எதற்கு வம்பு என்று ஓடி ஒளிஞ்சிக்குவாங்க. அரசியல்வாதிங்களா இருந்தா, உங்க கொள்கைகளுக்குப் பாராட்டுக் கிடைக்கும். விஞ்ஞானம், ரசாயனம் தொடர்பான வேலைகள் செய்யறவங்களுக்கும் வியாபாரிகளுக்கும் முன்னேற்றம் உறுதி. கலைஞர்களுக்கும் புகழ் நிச்சயம். கூடவே ஆதாயமும் கிடைக்கும். பெண்களுக்கும் குஷியான வாரம். அவங்க அப்பா, அம்மா, அண்ணன் தம்பின்னு யாராவது வந்தா குஷியா இருக்க மாட்டாங்களா என்ன!




விருச்சிகம் : *(விசாகம் 4- ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

இதுவரைக்கும் லேசான மந்தமா இருந்தவங்க கூட இந்த வாரம் சுறுசுறுப்பா செயல்படுவாங்க. தன்னம்பிக்கை கூடறதால வாழ்க்கைல ஒரு புது மாற்றத்துக்கான அறிகுறிகள் தெரியும். பிரண்ட்ஸுங்க, பெரியவங்க எல்லாம் உதவுவாங்க. வக்கீல்கள், மிலிட்டரிக்காரங்க, போலீஸ்காரங்களுக்கு புரமோஷன் மாதிரி வர சான்ஸ் இருக்கு. கேஸ் கீஸ் இருந்தா ஜெயிக்கற வாரம் இது. சிலருக்கு வாரக் கடைசில திடீர்னு பண வரவு இருக்கும். அந்த குஷியில வீடு, மனை வாங்கலாம்னு போயிடாதீங்க. வேண்டாம். எது செய்தாலும் ஒருமுறைக்கு இரண்டு முறையா சிந்திச்சுச் செய்ங்க. யோசிச்சுப் பேசுங்க. அம்மணிகள் இந்த வாரம் உடல் நலத்துல ரொம்ப கவனம் காட்டுங்க. அலட்சியமா இருந்தீங்கன்னா அது அறுவைச் சிகிச்சை வரை போயிடலாம்.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

குடும்பத்தில பொதுவா சந்தோஷமே இருக்கும்னாலும் சில சங்கடங்களும் வரத்தான் செய்யும். கூடவே சுப காரியங்களும் திடீர் அதிர்ஷ்டமும் சிலருக்கு வரும்! சிலர் டூ வீலர் மாதிரியான புது வாகனங்கள் வாங்கற சான்ஸும் இருக்கு. வக்கீல்களுக்கு நல்ல வேட்டைதான்! வியாபாரிங்க ஜாக்கிரதையா இருக்கணும். அம்மணிகளுக்கு ஐயாமார்கள் ஏதாவது பிரசண்ட் பண்ணி சந்தோஷப்படுத்துவாங்க. பொதுவாவே பண விஷயத்துல பிரச்னைகள் இருக்காதுன்னாலும், சிலருக்கு உடம்புக்கு ஏதாவது வந்து படுத்தலாம். ஜாக்கிரதையா இருங்க.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

லைப்ல ஒரு புதிய பாதை புலப்படும் இந்த வாரம். திட்டங்கள் வெச்சிருந்தீங்கன்னா சுலபமா நிறைவேறும். பண விஷயம் தாராளமா இருக்கும். சங்கீதத்துறையினருக்கு நல்ல எதிர்காலம் உண்டு. வியாபாரிகளுக்கு நல்ல வளர்ச்சி. உத்தியோகஸ்தர்களுக்கு புரமோஷன், கூடுதல் சம்பளம்னு கிடைக்கும். தொழிலாளிங்களுக்கு மட்டுமில்லை தொழிலதிபர்களுக்கும் நல்ல வாரம் இது. செல்வியா இருக்கற பெண்களுக்குத் திருமதி ஸ்தானம் கிடைக்கற வாய்ப்பு உண்டாகும். பயணத்தால லாபம், இல்லேன்னா ஃபாரின்லேர்ந்து நல்ல நியூஸ் கிடைக்கும். இருந்தாக் கூட அப்பா அம்மா (மாமனார் - மாமி யாரையும் சேர்த்துத்தான்) உடல் நிலைல இந்த வாரம் அதிக அக்கறை செலுத்தறது நல்லது.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

வக்கீல்கள், டாக்டர்கள், நிர்வாகத் துறைல இருக்கறவங்களுக்கு நல்ல வாரம்னாலும் சிலருக்குப் பிரச்னை, வீண் அலைச்சல்னு வரத்தான் செய்யும். செலவும் கொஞ்சம் கை மீறிப் போகும்கிறதால ஜாக்கிரதையா இருங்க. தொழிலதிபர்கள் சில சிக்கல்களைச் சந்திக்க வேண்டி வரும்னாலும், எழுத்தாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகள், கம்ப்யூட்டர் துறையினரெல்லாம் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். பெண்களுக்குச் சிறு சிறு உடல் உபாதைகள் வரலாம். கணவன் - மனைவி உறவுல சில மனஸ்தாபங்கள் வரலாம். யாரையாவது மலையா நம்பியிருந்தீங்கன்னா அவங்க மோசம் செய்யறதுக்கும் சான்ஸ் இருக்கு. இந்த வாரம் புது முயற்சி எதுவும் வேணாமே!



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

எந்தக் காரியமும் இந்த வாரம் தடையில்லாம நடக்கும். அதுவும் வழக்கு கிழக்கு ஏதாவது இருந்தா நிச்சயம் ஜெயிக்கும். அரசியல்வாதிகள், அரசுப் பணியாளர்கள், மருத்துவம், விஞ்ஞானத் துறையினருக்கு இந்த வாரம் விசேஷ நன்மைகள் உண்டாகும். சிலருக்கு டிரான்ஸ்ஃபர் வரலாம். பண விஷயம் தாராளம்தான்னாலும் திடீர் செலவுகளும் வரலாம்; உஷாரா இருங்க. கெஸ்ட்டுங்க வரவால குடும்பத்தில குதூகலம் இருக்கும். மாணவர்களுக்கு உல்லாசமா டூர் போற சான்ஸ் இருக்கு. மார்க் கொறச்சலா வாங்கியிருந்தாலும் பேரண்ட்ஸ் அவ்வளவா அர்ச்சனை பண்ணாம, அரவணைச்சுப் போவாங்க. வீடு, நிலம், ரியல் எஸ்டேட் விஷயங்களிலும் வெற்றிக்கே சான்ஸ் இருக்கு.

நடக்குமென்பார், நடக்கும்!

சுற்றிலும் சில ஈக்கள்

அந்த ஈ ஜன்னல் ஓரத்திலிருந்து பறந்து வந்து இவன் தட்டில் உட்கார்ந்தது. விஜயா அதைக் கையால் விரட்டி விட்டாள். லேசாய் நகர்வது போல நகர்ந்து கொண்டு அது திரும்பவும் தட்டின் வளைவில் உட்கார்ந்தது.

"ராத்திரி நேரத்துல ஈ வருமா சங்கர்?"

சங்கரும் அதைத்தான் யோசித்துக் கொண்டிருப்பான்போலும். "அதானே?" என்றான். இடதுகையால் ஈயைத் தட்டி விட்டான். தண்ணீர்த் தம்ளரில் போய் உட்கார்ந்து கொண்டது.

"ஈனால எத்தனை வியாதிகள் வருது தெரியுமா விஜி?"

"நூத்தி முப்பதோ என்னவோ."

விஜயா மழுக்கென்று சோற்றை விழுங்கினாள். தொண்டையில் சிக்கிற்று. தண்ணீர் தம்ளரை நோக்கிக் கைநீட்டினாள். சங்கர் அவள் கைகளைத் தட்டி விட்டான்.

"வேணாம் விஜி. குடிக்காதே."

"நூத்தி முப்பதுல ஒண்ணு, எனக்கு வந்துடணும்னு பயப்படுறியா? இந்த ஈயெல்லாம் விட விஷமானதுகளோட வாழ்ந்தாச்சு. இதெல்லாம் தூசு."

முழுக்முழுக்கென்று தண்ணீர் குடித்தாள். ணங்கென்று தம்ளரை வைத்தாள். கோபம் தெரிந்தது. தம்ளர் உருண்டு அடுத்த ரூமுக்குப் போனது. அடுத்த ரூம் என்றால் அதற்கும் அடுத்த ரூம் உண்டு என்று இல்லை. மொத்தமே இரண்டே ரூம் தான். ஒன்றில் வரவேற்பறை என்று இரண்டு சேர்கள் உட்கார்ந்திருந்தன. பெரிய சைஸில் குஷ்பு படம். சாஸ்திரி, ஸ்ரீகாந்த படம். ஷெல்பில் பார்க் அவென்யூ பவுடர். தாறுமாறாய்க் கிடக்கும் ஷேவிங் கிட். அடுத்த அறையில் புஸ்ஸென்று காத்தடிக்கும் ஸ்டவ். இரண்டு மூன்று மளிகை பாட்டில்கள்.

இப்போது இரண்டு நாளாய் விஜயா அங்கிருப்பதால் பெட்டி மீது மடிக்கப்பட்ட சேலை. சில பிளாஸ்டிக் வளையல்கள், ஓரமாய் ஒரு சின்ன பாக்கெட் டிரான்சிஸ்டர்.

"பழைய ஆள்கள் படமே ஒட்டி வச்சிருக்கியே. புது ஆளுங்க பிடிக்காதா?"

"யாரச் சொல்றே?"

"அதான் குஷ்பு, ஸ்ரீகாந்த்."

"குஷ்பு பழசா? ப்பூ... இப்ப உள்ள கனவுக் கன்னி யாருக்காச்சும் கோவில் உண்டா?"

"முட்டாள்தனம்."

"தமிழன் மோட்சம் பெறுகிற முக்திநிலை அது விஜி."

ஹால் ஷெல்பில் கிருஷ்ணமூர்த்தி, ரீடர்ஸ் டைஜஸ்ட், பிரபஞ்சன், வண்ண



தாசன் என்று வரிசையாய் உட்கார்ந்திருக்கும் புத்தகங்கள்.

"எப்படி சங்கர் உன்னால குஷ்புவுக்கும் பிரபஞ்சனுக்கும் பாலம் கட்டற?"

"எது கேவலம் விஜி? சினிமாவா? இல்ல. நீ ஆபீஸுக்குப் போறாப்பல குஷ்புவுக்கு சினிமா. சினிமால நடிக்காத பொம்பளைங்கள்லாம் பத்தினியா? நான் நம்பலை."

உண்மைதான். அக்கா இல்லையா? கல்யாணமான பிறகும் பக்கத்து வீட்டுக்காரனோடு தொடர்பு வைத்துக் கொண்ட அக்கா. டெலிபோனில் அப்பாவைக் கூப்பிட்டு. "கூட்டிட்டுப் போயிடுங்க உங்க மகளை" என்று சாஷ்டாங்கமாய்க் கும்பிடு போட்டு அனுப்பி வைத்த அத்தான்.

"நாசமாப் போற மனுஷன். பொம்மனாட்டி' ஆம்பள கூட பேசறது தப்பாக்கும்?" விஜியும் சபித்திருக்கிறாள். பிறகு தான் தெரிந்தது உண்மை. அக்காவின் சூட்கேஸில் உள்பாவாடையை மடித்து வைக்கும் போது நாடாவோடு ஒட்டிக் கொண்டு வந்த கடிதங்கள். ஈஸ்வரா! விஜயா கண்களை மூடிக் கொண்டாள்.

அக்கா வாசலில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள். வேறெதைப் பற்றி இருக்



கும்? கற்பைப் பற்றியதாக இருக்கும். கற்பைப் பற்றி அதிகம் பேசுபவர்களெல்லாம் கற்பைப் பற்றித் தவறான எண்ணம் உள்ளவர்களாகவே இருக்கிறார்கள் என்று தோன்றிற்று. விஜயா கடிதங்களை அதே இடத்தில் வைத்தாள். அக்காவுடன் பேசிக் கொண்டிருக்கும் மஞ்சுளாவுக்கு இந்தக் கடிதங்களைக் காட்டினால்.... அக்காவின் முகம் கறுப்பது போல் மனசுக்குள் பளிச்சிட்டு சிரிப்பு வந்தது. அதற்குப் பிறகே, கற்பைப் பற்றிப் பேசினாலே சிரிப்பு வர ஆரம்பித்தது.

"ஏன் விஜி லேட்?" அக்காதான் முதலாளாய்க் கேட்டாள்.

"பஸ் ஸ்டிரைக்."

"ஆட்டோல வந்திருக்கலாமே?"

"கிடைக்கலை."

"அதெப்படி? உலகத்துல ஆட்டோவே ஓடலையா?" அம்மா அரிசி புடைத்துக் கொண்டே கல்லெறிவாள்.

"ஆமா. ஓடலை."

"பொய்."

"அதுவும் ஆமா."

"திமிர். சம்பாதிக்கிற திமிர்."

"ஆமா. அதுவும் ஆமா."

விஜயா சேலையைக் களைந்து நைட்டி போட்டாள். நைட்டியே விவாதத்துக்குள்ளாகும் உடைதான். சௌகரியம் மீறி அதன் அமைப்பு விமர்சிக்கப்படும்.

"சேலை கட்டுனா என்ன?"

"இது உடையில்லையா?"

"அங்கியாட்டம் இதென்ன? மார் மீது துணி இல்லாம."

"இது என்ன பிறகு?"

மார்பு மீது படர்ந்து கிடக்கும் நைட்டியைக் காட்டினாள்.

"உள்ளே போடி. அப்பா பார்த்தா..."

"பார்த்தா என்ன?"

"திட்டுவார்."

"ஏன் அம்மணமாவா அலையறேன்?"

அச்சச்சோ என்று அக்கா வாய்பொத்திக் கொண்டாள். அந்தக் கடிதங்கள் ஞாபகம் வரும். இவளை ஒரு நிமிஷத்தில் நிர்வாணப் படுத்தி விடலாம். ஆனால் அது அசிங்கம். அவள் புருஷனுக்குச் செய்த நம்பிக்கையின்மையை விட அசிங்கம்.

"சம்பளப் பணத்துல அம்பது ரூபா குறையுது."

"ம்."

"ம்னா என்ன?"

"ஆமான்னு அர்த்தம்."

"என்ன செலவுன்னு கேளு."– அம்மா அக்காவைத் தூண்டி விட்டாள்.

"கேன்டீன் செலவு."

"அம்பது ரூபாயா?"

"மாதந்தோறும் குடிக்கற டீ!"

"இங்கதான் குடிச்சிட்டுப் போயிடுறியே."

"அதனாலென்ன, அங்க குடிக்கக் கூடாதா?"

அக்கா அவள் தோளைத் தொட்டாள். "அதில்லை... வீண்செலவுதானேன்னு..."

"எது வீண் செலவு? ஐயாயிரத்து நானூத்தம்பது ரூபா சம்பாதிக்கிறவ, அம்பது ரூபாய்க்கு முப்பது நாள் டீ குடிக்கிறதா?"

"அதில்லை விஜி."

"நீ கூட இங்கிருக்கறது வீண் செலவுதான். நானென்ன சொல்லிக்கிட்டா இருக்கேன்?"

அக்கா அழுதாள். வீட்டிலிருக்க மனசில்லை. இரண்டு சட்டை, பிரா, சேலை, பாவாடை, பிரஷ், பேஸ்ட், சோப், துவாலை எடுத்துக் கொண்டாள்.

"எங்க போற?"

"வந்துருவேன்."

அம்மா அந்த பதிலில் பயந்தாள். இன்னும் நாலு நாளில் பொங்கல் போனஸ் வரும். விஜயா போய் விட்டால் இதெல்லாம் எங்கிருந்து வரும்?

"மன்னிப்புக் கேளுடி."

அக்கா கண்களைத் துடைத்துக் கொண்டாள். "மன்னிச்சிருடி."


"மன்னிப்பெல்லாம் எதுக்கு? ஆப்டர் ஆல் ஒரு ரூபா டீ."

"போகாதே விஜி."

"போகலம்மா. வந்துருவேன்."

"எங்க போறேனாவது..."

"தெரிலம்மா. ஒருநாள் விட்டுறு.



"யார் யாருக்கு, எந்த நேரத்துல அதிர்ஷ்டம் 'ஒர்க் அவுட்' ஆகும்னே சொல்ல முடியலே..."

"ஏன் அப்படிச் சொல்றே?"

"பாரேன், முந்தா நாள் வரைக்கும் பாத்ரூம்ல மட்டுமே பாடிக்கிட்டிருந்த பக்கத்து வீட்டுப் பையன், அதையே இன்னிக்கு 'பாத்ரூம் பாப்ஸ்'ங்கற பேர்ல கேஸட் வெளியிட்டு பயங்கரமா பேர் வாங்கிட்டானே!"

– குகை தாமோதரன்

கவனத்திற்கு ஒரு கலாம்



சமீபத்தில் பாரத ரத்னா விருது பெற்ற அப்துல் கலாம் எதிலும் சிறு தவறுகள் கூட நேரக் கூடாது என்பதில் எப்போதும் கவனமாக இருப்பார். சமீபத்தில் திருவனந்தபுரத்தில் அவரைப் பாராட்ட நடந்த கூட்டத்தில் ஒரு பேச்சாளர் (ஆங்கிலத்தில்) அவர் ஒரு 'பேச்சிலர்' என்பதைக் குறிப்பிட்டார். உடனே கலாம் குறுக்கிட்டு, 'பிரம்மச்சாரி' என்று திருத்தினார். இரண்டும் ஒன்றுதானே என்று கூட்டத்தினர் முதலில் குழம்பினர். பிறகு சிந்தித்ததில் பேச்சிலர் என்றால் திருமணமாகாதவர் என்பதை மட்டும்தான் குறிக்கும், பிரம்மச்சாரி என்றால் ஒழுக்கசீலர் என்றும் பொருள் என்பதைப் புரிந்து கொண்டு அத்திருத்தத்தைப் பெரிதும் ரசித்தனர்.

- ''ஹிந்து''

தகவல்: சிட்லபாக்கம் அ. ஷண்முகசுந்தரம்.

வந்துருவேன்.''

நடந்தாள். நடு இதயத்தில் ஏதோ ஒரு வெறுமை இருந்தது. ஒரு ரூபா ம. அதனளவு கூட என் நிலை இல்லையா? சங்கர் ரூமை நோக்கி நடந்தாள். அவன் இடுப்பில் ஒரு டவலும் மேலே ஒரு டவலுமாய் நின்றான்.

''வா, வா.''

ஆயாசமாய்ச் சரிந்தாள். ''ஒருநாள் இங்க தங்கிக்கலாமா சங்கர்.''

''வீட்ல சண்டையா?''

''சண்டைன்னு சொல்லவா? மனஸ்தாபமா? ஏதோ ஒண்ணு. ஒரு 24 அவர்ஸ் தாயேன்.''

''இதென்ன திடீர்னு. அவன் அப்படித்தான் ஸ்ரீப்ரியா சிவசந்தரண்ட்ட வர்ற மாதிரி.''

''ஏதோ ஒண்ணு.''

அவன் குழப்பமாய்த்தான் சரி என்றான். இருவருக்குள்ளுமிருந்த காதல் வெட்ட வெளிச்சம் என்றாலும் ஏதோ ஒரு லஜ்ஜை அவளைத் தங்கச் சொல்வதில் இருந்தது. சும்மா பாட்டுக் கேட்டுக் கொண்டு தாளம் போட்டுக் கொண்டு தான்பூரா கிடந்தவளைப் பார்த்து பயம் வந்தது.

''புத்தி பிசகிடுச்சோன்னு பாக்கிறியா?''

''ம்.''

''ஊர் என்ன சொல்லும்னு பயப்படுறே.''

''அது இல்ல. சத்யமா இல்லை.''

''பிசாத்து ஊர். சங்கரோட தங்கிருக்கா. தங்கிருக்கான்னு கெக்கிக்கும். பிறகு கல்யாணம் பண்ணிட்டம்னா அவ நாலு மாசமாம் தெரியுமாங்கும்.''

''விஜி...''

''என்ன?''

''கஷ்டமாருக்கா?''

''இல்லன்னு சொல்ல முடியாது சங்கர். ஃபைவ் தௌசண்ட் இல்லைன்னா வீட்ல என் பிம்பம் இல்லை. எனக்குப் பதிலா ஐயாயிரத்தை என் தட்டு முன்னால வச்சாலும் எங்கம்மா ''இன்னும் கொஞ்சம் கத்திரிக்கா கொத்சு வைக்கவா விஜின்னு கேப்பாங்க.''

''இந்தா.''

''என்னது?''

அவசரமாய் பாக்கெட்டைப் பிரித்தாள். அவளுக்குப் பிடித்தமான பாடல்கள் அடங்கின கேஸட்.

''நன்றி.''

சங்கர் கூர்ந்து பார்த்தான். ''உங்கம்மா ஹால்ல உட்கார்ந்திருக்காங்க.''

''சொல்லிட்டியா?''

''ம்.''

அவள் பெட்டியில் புடைவையோடு கேசட்டைத் தள்ளினாள்.

''வர்றேன்!''- முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டான்.

''விஜி'' முதல் தடவையாக அவள் கைகளைப் பற்றினான். அவன் கண்களில் ஈர பளபளப்பு தெரிந்தது. அவன் கையை விலக்கிக் கொண்டு வெளியே வந்தாள். அவளுடன் அவள் அம்மாவும் பின்னாலேயே எழுந்து போனாள்.


எதுவும் பேச்சு இன்றியே நடந்தார்கள். வீட்டுக்குள் போய் உடை மாற்றிக் கொண்டாள். டேப்பில் கேசட்டைப் போட்டாள். ''தீபங்கள் பேசும் திருக்கார்த்திகை மாசம்.''

அக்காவின் நடமாட்டம் தெரியவில்லை. கண்கள் அழுந்த, சாய்ந்து படுத்தாள். எழுந்த போது இருட்டியிருந்தது. டேப் ஆனிலேயே இருந்தது. வெளியே அக்கா மஞ்சுளாவிடம் இவள் தூங்குகிறாளென்ற நினைப்பில் ''சங்கர் வீட்ல ரெண்டு நாள் இருந்திருக்கா'' என்பது கேட்டது. அவள் மீது பெரிய ராட்சஸ ஈ ஒன்று உட்கார்ந்திருப்பது போலிருந்தது விஜயாவுக்கு. ●

புகைச்சலில் பூப்பந்தாட்டம்!


"நமக்குப் புதிய போட்டிகள் உருவாகிவிட்டன. ரஷ்யா, ஹாலந்து ஆகிய நாடுகள் கூட இதனால் பேட்மிண்டனில் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டன. இந்த நிலையில் நம் நாடு பேட்மிண்டனில் வெற்றிபெற எனக்கு இரண்டு வழிகள்தான் தெரிகின்றன. முதலில் மலேசியா, சீனா போன்றவற்றிலுள்ள பிரபல விளையாட்டு வீரர்களுடன் விளையாட நம் விளையாட்டு வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். தவிர அதிரடித் தாக்குதலில் வேறு நாட்டினரோடு நாம் போட்டியிடுவது கஷ்டம். எனவே நாம் புது டெக்னிக்குகளைக் கையாள வேண்டும்!" – ஒலிம்பிக்ஸில் முதல் முதலாக பேட்மிண்டன் சேர்க்கப்பட்டபோது, இந்திய பேட்மிண்டனின் நிலை பற்றி பிரகாஷ் படுகோன் கூறியது இது. பேட்மிண்டன் தேசிய சாம்பியனாக மட்டுமல்ல, முன்னாள் 'ஆல் இங்கிலாண்ட் சாம்பியனாகவும்' விளங்கியவர் படுகோன்.

பெங்களூர் கண்டோன்மென்ட் பகுதியில் பேட்மிண்டன் அகாடமி ஒன்று உருவாகவும் பெரு முயற்சிகள் எடுத்துக் கொண்டார் பிரகாஷ் படுகோன்.



என்றாலும் இன்று இந்திய பேட்மிண்டன் மிகவும் சிக்கலான ஒரு கட்டத்தை எட்டியிருக்கிறது. காரணம் அதன் முக்கிய அமைப்புகள் இரண்டும் ஒன்றையொன்று தாக்கி அறிக்கைப் போர் புரிந்து கொண்டிருப்பதுதான்.

இந்திய பேட்மிண்டன் அசோஸியேஷன். இதுவே தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு. இதன் இப்போதைய தலைவர் வி.கே. வர்மா. 'இந்தியன் பேட்மிண்டன் கான்ஃபடரேஷன்' விளையாட்டு வீரர்களிடையே வெகு பிரபலமடைந்து வரும் மற்றொரு அமைப்பு. இதன் தலைவர் பிரகாஷ் படுகோன்.



• படுகோன்

இந்திய பேட்மிண்டன் அசோஸியேஷனின் நடவடிக்கைகளை விமர்சித்து, அது சிறந்த முறையில் பேட்மிண்டன் போட்டிகளை நடத்துவதில்லை என்பதையும் பிரகாஷ் படுகோன் குறிப்பிட, இலைமறை காயாக இருந்த புகைச்சல் வெடித்து விட்டது.

"நான் தொகை நிரப்பப்படாத ஒரு காசோலையை எங்கள் அமைப்பின் சார்பில் பிரகாஷ் படுகோனுக்குக் கொடுத்து விடுகிறேன். அவரே முழு நிர்வாகத்தையும் கவனித்துக் கொள்ளட்டும்" என்று வர்மா கூற "இது ஒரு தெளிவில்லாத அழைப்பு!" என்று கூறி அதை நிராகரித்து விட்டார் படுகோன்.

பிரகாஷ் படுகோனின் அமைப்புக்கு இப்போது ஏக கிராக்கி. பல மாநில பேட்மிண்டன் அமைப்புகளும் இவரது அமைப்பின் அங்கீகாரத்தைப் பெற முன் வந்திருக்கின்றன.

இந்தியன் ஒலிம்பிக் கூட்டமைப்பிலிருந்து தன்னை நீக்கிக் கொண்டது இந்திய பேட்மிண்டன் அசோஸியேஷன். இப்போது "எதிரணி"க்கு அந்த இடம் அளிக்கப்பட்டு விடுமோ என்ற பயத்தில் மீண்டும் தங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளச் சொல்லி இந்தியன் ஒலிம்பிக் குழுவை கேட்டுக் கொண்டிருக்கிறது இந்த அமைப்பு.

இரு தரப்பினரும் சமீபத்தில் கொஞ்சம் இறங்கி வந்திருக்கிறார்கள். "இரு அமைப்புகளையும் ஒன்றாக இணைத்து புதியதொரு அமைப்பை உருவாக்கலாம்" என்ற பிரகாஷ் படுகோனின் ஆலோசனைக்கு எதிரணி ஓரளவு சம்மதம் தெரிவித்திருக்கிறது. ஆனால் இப் போதைக்கு இது நடைபெறுவது சந்தேகம்தான்.

இந்தியன் ஒலிம்பிக் குழுவின் அங்கீகாரம் எந்த அமைப்புக்குக் கிடைக்கிறதோ, அதன் கை ஓங்கிவிடும் என்பதுதான் தற்போதைய நிலை.

— ஜி.எஸ்.எஸ்.

என்னைச் செதுக்கிய எண்ணங்கள் - 3

காவேரி நதி பாயும் ஊர். ஒரு சிவன் கோவில். ஒரு பெருமாள் கோவில். ஊரில் நுழையுமுன் ஒரு ஐயனார் கோவில். எதிரே வெட்டவெளியில் மண்ணால் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்ட குதிரைகள் நின்று கொண்டிருக்கும். எதிரே ஒரு ஒற்றைப் பனை மரம். ஊரின் மூலைகளில் மூன்று மாரியம்மன் கோயில்கள். ஒரு அக்ரஹாரம், செட்டித் தெரு, ஒரு உடையார் தெரு, ஒரு மேளக்காரத் தெரு, வயல்களுக்கிடையே மற்ற குடியிருப்புகள். ஊரின் நடுவே ஓடும் சத்தியவாணன் வாய்க்கால்.

அந்த வாய்க்காலின் குறுக்கே பெருமாள் கோவிலுக்குச் செல்ல பாலம் போட்டபோது என் தந்தைதான் அதைத் திறந்து வைத்தார். எங்கள் கிராமத்தில் முதன் முதலாக மின்சாரம் வந்தபோது என் தந்தையைத்தான் அழைத்து மின்னொளி வழங்கும் பொத்தானை அழுத்தச் சொன்னார்கள். நான் அப்போது அமெரிக்காவில் படித்துக் கொண்டிருந்தேன். செய்தியைக் கேட்டபோது எனக்குப் பிடிபடாத பெருமை.

இத்தனைக்கும் என் தந்தை பெரும் பணக்காரரல்ல. ஏகபோகத்திற்கு நிலம் நீச்ச கொண்ட தஞ்சை மிராசுதாரருமல்ல.

என் தந்தை அந்த கிராமத்தில் மளிகைக் கடை வைத்திருந்தார்கள். அதுதான் வருமானம். குடும்பம் நடத்துவதற்குப் போதுமான வருமானம் என்று சொல்ல முடியாது. எனினும் கௌரவமாக வண்டி ஓடிக் கொண்டிருந்தது. இருபது மைல் தள்ளி ஆறு மா நிலம் இருந்தது. அதிலிருந்து வீட்டுக்குப் போதுமான சீரகச் சம்பா நெல் வந்து சேரும்.

அந்த ஊரே ஒரு குடும்பம் போல வாழ்ந்தது என்றால் மிகையாகாது. எல்லோருக்கும் எல்லோரையும் தெரியும்.

இரவு இரண்டு மணிக்கு வந்து கதவைத் தட்டுவார்கள். என் தந்தை கதவைத் திறந்து என்ன என்று கேட்பார்கள். "ஐயா! வீட்டில் பிரசவம். மருந்து வேணும்" என்று குரல் வரும். அலுக்காது சலிக்காது என் தந்தை உடனே அரிக்கன் லாந்தரைக் கொளுத்தி, கடைச் சாவியை எடுத்துக் கொண்டு போய் கடையைத் திறப்பார்கள். நாட்டு மருந்துச் சாமான்கள் எல்லாம் எடுத்துக் கொடுத்த பின் "காசு கொண்டு வந்திருக்கியா?" என்று கேட்பார்கள்.

"இல்லை ஐயா! ரெண்டு நாளில் கொடுத்து விடுகிறேன்" என்று பதில் வரும்.

"முன்பே பாக்கி இருக்கிறது. சரி போ! போ!" என்பார் என் தந்தை.

அவருடைய இத்தகைய உதவிதான் – அவர் செய்த புண்ணியம்தான் எனக்கெல்லாம் உதவியாக இருந்தது என்பது என் நினைப்பு. ஊரில் யாராவது நிலம் விற்றால், வாங்கினால் கடன் வாங்கினால் 'நோட்டு' எழுதுவதற்கு எங்கள் கடைக்குத்தான் வருவார்கள். அதற்காக காலணா வாங்க மாட்டார் என் தந்தை. எழுதிக் கொடுப்பார். என் தந்தையை காஞ்சிப் பெரியவர் சங்கர மடத்தின் தர்மாதிகாரியாய் நியமித்திருந்தார். அந்த உத்தரவு வந்த கடிதத்தை நான் படித்திருக்கிறேன்.



• கல்லூரி மாணவராக...

ஊரில் ஒரு ஜில்லா போர்டு நடத்தி வந்த ஆரம்பப் பள்ளிக் கூடம். அதில்தான் நான் படித்தேன். உமா மகேஸ்வர அய்யர்தான் தலைமை ஆசிரியர். எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தவர் ரமணி அய்யர். பார்ப்பதற்கு பாரதி போன்ற நெடு நெடுவென்ற தோற்றம். கம்பீரம். முகத்தில் கண்டிப்பு தெரியும்.

இரண்டாவது வகுப்பு என்று நினைக்

புளிய மிலாறு தந்த ஆசி!

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி



இறேன். கணக்கு போட்டுக் கொண்டு வரவில்லை என்று வெளியில் என்னை நிற்கச் சொன்னார். வெளியில் நின்றேன். ஏன் நிற்கிறோம் என்கிற விவரம் தெரியாத வயது. கொஞ்ச நேரம் நின்ற பிறகு அலுத்துப் போய், வீட்டுக்குப் போய் விட்டேன். வீட்டுக் கொல்லையில் விளையாடிக் கொண்டிருந்தேன்.

சற்று நேரத்தில் ஆசிரியர் என்னைத் தேடி இருக்கிறார். நான் வீட்டுக்குப் போய் விட்டதாக யாரோ சொல்ல, பள்ளியிலிருந்து நேராக வீட்டுக்கு வந்தார். வருகிற வழியில் பெரிய புளிய மரம். ஒரு நல்ல புளியஞ் சிம்பை ஒடித்துக் கொண்டார்.

"எங்கே சின்னவன்?" என்றார்.

"ஏன்? கொல்லையில் விளையாடுகிறான்!" என்று சொல்லிக் கொண்டே என் தந்தை கடையிலிருந்து இறங்கி வந்தார். ஆசிரியர் நேரே கொல்லைக்கு வந்தார். எனக்கு புளியஞ் சிம்பினால் விளாசல் கிடைத்தது. என் தந்தை "அடிக்காதீங்க! என்று மரியாதைக்காகச் சொன்ன ஞாபகம். நேரே அழுது கொண்டு அவர் பின்னால் மீண்டும் பள்ளிக்குச் சென்றேன்.

அவர்தான் எனக்கு டியூஷன் ஆசிரியரும் கூட. தினம் மாலையில் அரை மணி நேரம் பாடம் நடக்கும். காப்பி சாப்பிடுவார். வெற்றிலை பாக்கு போடுவார்.

அவர்தான் எனக்கு உலகிலேயே உயர்ந்த ஆசிரியராகப் பட்டார். "நல்ல அஸ்திவாரம் போட்டு விட்டால் போதும். அதற்குப் பிறகு ஒன்றும் தேவையில்லை" என்று அடிக்கடி சொல்வார் என் பெற்றோரிடம்.

நான் அமெரிக்காவிலிருந்தபோது அவர் ஓய்வு பெறுகிறார் என்று எழுதி இருந்தார்கள். அவர் ஓய்வு பெறுவதை பெரும் விழாவாக நடத்த வேண்டுமென்ற ஆசை எனக்கு.

நான் அமெரிக்காவுக்குக் கிளம்புமுன் 1962-ல் தேர்தல் வந்தது. எங்கள் மயிலாடுதுறை பாராளுமன்றத் தொகுதிக்கு, மரகதம் சந்திரசேகர் நிற்கிறார் என்று அறிவித்திருந்தார்கள். அப்போதே அவர் பிரபலமானவர். எனக்கு மகிழ்ச்சி. நான் அப்போது கிண்டி பொறியியல் கல்லூரியில் உதவி விரிவுரையாளராக வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். எனவே நேரே சாந்தோம் பகுதியில் உள்ள அவர் வீட்டிற்குச் சென்றேன். அவரது கணவர் சந்திரசேகரை சந்தித்தேன். பின் மரகதம் அம்மாவையும் சந்தித்தேன். எங்கள் தொகுதியில் – பூம்புகாரில் மீனவர்களுக்கு ஒரு (Cold Storage) குளிர் சாதன வைப்பிடம் கட்டினால் நல்லது என்றும் இன்னும் பல விஷயங்களையும் அவரிடம் குறிப்பிட்டேன். அவர்கள் சந்தோஷப்பட்டார்கள்; வாக்களித்தார்கள்.

அமெரிக்கா சென்ற உடன் அவர் தேர்தல் நிதிக்காக ஒரு 200 ரூபாயை அனுப்பி இருந்தேன். அதை அவர் மயிலாடுதுறை பொதுக் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார். அந்தப் பணத்தை ஏதோ ஒரு நல்ல காரியத்திற்குத் திருப்பிவிட்டதைப் பற்றி பேப்பரில் படித்தேன். அமெரிக்காவுக்கு இந்தச் செய்தியைச் சுமந்த பேப்பர் கட்டிங் வந்தது.

இரண்டாண்டு கழித்து எனது பள்ளி ஆசிரியர் ரமணி அய்யர் ஓய்வு பெற்றபோது நான் மரகதம் சந்திரசேகருக்கு டெல்லிக்கு எழுதினேன். அப்போது அவர் மத்திய அமைச்சராக இருந்தார். எனது ஆசிரியர் ஓய்வு பெறும் விழாவில் பங்கேற்க வேண்டும் என்று. அவரும் ஒப்புதல் தெரிவித்து எழுதி இருந்தார். இதுதான் நான் அங்கிருந்து என் பள்ளி ஆசிரியருக்கு செய்யக் கூடிய மிகப் பெரிய கௌரவம்.

உடனே, ஊரில் உள்ள முக்கியமானவர்களுக்கெல்லாம் எழுதினேன். மத்திய

அமைச்சர் விழாவுக்கு வருகிறார் என்றும் விழாவை சிறப்பாக நடத்துமாறும் எழுதி, பணமும் அனுப்பி இருந்தேன்.

ஆனால் ஊரில் உள்ளவர்கள் அதை நம்பத் தயாராயில்லை! "என்ன! நம் கிராமத்துக்கு மத்திய அமைச்சர் டெல்லியிருந்து வருவதாவது! தலைமை தாங்குவதாவது! அவன் ஏதோ ஆசையில் எழுதி இருக்கிறான்" என்று சொல்லி இருக்கிறார்கள்.

பின், ஒரு மாதம் கழித்து அந்த ஊரில் ஒரு ஜீப்பில் நான்கைந்து அதிகாரிகள் வந்து இறங்கினார்கள். எங்கள் வீட்டைத் தேடி இருக்கிறார்கள். "யார் இந்த ஆசிரியர்? என்றைக்கு விழா? மத்திய அமைச்சர் வருகிறார். டெல்லியிருந்து சேதி வந்திருக்கிறது" என்று விசாரிக்கவும் ஆச்சரியத்துடன் ஊர் விழித்துக் கொண்டது. சுருக்கமாகச் சொன்னால் என் ஆசிரியர் ஓய்வு பெறும் விழா "ஜாம் ஜாமெ"ன்று நடந்தது. எனக்குப் பெருமை; சந்தோஷம். பத்தாண்டுகள் கழித்து என் ஆசிரியர் சம்பந்தப்பட்ட ஓர் அதிசய சம்பவம் நடந்தது.

என் மூத்த மகன் சித்தார்த்தனுக்கு திருமணம். எம்.ஜி.ஆர். அப்போது முதல்வர். அவர் முதல்வராகு முன் அவரை அமெரிக்க பல் கலைக் கழகங்கள் சார்பில் நான் அழைத்திருந்தேன். ஒரு மாதம் அங்கே இருந்தார். நான் அவருடன் சுற்றுப் பயணம் செய்தேன். எனவே அவருடன் நெருங்கிய பழக்கம்; நட்பு. என் நண்பர் திரு மணியன்தான் சென்னையில் என் மகனின் திருமண வரவேற்புக்கான இடத்தையும் நாககர வித்வான் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் அவர்களது கச்சேரியையும் ஏற்பாடு செய்திருந்தார்.

என் ஆசிரியர் ரமணி அய்யருக்கு அழைப்பு அனுப்பிக் கொடுக்குமாறு என் உறவினர்களுக்கு எழுதி இருந்தேன். ரமணி அய்யர் காலமாகி விட்டதாய்ச் சொன்னார்கள். எனக்கு வருத்தமான வருத்தம்.

திருமண வரவேற்பில் ஏராளமான வி.ஐ.பிக்கள் வந்து கொண்டிருந்தனர். நான் வரவேற்றுக் கொண்டிருந்தேன். யாரோ அருகில் வந்தாற் போலிருந்தது. ஒரு கணம் திரும்பினேன். நெடு நெடுவென்ற உருவம். மூப்பின் தாக்கம்எளிமையின் முத்திரைகள்.

"நீதானே உதயமூர்த்தி?" என்று கேட்டார் அவர். எனக்குப் பொறி தட்டியது.

"நீங்கள் ரமணி சாரா?" என்றேன். "ஆம்" என்றார். கல்யாண வீட்டில் எனக்குத் தலை சுற்றியது.

"என்ன இது! ரமணி சார்தான் இறந்து விட்டார்களே! இது என்ன? இது அவர் தானா? நிஜந்தானா? இல்லை, அவர் ஆவி இங்கே

வந்திருக்கிறதா? செத்த மனிதர் எப்படி இங்கே வர முடியும்?''

பல கேள்விகள்; பல சந்தேகங்கள்! ஒரே குழப்பம். இதற்கிடையில் சில முக்கிய வி.ஐ.பிக்கள் என்னுடன் கை குலுக்க காத்துக் கொண்டிருந்ததால் "சார் ஒரு நிமிடம்" என்று சொல்லி விட்டு நகர்ந்தேன். கூட்டம் ஏராளம். எனவே ஐந்து நிமிடம் கழித்து திரும்பிப் பார்த்தால் ஆசிரியர் அங்கே இல்லை. இங்கே ஓடினேன்; அங்கே ஓடினேன். அவர் அடையாளம் சொல்லி "கண்டீர்களா?" என்று கேட்டேன். ஊஹூம். ஒருவரும் கண்டதாகக் கூறவில்லை.

எங்கள் ஊரிலிருந்து வந்த ஒருவரைக் கேட்ட போது "அவர்தான் செத்துப் போய் விட்டாரே" என்றார். எனக்கு ஒன்றும் புரிய வில்லை. என் பேராசிரியருக்கு ஒரு காப்பி கொடுத்துக் கூட, நான் உபசரிக்கவில்லை. உட்காரக் கூட சொல்லவில்லை" என்று என் மனம் என்னை சாடிக் கொண்டிருந்தது.

"செத்துப் போனவர் என் மேல் உள்ள அன்பினால் வந்திருக்கிறார். என் மூத்த மகனும் அவரிடம் படித்தான். எனவேதான் வந்திருக்கிறார்." நான் எனக்கே பலமுறை சொல்லிக் கொண்டேன். என்னை நிந்தித்துக் கொண்டிருந்தேன் பல காலம்.

சென்னைக்கு நிரந்தரமாகக் குடி வந்த போது 1990-ல் ஊரிலிருந்து என் உறவினர் ஒருவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அது ரமணி சார் அவருக்கு எழுதிய கார்டு. தாம் ஓய்வு பெற்றபோது எடுக்கப்பட்ட போட்டோ படம் வேண்டுமென்று கேட்டு என் நண்பருக்கு எழுதி இருந்தார். எழுதியிருந்த வருடம் 1990. அவர் எழுதி இருந்த விலாசம் கோடம்பாக்கத்துக்கு, அருகிலுள்ள சாலிக்கிராமம். ஆகா! ரமணி சார் உயிருடன் இருக்கிறார்; உயிருடன் இருக்கிறார். மனம் துள்ள, பழங்களை வாங்கிக் கொண்டு ஓடினேன். வீட்டைக் கண்டு பிடித்தேன். சாஷ்டாங்கமாக அவர் காலில் விழுந்தேன். என் கண்களில் நீர் துளித்தது. மகனுடனும் மகளுடனும் பேரக் குழந்தைகளுடனும் அவர் அங்கே இருந்தார். அவரது மருமகளும் மகனும் எனக்கு காப்பி கொடுத்து உபசரித்தார்கள். மருகன் கேட்டார்:

''மாமா, உங்களைப் புளிய மிலாறினால் அடித்ததாக 'பள்ளி அனுபவங்க'ளில் விகடனில் எழுதி இருக்கிறீர்களே? மாமா உங்களை அடித்தாரா?'' நான் சிரித்துக் கொண்டேன், பதிலாக. புளிய மிலாறு! அவர் தந்த ஆசியல்லவா அது!

என் முதல் மனவியல் புத்தகம் "எண்ணங்கள்". அதை என் பெற்றோருக்குச் சமர்ப்பித்திருந்தேன். எனது இரண்டாவது புத்தகம் "மனம், பிரார்த்தனை, மந்திரம்" என்பது. மாதா, பிதா, குரு, தெய்வமல்லவா? எனவே அந்த இரண்டாவது நூலை எனது மூன்று ஆசிரியர்களுக்குச் சமர்ப்பித்திருந்தேன். அந்த 'காணிக்கை'ப் பக்கத்தில் நான் எழுதி இருந்த வாசகங்கள்:

- பாரதியைப் போல் தோற்றமும் கம்பீரமும் அறிவும் தெளிவும் கொண்ட என் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் ரமணி அய்யர் அவர்களுக்கு.
- பாரபட்சமற்ற நோக்கையும், விஞ்ஞான மனோபாவத்தையும், தெளிவையும், தைரியத்தையும் ரசாயன பாடத்துடனே சேர்த்துப் போதித்த டாக்டர் பாலையா அவர்களுக்கு.
- உலக ஞானத்தை 'கல்கி' என்ற பத்திரிகை மூலம் எனக்குப் போதித்த பேனா மன்னர் பேராசிரியர் கல்கி அவர்களுக்கு.

'அவர்களை நெஞ்சில் நிறுத்தி வணங்குகிறேன்' என்று எழுதி இருந்தேன்.

(தொடரும்)



''பெண் பார்க்க வர்றவங்களுக்கு 'ஹை-கிளாஸ்' டிஃபனா போட வேண்டாம்னு சொன்னேனே கேட்டியா...?''

''இப்ப என்னங்க அதுக்கு?''

''பெண்ணோட முகம் மறந்து போச்சாம்; இன்னொரு தடவை வர்றோம்னு கடுதாசி போட்டிருக்காங்க பாரு!''

— சீர்காழி வி. ரேவதி



''தலைவர் ரொம்ப விவரமானவர்!''

''எப்படிச் சொல்றே?''

''ஊழல் செய்வதற்கு முன்னாடியே விசாரணைக் கமிஷன் அமைத்து ரிப்போர்ட் வாங்கிடுவார்!''

— வி.எஸ். அனந்தராமன்

தியாகத்தை மதிக்காதா தமிழக அரசு?



• சி. ஏ. பாலன்

அவர், தேசிய விடுதலை இயக்கத்தில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். கம்யூனிஸ்ட் என்றாலும் அவரது தேசப்பற்றை மகாத்மாவே பாராட்டியிருக்கிறார்.

கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்ட நிலையிலும் கட்சிப் பணியையும், தொழிற் சங்கப் பணியையும் தலைமறைவாகவே அவர் செய்து வந்தார். திருப்பூரில் நடந்த ஒரு கொலை வழக்கில் அவரும் சம்பந்தப்பட்டிருப்பதாகப் போலீஸ் தேடியது. இறுதியாகச் சிறைபிடிக்கப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார். அவருக்காக ரஷ்யா, சீனா போன்ற நாடுகளிலிருந்து அவரை விடுதலை செய்யக்கோரி தலைவர்கள் முறையிட்டார்கள். தமிழ்நாடு தழுவிய ஊர்வலமும், ஆர்ப்பாட்டமும் நடைபெற்றன.

விளைவாக, பன்னிரண்டு ஆண்டு கால சிறைவாழ்க்கையில், தூக்குக் கயிற்றைத் தம் இறுதித் தண்டனையாக, எதிர்பார்த்துக் காத்திருந்த அவர், அதிலிருந்து மீண்டு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப் பெற்றார். 1962-ம் வருடம் சிறையிலிருந்து விடுதலையும் பெற்றார்.

பிறகுதான் அவர் எழுத்தாளராக மாறினார். 'தூக்குமரத்தின் நிழலில்' என்ற சிறை அனுபவ நாவலை எழுதினார்.

அமரர் கல்கி (சிவகாமியின் சபதம்), அகிலன் (சித்திரப்பாவை, பொன்மலர், சிநேகிதி), டாக்டர் மு. வரதராசன் (அகல் விளக்கு), தி. ஜானகிராமன் (அம்மா வந்தாள், மோக முள்), நா. பார்த்தசாரதி (சமுதாய வீதி) மற்றும் ஜெயகாந்தனின் சுமார் 20 நாவல்களை மலையாளத்தில் மொழிபெயர்த்தார்.

தகழி சிவசங்கரன் பிள்ளை, மலையாற்றூர் ராமகிருஷ்ணன், எம்.டி. வாசுதேவன் நாயர், பி. கேசவதேவ், எஸ். கே. பொற்றேகாட் ஆகிய மலையாள எழுத்தாளர்களின் நாவல்களைத் தமிழ்ப்படுத்தினார்.

• திருமதி பாலன்



காளிதாசனின் சாகுந்தலத்தை சமஸ்கிருதத்திலிருந்து தமிழுக்கு அழைத்து வந்தவர்.

ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகளோடு தமிழக அரசியலைப் பற்றியும் எழுதியிருக்கிறார்.

இப்போது அவர்

யாரென்று தெரிந்திருக்குமே! அவர்தாம் சி. ஏ. பாலன். 1993 டிசம்பர் 2-ம் தேதி அமரரானவர்.

இவருடைய தேசிய விடுதலை உணர்வைப் பாராட்டும் வகையில் அவருக்கு மத்திய அரசு, தியாகிகள் பென்ஷன் வழங்கி கௌரவித்தது. தமது கணவரின் நினைவாக அதனை அவர் மனைவி தங்கம்மா இப்போது பெற்று வருகிறார்.

ஆனால், தமிழக அரசு சார்பில், வெளியிடப்பட்ட ஆணை எண். 877, நாள் 9.8.92-ன் படி மாநில அரசின் ஓய்வூதியமும் பரிசுப் பொருட்களும் அவரைச் சேர வேண்டும்.

சேரவில்லை.

அரசு ஆணைக்குப் பிறகு ஓராண்டுக்கும் மேலாக சி.ஏ. பாலன் உயிருடன் இருந்தபோதே கிடைக்காத அந்த ஓய்வூதியம், இன்று வரையிலும் அவருடைய மனைவியையும் வந்தடையாமல் இருப்பது பெரிய ஏமாற்றம்.

அரசு ஆணையைப் பின்பற்றி, அரசின் துணைச் செயலாளர் காஞ்சி மாவட்ட ஆட்சியருக்கு ஓய்வூதியம் கொடுக்கும்படி கோரியுள்ளார். (கடித எண் : 16932ஏ/96-3, நாள் : 26.9.96).

ஆனாலும் வரவில்லை!

தமிழ்நாடு சுதந்தரப் போராட்ட வீரர்கள் சமிதியும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. இருந்தாலும் பயனில்லை.

இத்தனைக்கும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் வெ. இறையன்பு அரசுத் துணைச் செயலாளருக்குக் கடிதம் எழுதி (நக. 36733/97,யு.1, நாள் 24.9.97) தான் ஏற்கெனவே அவருக்கு அனுப்பியிருந்த பிரேரணையைத் திரும்பவும் தமது அலுவலகத்திற்கே மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கும்படி கேட்டிருக்கிறார்.

தமிழக அரசு தலைமைச் செயலகம் நான்கு மாதங்களாக மௌனம் காத்து வருகிறது.

தமிழக அரசு, நமது சுதந்தரப் பொன் விழா ஆண்டை இப்படியா கொண்டாடி மகிழவேண்டும்? ●

படங்கள்; செய்தி : **பிரபுசங்கர்**

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? சவால் – சவடால்... என்ன வித்தியாசம்?

! வருகிற நாடாளுமன்றத் தேர்தல் நாட்டில் எல்லோருக்கும் பெரிய சவால்; இந்தச் சூழ்நிலையில் நமது அரசியல்வாதிகளெல்லாம் பேசுவது சவடால்! – குறிப்பாக, "காங்கிரஸ் 39 இடங்களிலும் வெற்றி பெறும்" என்று தங்கபாலு கூறியிருப்பது!

● வீ. முத்துக்குமார், திருமானூர்.

? காங்கிரஸின் இன்றைய நிலைக்குக் காரணம் சோனியாவா? நரசிம்மராவா? கேசரியா...?

! கூட்டு முயற்சி!

● பா. அச்சுதன், சேத்துப்பட்டு.

? எழுத்தாளர் அசோக மித்திரன் படைப்புகளில் பிடித்தது...?

! எத்தனையோ இருந்தாலும் சமீப காலத்துப் படைப்பாக அவர் எழுதிய 'மூன்று லிட்டர் மண்ணெண்ணெய்' (கல்கி – வைட்டமின் கதை). அதைப் படித்தபோது எழுந்த உணர்வு ஒன்றுதலை ஆயுளுக்கும் மறக்க முடியாது. மண்ணெண்ணெய் வீச்சத்தைக் கூட கதையில் அனுபவிக்க முடிந்தது!

● வீ. முத்தையா, திருநெல்வேலி.

? டிசம்பர் ஆறு சம்பவத்துக்குப் பிறகுதான் இந்தியாவில் அடிக்கடி குண்டு வெடிப்புகள் நிகழ்கின்றன. அதற்குக் காரணமான பி.ஜே.பியால் எப்படி நல்லாட்சி தரமுடியும்...?

! ஆட்சியிலே ஒரு மாறுதல் வேண்டும் என்று நினைப்பவர்கள்; நிலையான ஆட்சி வேண்டும் என்று கருதுகிறவர்கள்; சீரிய பொருளாதாரக் கொள்கை நாட்டை உயர்த்த வேண்டும் என்று விரும்புகிறவர்கள் எல்லோரும் பி.ஜே.பிக்கு வாக்களிக்கக் காத்திருக்கிறார்கள். ஆனால் நீங்கள் குறிப்பிடுகிற ஒரு விஷயம் தான் அவர்கள் கைகளைக் கட்டிப் போடுகிறது. இந்நிலை மாற, பி.ஜே.பி. தலைவர்கள் சிறுபான்மையினர் குறித்தும் அயோத்தியா, மதுரா, வாரணாசி குறித்தும் கட்சிக் கொள்கை இதுதான் என்று இறுதியாகவும் உறுதியாகவும் ஓர் அறிக்கை விடவேண்டியது அவசியம். இல்லாவிட்டால் சந்தேகம் தொடரும். அந்த அளவுக்கு வாக்குகளை பி.ஜே.பி. இழக்கும்.

● ஜோதிதாசன், சென்னை – 29.

? மருத்துவமனையில் சுகப் பிரசவத்தைக் கூட சிசேரியன் என்று சொல்லி பணம் பிடுங்கும் அவலம் தொடர்கிறது. குழந்தை பிறப்பைத் தடுக்க, கட்டாயமாக இதுபோல் சொல்லிச் செய்யத் தூண்டுவது அரசின் ரகசிய உத்தரவு என்று மக்கள் பேசிக் கொள்கிறார்களே...?

! இது உண்மையல்ல; சிசேரியன் செய்து கொண்டவர்களுக்கு மறுபடி குழந்தை பிறக்க வாய்ப்பு உண்டு. அது கு.க. அறுவைச் சிகிச்சை அல்ல. ஆனால் ஒரு குழந்தை பிறந்ததுமே 'கு.க. செய்யலாமா?' என்று பிரசவித்த பெண்ணைக் கேட்குமாறு டாக்டர்களுக்கு யோசனை வழங்கப்பட்டிருப்பது உண்மை. சுகப்பிரசவமாக முடியக்கூடியவற்றை 'சிசேரி



• ஆசை இருக்கு...

• ஜெயிப்பு ஜோக்!

பி.ஜே.பியால் எப்படி நல்லாட்சி தரமுடியும்?

யன்' என்று கூறும் துணிவு எந்த டாக்டருக்கும் வராது. காரணம், சிசேரியனில் 'ரிஸ்க்' அதிகம். டாக்டரின் பெயர் கெட்டுவிடும்.

● **கே. எம். சுப்பிரமணியன்,**
பூனாம்பாளையம்.

? அ.தி.மு.க. மாநாட்டில் சசிகலாவைப் பற்றி ஜெ. ஒரு வார்த்தை கூட பேசவில்லையே... ஏன்?

! பொறுங்கள். இப்போதுதானே 'நான் நிரபராதி' கோஷம் உச்சத்துக்கு வந்திருக்கிறது... போகப் போக, 'தோழியும் நிரபராதி' பல்லவி ஆரம்பிக்கும்...!



• வைடமின் டானிக்!

● **ஏ. ஆர். முத்தமிழன்,**
திருவாரூர் – 51.

? இந்த நூற்றாண்டிலும் விஞ்ஞானத்தால் விடுவிக்கப்படாத புதிர் ஏதேனும் இருக்கிறதா?

! சில ஆராய்ச்சிகளின் விபரீதம் தெரிந்தும் விஞ்ஞானிகள் அவற்றைத் தொடர எண்ணுகிறார்களே... மனித மனத்தின் இந்த வக்கிரம்தான் விஞ்ஞானத்தாலும் விடுவிக்க முடியாத புதிர்!



• அடுத்த பல்லவி....

● **அவ்வை கே. சஞ்சீவி பாரதி, கவிங்கியம்.**

? 'என்ன தவறு செய்தேன்... அதுதான் எனக்குப் புரியவில்லை...' என்கிறாரே ஜெயலலிதா...?

! 'ஜெ' ஜோக் அடிக்கக் கூடாது என்பதில்லையே...!



• ஜோக் உரிமை!

● **எம். குணசேகரன்,**
வேலாயுதம்பாளையம்.

? மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் வென்றால் சோனியா பிரதமர் பொறுப்பை ஏற்பாரா...?

! காங்கிரஸில் எல்லோருமே இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

'எனக்குப் பதவி ஆசை கிடையாது' என்கிறார் சோனியா. அதே சமயம் நல்ல தலைவர் அமைந்தால்தான் காங்கிரஸ் பெரும் வெற்றி பெறும் என்கிறார்.

தமிழகத்துக்கு வந்தவர், த.மா.கா., ஜெயின் அறிக்கை பற்றியெல்லாம் மூச்சு விடவில்லை... ஆனால் ஜெயின் அறிக்கை அடிப்படையில் ஆட்சியைக் கவிழ்க்க பின்னணியில் செயல்பட்டார்!

நேரு குடும்பம் – வாரிசு உரிமை என்பது போல் பிரியங்காவை உடன் அழைத்து வருகிறார்; ஆனால் அவர் ஒருசில கூட்டங்களுக்குத்தான் வருவார் என்கிறார்.

'இப்போதைக்கு' நான் காங்கிரஸ் தலைவி ஆகவில்லை என்று கூறுபவருக்குப் பதவி ஆசை இல்லை என்று எப்படி நம்ப முடியும்?!




• ஒண்ணே ஒண்ணு...!

● **கே. கே. வேங்கடேசன்,**
வேலூர்.

? எங்களுக்கு ஒரு சீட் கொடுத்தாலும் சந்தோஷம் என்று சு. சுவாமி கூறியுள்ளாரே...?

! இருக்கிற இருவரில் ஒருவருக்கு சீட் கொடுத்தால் போதாதா...?



• சொல்ல மறந்தது!

● **எம். பிச்சைக்கனி, திருமால்பூர்.**

? அ.தி.மு.க.வும் ம.தி.மு.க.வும் தேனும் இனிப்பும் போல, அம்பும் வில்லும் போல, கருத்தும் குரலும் போல, ரத்தமும் சிவப்பும் போல, மின்னலும் வேகமும் போல, நகமும் சதையும் போல... இணைந்து செயல்படும் என்று நெல்லை அ.தி.மு.க. மாநாட்டில் வை.கோ. முழங்கியிருப்பது பற்றி...?

! அரசியலும் சந்தர்ப்பவாதமும் போல இணைந்து செயல்படும் என்றும் சேர்த்துச் சொல்லியிருக்கலாம்.

● **பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.**

? நமது நாட்டில் விவசாயம் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறதுங்க...?

! ஆந்திராவில் பருத்தி விவசாயிகள் நஷ்டம் தாளாமல் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு!

● **கே. ஆர். ரவீந்திரன், சென்னை – 1.**

? அடுத்து அமையவிருப்பது ராமராஜ்யமா? ரோம ராஜ்யமா? இராம ராஜ்யமா...?

! ஊழல் ராஜ்யமாக இல்லாமலிருந்தாலே போதுமே!

● **லலிதா செல்லப்பா, சென்னை – 74.**

? பெற்றோரை விட்டு விட்டு தனிக்குடித்தனம் போகும் இளம் தம்பதிகளுக்கு உங்கள் ஆலோசனை என்ன...?

! உங்கள் முடிவு பிரிவு அல்ல; பிளவு அல்ல; விலகல் அல்ல, அது ஒரு தேடல் மட்டுமே என்பதை உணருங்கள்; பெற்றோருக்கும் அடிக்கடி உணர்த்துங்கள்.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
வீ. முத்தையா,
35, பாரதியார் தெரு,
திருநெல்வேலி டவுன் - 627 006.

'பெப்ஸி' என்றாலே பிரச்னைதானா?

✉ சண்டைக் கோழியாக முட்டிக் கொள்ளும் இரு குளிர்பான கம்பெனிகளின் முரட்டுத்தனமான கூத்துக்கு இந்தியக் கிரிக்கெட்டின் வருங்கால நம்பிக்கை நட்சத்திரங்கள் பலியாவது கண்டிக்கத் தக்கது. கிரிக்கெட்டில் அரசியல் விளையாடி அவதிப்பட வைத்திருக்கிறது... பணம் விளையாடி பாடாய்ப் படுத்தியுமிருக்கிறது. தற்போது, 'கோக்-பெப்ஸி'-களின் பொறாமையும், போட்டியும் கிரிக்கெட் உலகின் இளைய வீரர்களைச் சாய்த்து வருவதை அருமையாக விளக்கியுள்ளீர். ஆமாம் 'பெப்ஸி' என்றாலே பிரச்னைதானா?
சேலம் -2, சூர்யநிலா

✉ 'பாபுஜி'யின் கூட்டணி மேளா நகைச்சுவைக் கார்ட்டூன் ரொம்பவே வயிற்றைப் பதம் பார்த்து விட்டதுங்க!
அரசரடி, ஏ. சரவணன்

✉ "கந்தலாகிப் போன காங்கிரஸ் சட்டைக்குக் கஞ்சி ஏற்றி (தமது அரசியல் பிரசாரம் மூலம்) பளபளப்பு ஏற்றுவார் சோனியா என கேசரி நினைத்தால் ஏமாற்றமே மிஞ்சும் என அட்வான்சாய் அருளி விட்டீரே தலையங்கத்தில்.
சென்னை - 83,
சி. மகேஷ்

✉ உண்மையான காதலும், நட்பும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் என்பதைப் பன்னிரெண்டு வாரங்களாக 'நிலா வேட்டை'யில் விளக்கிய பா. ராகவனுக்குப் பாராட்டுக்கள் பல!
பொன்மலை, ஆர். பிரகாஷ்

✉ 'நிலா வேட்டை' படித்து முடித்த போது, உலகப் பட விழாவில் ஒரு நல்ல படம் பார்த்த திருப்தி ஏற்பட்டது. கதைச் செறிவும் சம்பவங்களைக் காட்சிப்படுத்திய நேர்த்தியும் விஷுவல் எஃபெக்ட் கொடுத்தது. கதைக் களம், எல்லா நாடுகளின் கலாசாரச் சூழலுக்கும் பொருந்துவதாய் உள்ளது. பாராட்டுக்கள்.
சென்னை - 44, வித்தகன்

✉ நெல்லை மாநாடு: நேரடி ரிப்போர்ட்டில், எம்.ஜி.ஆர். 1987 டிசம்பர் 31ம் தேதி ஜெயலலிதாவை பொதுச் செயலாளராக அறிவித்தார் என்று உள்ளது. அவர் டிசம்பர் 24ம் தேதியே மறைந்து விட்டார். 31ம் தேதி அவர் அறிவித்தது எப்படி?
சென்னை - 78,
ஏ.பி. மதிவாணன்

✉ 'நெல்லை மாநாடு' பற்றி 'நேரடி ரிப்போர்ட்டும் சரி, புகைப்படமும் சரி, நேரில் சென்றிருந்தால் கூட இப்படி ரசிக்க முடியாது. அவ்வளவு தத்ரூபமான புகைப்படங்களும் கட்டுரையும் மிகவும் அருமை!
திருச்சி - 18,
அம்மனூர் என். சாம்பமூர்த்தி

✉ ஜனவரி முதல் தேதியன்று அ.இ.அ.தி.மு.க. தனது வெள்ளி விழா ஆண்டினையொட்டி டைம்ஸ் ஆஃப் இந்தியா மற்றும் எகனாமிக் டைம்ஸ் நாளிதழ்களில் சில படக் கட்டுரைகளை விளம்பரப் பக்கங்களாக வெளியிட்டிருக்கிறது. இந்த ஆறு பக்க வண்ண விளம்பரங்களுக்கு அந்தக் கட்சி குறைந்தபட்சம் ஒன்றரைக் கோடி ரூபாய் கட்டணம் செலுத்தியிருக்க வேண்டும்! ஜெயலலிதாவின் தனிப்பட்ட சொத்துக் கணக்கு, அதன் மீது உள்ள வழக்குகள் ஒரு புறமிருக்க, அ.இ.அ.தி.மு.க. கட்சியிடம் குவிந்து கிடக்கும் பணத்துக்கு அளவே இல்லை போலும்!
புது தில்லி - 91, எஸ். சுரேஷ்

✉ ஆத்திகத்தையும், நாத்திகத்தையும் தராசின் இருதட்டுக்களில் நிரப்பித் தீர்வு கண்ட அற்புதப் படைப்பாக இந்திரா சௌந்தர்ராஜனின் 'நடந்தால் வாழி' சிறுகதை மன நிறைவை ஏற்படுத்தியது. வைகுண்ட ஏகாதசி வாரத்தில் பாலாஜியின் அருள்மிகு தரிசனம் வழங்கிய 'படம்'... கதைக்கு மேலும் மெருகூட்டியது! மனமுவந்த பாராட்டுக்கள்.
வலையப்பட்டி,
எம். பாலசுப்பிரமணியன்.

✉ கல்கியின் கேள்விகளுக்கு சமிந்தா வாஸின் பதில்கள் சிறப்பு. குறிப்பாக அவரின் நிறைவேறாத ஆசை எங்கள் நெஞ்சைத் தொட்டது. பாராட்டுக்கள்.
மணப்பாறை,
து. ஆனந்திராஜா

✉ தாங்கள் நடத்திய இலங்கை அணியினர் பேட்டி மிகவும் அற்புதம். இவ்வாறு நடத்திய பேட்டியை இதுவரை எந்தப் பத்திரிகைகளிலும் நான் படித்ததேயில்லை. இலங்கை அணியின் ஜெயசூர்யா, ரணதுங்கா, டி.சில்வா, முரளிதரன், சமிந்தா வாஸ் ஆகியோருடன் தாங்கள் சுருக்கமாகவும் மனதிற்குள் நிற்கும்படியும் நடத்திய பேட்டி மிகவும் அற்புதம். எனது பாராட்டுகள்!
மயிலை - 4, கே. கமலா

✉ டைரக்டர் கதிருக்குக் காதலிக்க நேரமில்லையா? யாரு வோய் சொன்னது... படு இல்வாடிப்பா அவரு... செலவு தரும் காதலியைவிட்டு விட்டு, வரவு தரும் சினிமாவை படு சீரியஸாகக் காதலிக்கிறாரே!
சென்னை - 73,
க. கலைச்செல்வன்

அழைப்பிதழ் பெற பூவா, தலையா...?



வெரி ஸ்பெஷல் அக்கேஷன், வா(ர்ர்ர்)ம் வெல்கம் என்றெல்லாம் வார்த்தைகளில் உற்சாகம் காட்டினாலும், திரைப்பட விழா அதிகாரிகளும் சரி; வந்திருந்த சுமார் மூவாயிரம் உள்/வெளி நாட்டுச் சிறப்புப் பிரதிநிதிகளும் சரி; ரொம்பவே நடுங்கிப் போயிருந்தார்கள். முதல்நாள் (9–ந் தேதி) தில்லியில் வெடித்த குண்டு மூட்டிய கலவரமோ, பட்டப்படிப்பு வியாபாரமாகி விட்டதைக் கண்டித்துக் கல்லூரி மாணவர்கள், விழா நடக்கிற சிரிஃபோர்ட் வளாகத்து வாசலில் நடத்திக் கொண்டிருந்த தர்ணா ஆர்ப்பாட்டமோ கூடப் பெரிய விஷயமல்ல. தொடக்க விழாவுக்கு வந்திருந்த அறுநூறுக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களுள் என்னவோ குருட்டுக்கணக்குப் போட்டு, நூறு பேருக்கு மட்டும் அழைப்பிதழ் கொடுத்ததால், வந்தது பிரச்னை!

“டைம்ஸ் ஆஃப் இந்தியா, இந்து, சண்டே தவிர, மிச்சமெல்லாம் பத்திரிகைகளாக இருக்கவே தகுதி இல்லை என்று நீங்கள் முடிவு செய்து விட்டால் பின் எதற்கு எங்களுக்கெல்லாம் அக்ரெடிடேஷன் கொடுத்துக் கூப்பிட வேண்டும்?” என்று பீகாரைச் சேர்ந்த ஓர் ஆஜானுபாகு, கோபமும் 'பானு'ம் தெரிக்கும் எதிர்ப்பைத் தொடங்கி வைக்க, அத்தனை பேரும் பிடிபிடி என்று பிடித்துக் கொண்டு விட்டனர்.

ஒருவழியாக மேற்கொண்டு நூறு பேர் அழைப்பிதழ் வாங்க முடிய, கடைசியில் இருவர் (நாமும் ஒரு பெங்காலி பத்திரிகையாளரும்) முறை வரும்போது, ஒரே ஒரு அழைப்பிதழ் மிச்சமிருந்தது.

“டாஸ் போடலாம்” என்று அமைப்பாளர் ஓர் அபாரமான முடிவு சொல்ல, வெடித்த கலவரத்தை விவரிக்க வார்த்தைகளில்லை. நிர்வாகக் குளறுபடி என்பது, திரைப்பட விழாவுடன் ஒட்டிப் பிறந்த செல்லக் குழந்தை.

முதல்நாள் குண்டுப் பிரச்னையோடுகூட, தொடக்க விழாவுக்கு ஜெய்பால் ரெட்டியும் தில்லி முதல்வர் சாகிப்சிங்கும் வருவதாக இருந்ததால் அபாரமான செக்யூரிட்டி பிரச்னை. ஏழு கடல், ஏழு மலை தாண்டி, ஒருவழியாக அழைப்பிதழைப் பிடுங்கிக் கொண்டு அரங்குக்குள் நுழைந்தால் – ஆங்காங்கே காலி இருக்கைகள்! (இந்த விஷயத்தை விழா முடிந்து வெளியே வந்து, அங்கே குளிரில் தவித்துக் கொண்டிருந்த அழைப்பிதழ் கிடைக்காத பத்திரிகையாளர்களிடம் சொன்னபோது, நிறைய ரீஜனல் கெட்டவார்த்தைகள் அறிமுகமாயின.)

பச்சைக் கலர் பட்டுப் புடைவையும் பவுடருமாக ஷோபனா ஆடிய டான்ஸ், வெண்பட்டுக் கேரள தேவதைகளின் அணி வகுப்பு, எம்.பி.

iffi உலகப்பட விழா– 1998

கல்கி—சரவணா ஸ்டோர்ஸ்

இணைந்து வழங்கும்

வாரம் ஒரு பட்டுப் புடவை!

இந்த வாரப் பட்டுப் புடவையைப் பெறுவதற்கான கேள்வி:

இந்த இதழ் முழுவதையும் கவனமாகப் படியுங்கள். ஒரு கட்டுரையில் ஏதோவொரு நாட்டுக்கு அழிவு நேரப் போவதற்கான அறிகுறி இது என்று சீனாவிலுள்ள புத்த பிட்சுக்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. அது எந்த நாடு?

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி அனுப்புங்கள். ஒருவர் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம் என்றாலும் ஜெராக்ஸ் கூப்பன்கள் செல்லுபடியாகாது.

பலர் சரியான பதில்களை எழுதினால் குலுக்கல் முறையில் ஒருவரே தேர்ந்தெடுக்கப் படுவார்.

கூப்பன்கள், ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல் சென்னை-600 097 என்ற முகவரிக்கு வந்து சேரக் கடைசித் தேதி: 2.2.98.

உறையின் மேல் 'பட்டுப் புடவைப் போட்டி – 3' என்று தவறாமல் குறிப்பிடவும்.

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

பட்டுப்புடவை பரிசுப் போட்டி – 3

புத்த பிட்சுக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள

நாடு :..

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

சினிவாசனின் வழித் தோன்றல்கள் நடத்திய சேர்ந்திசை என்று திவச மந்திரம் மாதிரி மாறாத ஆரம்பம். சாகிப்சிங் வர்மா கொட்டாவி விட்டபோது, அவரைப் பேசக் கூப்பிட்டார்கள். பஞ்சகச்சமும் பத்துநாள் தாடியுமாக அவர் 'ஏன்ஷியன்ட் டில்லி'யின் பெருமைகளையும் சுதந்தரப் பொன்விழா ஆண்டில் திரைப்பட விழா இங்கு நடப்பதன் விசேஷத்தையும் அஞ்சு நிமிஷம் பேசிப் போனதும், வந்தார் ஜெய்பால் ரெட்டி.

"ஹாலிவுட்டை விடவும் அதிகப் படங்கள் நம் நாட்டில் – ஒரு வருஷத்தில் எடுக்கப் படுகின்றன. ஆனால் தரம்? சொல்லிக் கொள்ளும்படி எத்தனை படங்கள் வருகின்றன? இங்கே கூடி இருக்கிற சினிமாக்காரர்கள் யோசிக்க வேண்டாமா?'' என்று கோபமாகக் கேட்டபோது, சீதாவுடன் வந்திருந்த பார்த்திபன் லேசாகக் கை தட்டினார். ('சங்கீத'க் கிசுகிசுக்களுக்கு ஒரு முடிவு கிடைத்து விட்டது!)

பிறகு குத்துவிளக்கு ஏற்றினார்கள். விளக்கின் ஐந்து முனைகளில் ஒன்றைப் பற்ற வைப்பதற்காக, கழுத்து மூடிய ரவிக்கையும் இழுத்துப் போர்த்திய புடவையும் தூக்கி நிறுத்திய கொண்டையுமாக மும்பையிலிருந்து பறந்து வந்திருந்தார், மனதைக் கொய்யும் மனிஷா கொய்ராலா.

பிளாஷ்கள் மின்னி அடங்கியதும் 'PIJARICO' என்ற ஸ்பெயின் படத்தைத் தொடக்க விழாப் படமாக, விளக்கணைத்து விட்டுக் காட்டினார்கள்.

விழாவின் ஒரே சிறப்பம்சம், அம்ஜத் அலிகான் அஞ்சு நிமிஷம் நிகழ்த்திய சரோட் கச்சேரி. திரைப்பட விழாவுக்கான தீம் ம்யூசிக்கை அவர்தான் உருவாக்கி இருக்கிறார். அந்த இசையை, மேடையில் தம் இரு புத்திர சிகாமணிகளுடன் அவரே வாசித்துக் காண்பித்தார்.

சித்திர வீணையும் ஜலதரங்கமும் கலந்தாற்போன்ற நாதம் வருகிற அந்த பளபளப்பான கருவியில், அவர் எதையோ தேடத் தேட, பீறிட்டு எழுந்து பிரவகித்த த்வஜாவந்தி, யாராவது ஒரு சினி இசையரால் நகலெடுக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டால், நாடு முழுக்க, ஒரு வருஷத்துக்கு சூப்பர் ஹிட் போட்டியில் முதலாவது இடத்தைப் பிடித்த பாடலாக இருக்கும். ●

புதுதில்லியிலிருந்து: **ஆர்.பி.ஆர்**

லேகியங்களால் இளமை வருமா?

'அறுபது வயதில் இருபது வயது இளமை பெறலாம், இன்றே அணுகுங்கள்' என்று காயகல்ப வியாபாரிகள் ஜிலுஜிலு விளம்பரிப்பது சமீபகால மாக மிக அதிகரித்து வருகிறது. வெளியில் சொல் லாமல் கையைப் பிசைந்து நிற்பவர்கள் இதை வரப்பிரசாதமாய் நினைத்து ஓடுவார்கள். காய கல்பத்தை விழுங்கியதும் மதம் கொண்ட யானை யாக உலா வரலாம் என்ற கற்பனை சட்டென வந்துவிடும்!

ஆனால் இத்தகைய லேகியங்கள் (பலன் இருக் கட்டும்) உடம்புக்கு எத்தனை தூரம் நல்லது? விசா ரிக்க, இப்படி கவர்ச்சிகரமான காயகல்பம் தயா ரிக்கும் டாக்டர் நெல்லை நாயகத்தை அயனா வரத்தில் சந்தித்தோம்.

"அலோபதிகாரங்க வீரியத்தைத் தர்றதாச் சொல்லி ஹார்மோன் ஊசி போடுறாங்க. இது உடம்புல இருக்கிற கொஞ்சநஞ்ச சத்தையும் உறிஞ்சி, ஒரு உற்சாகத்தை மட்டும் தருது. அது பின்னாடி நரம்புத் தளர்ச்சியா மாறிடுது. நாங்க இப்பிடி இன்னார்கானிக்கா மருந்துதர்றது இல்லை! இன்னார்கானிக்கை ஆர்கானிக்கா மாத்தி, மருந்தா இல்லாம உணவா தர்றோம்! அத னால உடம்புக்கு புஷ்டி வருது. சத்தைக் கொடுக்கிறோம். உடம்பிலிருந்து சத்தை எடுக்கிறதில்லை."

ஜாடிகளில் காயகல்பம் பளபளப்பதை ஒரு நோட்டம் விட்டுக் கொண்டோம். அறையே கமகமவென்று வாசனையால் நிரம்பி வழிந்தது!

"சித்தாவில் எந்த இடத்திலேயும் இளமை யைத் திரும்பப் பெற முடியும்னு சொல்லலைன்னு அலோபதிக்காரங்க சொல்றாங்களே?" என்றோம்.

கம்பீரமாய் எழுந்து சித்த மருத்துவப் புத்தகம் ஒன்றைத் தூக்கி வந்தார்.

"பூனைக்காலி வித்தில் (மூலிகை) இன்பத்தை அள்ளிக் கொடுக்கிற சத்து வருதுன்னு போட்டி ருக்கா?" என்று பக்கத்தை விரித்து சுட்டிக் காட்டி னார்.

புத்தகத்தில் அப்படித்தான் இருக்கிறது!

"குழந்தை, வாலிபம், முதுமை என்கிற ப்ராசஸ் இயற்கையானது. அப்படியிருக்க, முதுமையில் இளமைக்குரிய வீரியம் பெற முடியும் என்பது பொய்யில்லையா?" என்றோம்.

"நாற்பத்தஞ்சு வயசில் எதையோ இழந்து விட்டது மாதிரி சோர்ந்து போறீங்க. அத இந்த காயகல்பத்தால மாத்த முடியும். ஏன், உடம்பு பல வீனமா ஆகுது? முதல்ல உடம்பு நல்ல நிலையில் இருக்கான்னு பரிசோதிக்கிறோம். எதனாலன்னு செக் பண்றோம். முதல்ல, உடம்பில இருக்கிற துர்நீரை வெளியேத்துறோம். அதனால் தளர்ச்சி போயிடுது. முதலில் உடம்பைப் பழைய நிலைக் குத் தேத்தணும். பாடி நியூட்ரலுக்கு வந்த பின் னாடிதான் இளமைக்கு உகந்த மருந்து தரணும்! அந்த காமவர்த்தினியை சாப்பிட்டா வயசானவங் களுக்கு இளமை திரும்ப வரும்!" என்று அடித்துச் சொல்கிறார்.

காயகல்ப விஷயத்தை பிரபல செக்ஸாலஜிஸ்ட் டாக்டர் நாராயண ரெட்டியிடம் எடுத்துச் சென்றோம்.


"ஆயுர்வேதிக்கில் எட்டு சேப்டர் இருக்கு. ஒரு இடத்துலகூட சக்தி பெற இன்ன செடின்னு சொல்லலை! இந்தக் கலவையில் சேர்த்தா வீரியம் கிடைக் கும்னு சொல்லலை! காயகல்பத்தை இளமையைத் தர்ற சரக்கா சொல்லவே முடியாது! உடம்பை நல்லா வெச்சுக் கறதுக்கு, சித்தா பயன்படலாம். ஆனா, காயகல்பம் சாப்பிட்டா இளமை பொங் கும் என்று சொல்வது பொய்" என்றார்.

"வயதானவங்க இன்பத்தைப் பெற லாம் அப்படீன்னு விளம்பரம் போடு றாங்களே!"

"காயகல்பத்தைச் சாப்பிடலைன் னாலும் தாம்பத்திய வாழ்க்கையில் முழு மையா ஈடுபடலாம். சாகற வரைக்கும் ஈடுபடலாம். இளமைங்கிறது அவங்க உடம்பை எப்படிப் பாதுகாப்பா வச்சிக் கிட்டு இருக்காங்க என்பதைப் பொறுத்து அமை யுது. சுக்ரம், தாது உடம்பில குறைந்தால் டோட்டல் பாடி அஃபெக்ட் ஆகும். டோட்டல் பாடி அஃபெக்ட் ஆகறதால இயற்கையாவே இல்லற சுக நாட்டமும் குறையும்!"



• நாராயண ரெட்டி



• நெல்லை நாயகம்

"அப்போ உடம்பை இளமையா வச்சிருக்கறது எப்படி?"

"உடம்பை மெயின்டெயின் பண்ணத் தெரி யணும். ரிடையர் ஆன பின்னாடிதான், குறைகள் தெரியும். 'அதைப் பண்ணாம விட்டுட்டோமே' 'இதப் பண்ணாம விட்டுட்டோமேன்னு' தோணும். 55 வயசில்தான் வாக்கிங் போகணும்னு ரூலா? சம்பாதிக்கிறது ஒரு பக்கம் நடந்தா, உடம்பைப் பராமரிக்கிறதும் சின்ன வயசிலிருந்தே வரணும். செல்ஃப் டிசிப்ளின் ரொம்ப முக்கியம். அதோட பீஸ்ஃபுலா வாழ்க்கையை அமைச்சுக்க முயற்சிக் கணும். இதெல்லாம்தான் மனிதனை இளமையா வச்சிருக்கு. இந்த நடத்தை இருந்தாதாம் பத்தி யத்தில் எப்பவும் இளமையா இருக்கலாம்!"

— அம்மாபட்டி ஜம்பு

படம் : ஸ்ரீஹரி



• பாராட்டு விழாவில்.... (நடுவில் இருப்பவர் ராஜம்)

மனத்தில் பதிந்த மும்மூர்த்திகள்!

சில வருடங்களுக்கு முன் கல்கி தீபாவளி மலரில் கனகதாசர் பற்றிய கட்டுரை ஒன்று இடம்பெற்றது. (கன்னட தேசத்து தாசர்கூட அமைப்பைச் சேர்ந்த பக்தி இலக்கியகர்த்தா கனகதாசர்.) அக்கட்டுரைக்கு வண்ணப்படம் வரையச் சொல்லி ஓவியர் வேதகணபதியைக் கேட்டிருந்தோம். இளைஞரான வேதா, கனகதாசருக்கு எப்படி உருவம் கொடுப்பது என்று மிகவும் யோசித்தார். இவ் விஷயத்தில் அவருக்கு உதவக்கூடிய ஒரே நபர் ஓவியர் எஸ். ராஜம்தான் என முடிவுசெய்து, வேதாவை மயிலையில் உள்ள ராஜம் வீட்டுக்கு அழைத்துப் போனோம்.

இளைஞரை அறிமுகப்படுத்தியதுமே ராஜம் வேதா வடிவமைத்த புத்தக அட்டைகளைத்தான் முதலில் நினைவுகூர்ந்து பாராட்டினார். பிறகு கனகதாசரை எப்படி வரையலாம் என்று யோசனைகள் கூறினார் : "புரந்தர தாசரைப் போல் உடையும் தோற்றமும் இருக்கலாம். ஆனால் கனகதாசர் படைவீரராக இருந்து, பின்னர்தான் தாசர்கூட அமைப்புக்கு வந்தார். எனவே அவரது முகத்தில் சாந்தம் ததும்பினாலும் புஜங்களில் வலிமை தெறிக்க வேண்டும்...." என்று ஒரு முக்கியமான குறிப்பைக் கூறி உதவினார். அந்தக் குறிப்புகளின் உதவியுடன் வேதா வரைந்த படம்தான் கல்கி தீபாவளி மலரில் இடம்பெற்றது. அந்தப் படத்தையும் பாராட்ட மறக்கவில்லை எஸ். ராஜம்!

ஒரு மூத்த கலைஞர் இளையவரை இவ்வாறு ஊக்குவித்து, மனம் விட்டுப் பாராட்டுகிறபோது, அவரது சிறந்த பண்பாடு மட்டுமின்றி உயர்ந்த கலையுள்ளமும் வெளிப்படுகிறது. சமீபத்தில் எண்பது வயதை எட்டிய எஸ். ராஜத்துக்கு சரஸ்வதி அமைப்பு நடத்திய பாராட்டு விழாவில், அவருடைய வேறு பல பரிமாணங்கள் பற்றியும் தெரிந்து

கொள்ள முடிந்தது.

கர்நாடக சங்கீதத்தின் மும்மூர்த்திகளாகக் குறிப்பிடப்படும் தியாகராஜர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரி ஆகியோரை ஓவியங்களாக வரைந்து ரசிகர்களின் மனத்திரையில் பதித்தவர் எஸ். ராஜம். அங்கீகாரமும் வரவேற்பும் பெறுகிறவகையில் அவரால் இக்காரியத்தைச் செய்ய முடிந்திருக்கிறது எனில், அதற்குக் காரணம் கர்நாடக இசையில் அவருக்கு உள்ள ஆழ்ந்த புலமையும் ஆராய்ச்சி நோக்கும் ஈடுபாடும்தான்.

இந்தப் புலமையின் உதவியுடன் 35 ஆண்டுகள் அகில இந்திய வானொலியின் கர்நாடக இசை நிகழ்ச்சிப் பிரிவில் பணியாற்றி, அப்பிரிவுக்கு அந்தஸ்து கூட்டியிருக்கிறார்.

ஆராய்ச்சி நோக்குடன் இசையை அணுகி விவாதி ராகங்களைப் பிரபலப்படுத்தியிருக்கிறார். கோடீஸ்வர அய்யரின் கீர்த்தனைகளை உலகறியச் செய்ததில் இவருக்கு மிகப் பெரிய பங்கு உண்டு.

ராஜம் ஒரு மிகச் சிறந்த இசை ஆசிரியரும் கூட என்பதை, பாராட்டு விழாவில் கூடியிருந்த அவருடைய சிஷ்யர்கள் கூட்டமே உணர்த்தியது!


திரைப்படத் துறையில் இசையமைப்பாளராகவும், பின்னணிப் பாடகராகவும் நடிகராகவும் தடம்பதித்திருக்கிறார் ராஜம்.

தமது எண்பதாவது வயதிலும் அவர் சளைக்காத உற்சாகத்துடன் ஓவியம் வரைவதில் ஈடுபட்டிருப்பதைக் குறிப்பிட்டுப் பாராட்டினார் என். மகாலிங்கம். பெரிய புராணம், திருவிளையாடல் புராணக் காட்சிகளை ஓவியமாக்கியவர் கந்த புராணத்தையும் வரைய ஒப்புக் கொண்டிருப்பதைச் சொன்னார்.

ராய் சவுத்ரி என்கிற ஓவிய மேதையிடம் பயிற்சி பெற்றவர் ராஜம். சென்னை ஓவியக் கல்லூரி (அப்போது பள்ளி)யில் பயின்றவர்... இன்று அவர் வரையும் தெய்வீக ஓவியங்கள் கடல் கடந்து சென்று நாட்டுக்கே பெருமை சேர்த்து வருகின்றன.

இத்தனை பெருமைகளையும் எடுத்துச் சொல்லி பலர் அன்றைய விழாவில் பேசினார்கள். அத்தனை பேரும் ஒருமுகமாக நினைவுகூர்ந்த விஷயம் : எஸ். ராஜத்தின் எளிமையும் நேசமும். இந்த குண இயல்புகள்தான் அவர் கைவண்ணத்திலும் இசையிலும் வடிவம் பெற்று அவரை வேறுபட்ட கலைஞராய் உலகுக்கு உணர்த்துகின்றன. இவற்றை வெளிப்படுத்தும் வகையில் அவரைப் பற்றி ஒரு வீடியோ காஸெட் தயாரிக்கப்பட்டு விழா மேடையில் வெளியிடப்பட்டது.

— எஸ்.ஆர்




''தலைவருக்கு நம்ம கட்சியிலே இன்னொரு விருது கொடுக்கப் போறோம்...''

''என்ன விருது?''

''அறிக்கை அரசன் விருது!''

— ந. கஜேந்திரன்



''திரும்பத் திரும்ப பழைய தேர்தல் வாக்குறுதிகளையே சொல்லிச் சொல்லி சலிச்சுப் போச்சு...''

''அதுக்காக; நாங்கள் ஜெயித்தால் கல்யாண மண்டபத்தில் செருப்பு திருடப்படுவதைத் தடுப்போம்'னு தேர்தல் வாக்குறுதி கொடுக்கணுமா தலைவா?''

— ஜி. செல்லத்துரை




''பொங்கல் ரிலீசுலயே உங்க படம் தான் பார்க்குற மாதிரி இருந்தது...''

''அப்படியா, ரொம்ப சந்தோஷம்.''

''ஆமாங்க, மற்ற படத்துக்கெல்லாம் டிக்கெட்டே கிடைக்கல!''

— தாரை மா. மகேஷ்ப்ரியன்

நாடக மேடையிலிருந்து சங்கீத உலகுக்கு ஒரு ட்ரிப்!



சங்கீத வித்வான்களுக்கான ஸ்பெஷல் டாக்ஸி இது...

கொண்டை வளர்த்துத் 'தைதை' போட்டு நாடக மேடையில் 'ஆல்ரவுண்டர்' ஆக இருந்தவர் முருகன். இன்றைக்கு சங்கீத வித்வான்கள் அத்தனை பேருக்கும் நன்கு பரிச்சயமான 'பார்த்தசாரதி' இவர்.

நவாப் ராஜமாணிக்கம் கம்பெனி, தேவி நாடக சபா, வைரம் நாடக சபா என்று வளைய வந்த போது வளர்ந்தது சங்கீத ஞானம். நவாப் கம்பெனியில், பிரத்தியேகமான ஆசிரியர் - பொன்னம்பல வாத்தியார் என்ற ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர் வந்து, படிப்பில் ஆர்வமுள்ள பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார். அப்படியே ஏழாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றது பொன்னம்பல வாத்தியாரிடம்!

பரம்பரை நாடகங்கள் தேயத் தொடங்கியபோது டாக்ஸி ஓட்டத் தொடங்கினார் முருகன். '73-ஆம் ஆண்டில் இவரை சங்கீதக்காரர்களிடம் அறிமுகம் செய்து வைத்து ஆதரவளித்தவர்கள் மிருதங்க வித்வான் கந்தசாமிப் பிள்ளையும், ஸ்ரீமுஷ்ணம் ராஜாராவும்தான்.

அப்போது முதல் சென்னை நகர் சுற்று வட்டாரத்துக்குள் நடக்கும் எல்லா சபாக் கச்சேரிகளுக்கும், விமான, ரெயில் நிலையங்களுக்கும் வித்வான்களை அழைத்துச் சென்று வருவதே முருகனின் வேலையாயிற்று.

அந்த நாளைய மகாராஜபுரம் சந்தானம் முதல் இன்றைய மாண்டலின் ஸ்ரீநிவாஸ் வரை அத்தனை பேரின் அன்புக்கும் பாத்திரமானவர் இந்த முருகன்.

"**ச**ந்தானம் கச்சேரி முடிந்ததும் தாசப்பிரகாஷ் ஹோட்டலுக்கு இரவு பன்னிரண்டு மணியானாலும் போய்ச் சூடாக இட்டிலி சாப்பிடுவார். பக்கத்திலேயே நானும் அமர்ந்து சாப்பிட்டால்தான் அவருக்குத் திருப்தி. அப்படியே கல்யாணங்களுக்குப் போனாலும், முதலில் முருகனைச் சாப்பிடச் சொல்லு என்று உபசரிப்பார்" என்று நினைவுகளில் அமிழ்கிறார்.

சாண்டியல்யனின் ரசிகரான முருகன், அவர் தொடர் எழுதுகிற போது கடற்கரைக்குத் தம் வண்டியில் அழைத்துச் சென்று வருவாராம். இதற்கு ஊக்க போனஸாக அடுத்த வாரக் கதையை முன்னாலேயே கேட்டுத் தெரிந்து கொள்வாராம்! "சந்தானம் சார் மாதிரியே பெரிய பெரிய ஹோட்டல்களுக்கெல்லாம் அழைத்துப் போய் வயிறாரச் சாப்பிடச் சொல்லுவார். இவர்கள் எல்லாம் ஒரு போதும் என்னை டாக்ஸி டிரைவர்தானே என்று எண்ணியதில்லை. சமமாகவே நடத்தி, அன்பைப் பொழிந்தது நான் பெற்ற பேறு" என்கிறார் முருகன்.

சிட்டிபாபு சொந்தத்தில் கார் இருந்தபோதிலும் வீணையை எடுத்துப் போகும் வசதிக்காக முருகனின் அம்பாசிடரில்தான் போய் வருவார். அப்படியே செம்மங்குடி மாமாவும்! சென்னையில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை ஏற்கப் போகிற நேரங்களில் "கூப்பிடு முருகனை"த்தான்!

சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் 'முருகன்' தேவைப்பட்டால்?

"என்னுடைய நண்பர்களின் டாக்ஸியையே நான் ஏற்பாடு செய்து தருவேன். அதில் பிரச்னையே இல்லை..."


முருகன் வைத்துள்ள அம்பாசிடர் டாக்ஸி எண்ணிலும் சங்கீத வாசனை.MSV. 4463.!

— சுப்ர.பாலன்

படம்: யோகா

"இந்தியாவை இனிமேல் நிமிர்ந்து பார்ப்பார்கள்!"

இப்போதுதான் உலக கிரிக்கெட் சங்கத் தலைவராக ஓர் இந்தியர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர்தான் டால்மியா. இதற்கு முன்பு இந்திய கிரிக்கெட் சங்கச் செயலாளராக இருந்த இவர், சென்ற 96-ம் ஆண்டில் மட்டும் இந்திய கிரிக்கெட் சங்கத்துக்கு அறுநூறு கோடி ரூபாய் வருமானம் பெற்றுத் தந்தார். சந்தித்தபோது....



"உலகக் கிரிக்கெட் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் நீங்கள்தான் என்கிற நிலையிலும் சிலர் உங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்ததேன்?"

"வேறென்ன! பொறாமைதான்; வயிற்றெரிச்சல்தான். ஆரம்பத்தில் இவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதில் மிகுந்த நம்பிக்கையோடு இருந்தார்கள். அதனால்தான் நான் முன்னின்று நடத்திய உலகக் கோப்பைப் போட்டி பற்றி இவர்கள் எதுவுமே கூறாமல் இருந்தார்கள். இவர்களின் நம்பிக்கை பொய்த்துப் போய் நான் தேர்ந்தெடுக்கப்பட்டதை அவர்களால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அந்த வயிற்றெரிச்சல்தான் உலகக் கோப்பைப் போட்டி முடிந்து ஓராண்டு ஆன பிறகு ஊழல் குற்றச் சாட்டுகளைச் சுமத்தினார்கள். அவர்களுடைய குற்றச் சாட்டுகளை நான் நீதிமன்றத்தில் சந்திக்கத் தயாராயிருப்பதாகச் சொன்னவுடன் அவர்கள் பின் வாங்கி விட்டார்கள். இதற்கு என்ன அர்த்தம்? வயிற்றெரிச்சல்தானே!

"உலக கிரிக்கெட் சங்கத் தலைவராக இருக்கும் முதல் இந்தியர் நீங்கள் என்கிற ஒரு பெருமை தவிர, வேறு பெருமைகளையும் இந்தியாவுக்குச் சேர்க்க முடியும் என்று கருதுகிறீர்களா?"

"நிச்சயமாக...நிச்சயமாக! ஒரு காலத்தில் கிரிக்கெட் என்றால் அது இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் மட்டுமே சொந்தம் என்று உரிமை கொண்டாடினார்கள். நம்ம கபில் 83-ல் உலகக் கோப்பையை வென்ற பிறகுதான் இந்தியாவைப் பற்றியே அவர்கள் தெரிந்து கொண்டார்கள்.

87ல் உலகக் கோப்பைக்கான போட்டியை இந்தியாவில் நடத்த வேண்டுமென்று முடிவு செய்தோம். ஏன் தெரியுமா? 83ல் உலகக் கோப்பை போட்டியின்போது மற்ற நாடுகள் நம்மைச் சரிவர நடத்தவில்லை. மேற்கிந்தியத் தீவினர்தான் கோப்பையைப் பெறுவார்கள் என்கிற நம்பிக்கையில் நம்மைக் கேவலமாகவே நடத்தினார்கள். அதன் காரணமாகத்தான் 87-ல் நாம் நடத்தினோம். அப்போதும் இந்தியாவில் எப்படி வெற்றிகரமாக நடத்த முடியும் என்கிற அவநம்பிக்கையுடன்தான் அவர்கள் (ஆஸ்திரேலியா, இங்கிலாந்து) இருந்தனர். அதற்கு மாறாக நாம் வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். கூடவே வெற்றிக் கோப்பையைப் பெறும் அணிக்கான பரிசுத்

பொன்னியின் செல்வன்; ஆர்ப்பாட்டமான வரவேற்பு!

♦ புதன் விடிந்தும், விடியாத வேளை... இரயில்வே ஸ்டேஷன் (சுமார் 2 கி.மீ. இருக்கும்) சென்று கல்கியை வாங்கி, ஒரு கப் காபியையும் சூடாகக் குடித்துவிட்டு பொன்னியின் செல்வனை ஆரவாரமின்றி அமைதியாகப் படித்துவிட்டு, விடிகின்ற வேளை மீண்டும் வீட்டிற்கு மிதிவண்டியின் உதவியுடன் வந்து சேர்ந்தேன். தேகப் புத்துணர்ச்சி + அகப் புத்துணர்ச்சி இரண்டையும் ஒருங்கே பெற்றேன்.



கும்பகோணம், ஆர். ஷண்முகம்

♦ 'பொன்னியின் செல்வன்' என்னும் வரலாற்றுக் காவியத்துக்கு ஓவியர் பத்மவாசன் வரையும் சித்திரங்கள் ரொம்பப் பொருத்தமாக அமைந்து உள்ளன. தங்கப் பாத்திரங்களுக்கேற்ப தங்கமயமான ஓவியங்கள். பொன்னியின் செல்வன் பாதுகாக்கப் பட வேண்டிய வரலாற்றுப் பொக்கிஷம்.

நெய்வேலி, மீனாட்சிநாதன்

♦ அட்டைப்பட ஓவியத்தைக் கண்டவுடன் உள்ளத்தில் பூரிப்பு. மொத்தத்தில் 'கல்கி கலெக்ஷன்' சூப்பர்ப்! தவிர நாங்கள் புண்ணியம் செய்தவர்கள். இல்லையென்றால் மீண்டும் ஒருமுறை 'பொன்னியின் செல்வனைப் படிக்க முடியுமா?

பூனாம்பாளையம், ஆர்.பி.ஜெயச்சந்திரன்

♦ லட்சக்கணக்கான வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தனியாகப் பிரித்து எடுக்கும் வகையில் மீண்டும் எங்கள் காவிய நாயகன் பொன்னியின் செல்வனை எங்கள் குடும்பத்திற்கு வாரா வாரம் வருகை தரச் செய்தமைக்கு கோடி கணக்கான நன்றிகள்!

சித்தோடு, டி. சந்திரன்

♦ இறைவா! அமரர் 'கல்கி'யின் பொன்னியின் செல்வனை மீண்டும் ஒருமுறை முழுமையாக வாரா வாரம் தொடர்ந்து படிக்க வாய்ப்புக் கொடுத்தாயே, அது போதும்!

சென்னை - 64, க. குருமூர்த்தி

(ஏரான கடிதங்கள் குவிந்துள்ளன. அனைத்தையும் பிரசுரிக்க இயலாததற்கு வருந்துகிறோம்...)

–ஆர்.

தொகையையும் அதிகப்படுத்திக் கொடுத்தோம்! கடந்த 96–ல் இலங்கை, பாகிஸ்தான் நாடுகளோடு கூட்டுச் சேர்ந்து நாம் நடத்திய உலகக்கோப்பைக்கான போட்டியும் அவர்கள் எதிர்பாராத அளவுக்கு வெற்றிகரமாக அமைந்தது. காரணம், ஆஸ்திரேலியாவும் மேற்கிந்தியத் தீவினரும் இலங்கையில் சென்று ஆடமாட்டோம் என்று பிரச்னை செய்த நேரத்திலும் நாம் நடத்திக் காட்டினோமே அது சாதாரண விஷயமல்ல.

"உலக கிரிக்கெட் சங்கத் தலைவர், மற்றும் பல முக்கிய பொறுப்புகளில் அமர்ந்து கொண்டு, தங்களுக்கேற்றபடி விதிமுறைகளை வகுத்துக் கொள்கிற பிற நாட்டவரை எப்படி எதிர்கொள்வது...? அதற்கு உலக கிரிக்கெட் சங்கத் தலைவராக ஆனால்தான் முடியும். எனவேதான் நம்மைப் போலவே சரிவர நடத்தப்படாமலிருக்கிற பிற நாடுகளின் ஆதரவைத் தேடித் திரட்டினேன். வெற்றியும் பெற்று விட்டேன்.

"முன்பெல்லாம் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவு, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய ஆறு நாடுகள் மட்டுமே டெஸ்ட் பந்தயங்கள் ஆடின. கடந்த ஆறு ஆண்டுகளாக இந்தியா எடுத்துக் கொண்ட முயற்சிகள் காரணமாகத்தான் இலங்கை, தென்னாப்பிரிக்கா, ஜிம்பாப்வே ஆகிய நாடுகளும் டெஸ்ட் பந்தயங்கள் ஆடும் நாடுகளுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. விரைவில் பங்களாதேஷ், கென்யா, மலேசியா, கனடா போன்ற நாடுகளும் சேர்த்துக் கொள்ளப்படும். உலகக் கோப்பைப் பந்தயம் என்பது நான்காண்டுகளுக்கு ஒருமுறை நடப்பதை மாற்றி இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடத்த இருக்கிறோம். மேலும் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு மட்டுமல்ல, ஸ்கோரர்கள், அம்பயர்கள் ஆகியோருக்கான சம்பளத்தையும் உயர்த்தப் போகிறோம்."

"டெஸ்ட் பந்தயங்கள் விளையாடும் நாடுகளின் எண்ணிக்கையை உயர்த்துவதால், அந்த நாடுகளுக்கு அதனால் என்ன பயன் கிடைக்கப் போகிறது?"

"என்ன பயனா? உலகக் கோப்பையை வெல்வதற்கு முன் இலங்கையை யார் மதித்தார்கள்? இன்று இலங்கை அணியின் மதிப்பு என்ன தெரியுமா? இப்படிப்பட்ட வாய்ப்பு பிறநாடுகளுக்கும் கிடைக்கிறபோது, உலக அளவில் அவற்றின் மதிப்பு உயரும். இது போதாதா!" ●

படம், பேட்டி: **நந்தினி**

KV/152

3

அதி நவீன ஹாக்சா பிளேடு வேலை. ஜீவாவுக்குப் பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது. வளர்ந்த ஒரு அல்சேஷனை இவ்வளவு விஸ்தாரமாகக் கொல்வது எப்படிச் சாத்தியம்? ஆங்! முதலில் மயக்க மருந்து ஸ்ப்ரே. பின், சீசரின் கழுத்தைக் குரூரமாக அறுத்து....

ஜீவா முகம் பாறை மாதிரி இறுகி இருந்தது. ஷீலா, உனக்கு ஒரு பரிசு! கடவுளே, மறுபடியும் புடைவையா? இல்லை பெண்ணே! இது வேறு. பிரம்புப் பெட்டியைப் பிரித்துப் பார்.

வாவ்! அல்சேஷன் குட்டி!

பரிசு எப்படி?

எதிர்பாராத இனிய ஆச்சர்யம். வந்தனம், ஜீவா; விலையே இல்லாத பரிசு இது.

இல்லை ஷீலா! உயிருக்கு விலை பேசி உலை வைக்க உலவும் ஒரு கும்பல் இருக்கிறது. நிழலான வேறு உலகம் இது.

இறந்தது. மென்மையான ஷீலாவுக்கும் கௌதமுக்கும் தெரியக் கூடாது. தாங்க மாட்டார்கள். வீட்டுக்குள் சென்று தோட்டச் சாமான்கள் எடுத்து வந்தான். பில்டிங்கின் பக்கவாட்டில் மட்டும் ஒற்றை விளக்கு அனுமதித்திருந்தான்.

குழி வெட்டத் தொடங்கினான். ஜீவாவுக்கு இந்த ஆட்டத்தின் தலை, வால் புரியாத சிக்கல். சிக்கியிருக்கும் சூழ்நிலையும் சூதும் புரியவில்லை. சூத்திரதாரி தெரியவில்லை. தனக்கு விடுக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கை என்பது மட்டும் புரிந்தது; எவரோ எதற்



காகவோ தன்னைப் பயமுறுத்த மேற்கொண்ட மூர்க்க முயற்சி இது. தன் கடந்த காலம் தெரியாத வர்கள் போலும்! உயிருக்கு உத்தர வாதம் இல்லாத ஏஜெண்டாக இருந்தவனைப் பயப்படுத்துவது என்பது இயலாத காரியம்.

இந்த ரத்தமும் சாவும் மிகவும் பழகிய விஷயங்கள். தேசத்திற்காக, தொழில் முறையில் அவனே எதி ரணியினருக்குப் பலமுறை செய் திருக்கிறான்.

சீசரை இழுத்து வந்து மெல் லக் குழியில் கிடத்தினான். வருத் தத்தில், அவன் மனம். சீஸர்! மாலை வரை நல்ல தோழன்; சற்று முன் வரை காவலன்; எந்நேரமும் துள்ளிய உயிர்ப் பந்து. ஒரே வீச்சு. முடிந்தது எல்லாம். இப்போது...

சீஸர் முடிவில், வேறொன்றும் தோன்றியது. எந்த லெவ லுக்கும் தயார் என்ற அபாய அறிவிப்பு அது. அடுத்து அவர்கள்... மனைவி, மகளை நினைத்ததும் அவனுள் ஐஸ் நதி.

கொஞ்சம் மணல் புரட்டல். பரவலாகச் சருகு விசிறல். இடம்பெயர்ந்த ஓரிரண்டு தொட்டிச் செடிகள். அவ்வளவு தான். சிதைந்த சீஸர் புதைந்த கவடையே காணோம். சிந்திய ரத்தக் கறைதான் எங்கே?

இன்னும் ஒரு வேலை. துவங்கிய பொய் முழுமையாகட் டும். வாசல் காம்பவுண்டு கேட்டின் பூட்டைத் திறந்தான். இரில் கேட்டை ஒருக்களித்துத் திறந்து வைத்தான்.

எஜமானரே! என்னடா செல்லம்? தாக்கியவர்களை எனக்குத் தெரியும். ஆ! ஆம், எஜமானரே. உடன் வந்தால் காண்பிப்பேன். எவ் வளவு உயரம். எவ் வளவு மேகங்கள். இங் கிருந்து என்ன தெரியும்? எல்லாம் தெரியும். அவர்கள் மனம் கூடத் தெரிகிறது. அடுத்ததும், ஒரு கொலை! என் னது! பலி யார் தெரியுமா?

இன்று வாழலாம் வா!



கமான் சீசர்!

"ஜீவா! ஜீவா!"

ஷீலாவின் கூவல், உலுக்கல். விழித்துக் கொண்டான். தெரிந்தும், "என்னம்மா?" என்றான்.

"நம் சீஸரைக் காணோம்!"

"வ்வாட்! என்ன சொல்கிறாய்?" என்ற ஜீவா முகத்தில் பதற்றம்.

"கேட்டும் திறந்திருக்கிறது!"

"என்ன!" என்றான் வியப்பின் எல்லையில்.

மறுபடியும், தான் உளவாளியாகி விட்டோமா என்று பிரமை தட்டியது. ஒற்றர் உலகில், எல்லாமே நயவஞ்சக நாடகம்தான். நரித்தனமான பொய்கள்தாம். அனுமதித்த

பத்மா ரவிசங்கர்

மகனைப் பற்றிப் பேச மறுக்கும் அப்பா!



"என்னிடம் என்ன வேண்டுமானாலும் கேளுங்கள்; சொல்கிறேன். ஆனால் என் மகனைப் பற்றி மட்டும் என்னிடம் எதுவுமே கேட்கக் கூடாது!'' என்று எல்லா பத்திரிகையாளர்களிடமும் ஒரு கண்டிஷன் போட்டு விட்டுத்தான் பேசுகிறார், எழுபத்தைந்து வயதுக்கு மேலான – ஓய்வுபெற்ற அந்த மராத்தியப் பேராசிரியர். மும்பை தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டின்படி மும்பையில் புதிதாகக் குடியேறும் தமிழர்களுக்கு மராத்தி சொல்லித் தரும் இந்தப் பேராசிரியர் பெயர் : ரமேஷ் டெண்டுல்கர். ஆமாம்; சச்சின் டெண்டுல்கரின் அப்பாதான்!

படம்; சந்திப்பு : பிரபுசங்கர்

அளவில்தான் உணர்ச்சிகளும். ஜீவா, கொஞ்சம் வியப்பு காண்பி. இதோ. பயந்தால், அசந்து விடுவான். பயமா? காண்பிக்கிறேன். ஏமாந்தால்தான் என்னவாம். ஊஹும். உடனே, லேசாக வழிந்தால் தப்பில்லை. உருக்கமாக ஒரு வார்த்தை. இரண்டு சொட்டுக் கண்ணீர், ப்ளீஸ். ஒரு தேர்ந்த உளவாளிக்கு, ஸ்விட்ச போட்டது போல் வேண்டிய உணர்ச்சிகள் எல்லாமே சாத்தியம்.

வாசலுக்கு வந்தார்கள். ஜீவா, மிகக் கவனம் போல் பார்த்தான்! கேட், முன்னிரவு விட்டுச் சென்ற நிலையிலேயே.

"ஹிஹி... எனக்குப் புரிந்து விட்டது!'' என்றான் மன்னிப்புக் கோரும் குரலில்.

"என்ன புரிந்தது?''

"வந்து... நேற்றிரவு கேட்டைப் பூட்ட மறந்திருக்கிறேன்!'' மனைவியிடம் பொய். மற்றொரு பொய்! மறவாதே மகனே. கண்ணைப் பார்த்து பொய் சொல். இது, உளவின் அடிப்படை. ஆத்மாவின் போதனை. சட். எங்கே பொய் பிரயோகம் ஆகிறது!

"குனிந்து வளைந்து குழைந்து வணங்கிய பார்ட்டியின் களைப்பு எனக்கு!'' என்று நகைச்சுவையாக்கி மழுப்பினான். "கேட்டின் மேல் தாழ்ப்பாளும் போடவில்லை போல!''

"சரி ஜீவா. சீஸர் எங்கே?''

"புரியவில்லையா? திறந்திருந்த கேட் வழியே அது ஓடி விட்டது!''

"என்னது?'' என்றாள் அதிர்ச்சியுடன்.

"அது தன் இணையைத் தேடி ஓடியிருக்கும்!'' ஸ்விட்சு. கண்களில் குறும்பு!

"இதுவரை இதுபோல் ஆனதில்லையே ஜீவா...''

"ஏதோ திடீர் மூடு. கவலையை விடு. சில நாட்களில் அதுவாகவே வந்து விடும்!''

"உண்மைதான். இது இயற்கை. நாம் என்ன செய்ய முடியும்?''

சடுதியில் சமாதானமான அப்பாவி ஷீலா! அவனுள் குபுக்கென்று எதுவோ புரண்டது.

மாலை 4:00. முகம் கழுவி, பனிச் ஆரஞ்சு சூரிதாரில் ஷீலா. ஜீன்ஸில் கௌதம்.

ஜீவா புரிந்து கொண்டு, "என்ன புரோகிராம்?''

"இன்று ஞாயிறுதானே. சீசர் இல்லாமல் கௌதமிற்கும் போரடிக்கிறது. பீச்?''

ஜீவா தலையசைத்து சற்று நேரத்தில் தயாரானான். காரில் புறப்பட்டார்கள். ஸ்கூரியோவைத் தட்ட, சோனியா. 'டாடி. ஹார்ன்!' என்று நச்சரிக்கும் கௌதம்.

வழியில் நிழல் மகன் எவனையும் காணோம். குறுந்தாடிக்கும் இன்று ஞாயிறு போலும்! சென்னை சாலைகளுக்கு விடுமுறை தினம், பெரும் வரம்! மைனஸாகும் மாசு. ப்ளஸ்ஸாகும் வேகம். போனஸாகும் நேரம். பயணிக்கச் சுகம்.

பார்க்கிங்.

"காலணிகள் காரிலேயே இருக்கட்டும்.''

"ஹையா! பீச் அதோ! ஜாலி!''

மணல்.

"கால் புதைய நடக்க, எவ்வளவு சுகம்!''

"டாடி! மணல் ரொம்ப மெத் மெத்!''

கடல்.

"பரந்து விரிந்து இருக்கிறது பார். கடலும் என் கண்மணி ஷீலா மனதும் ஒன்று.''

"மம்மி! என் டிராயர்ல ஈரம்!''

துல்லிய வானம். ஓசையுடன், ஓயாத அலைகள். காத்திருக்கும் கப்பல் வரிசை. வீடு விரும்பித் திரும்பும் கட்டுமரங்கள். சிலுசிலு காற்று. குஷியுடன் கூக்குரலிடும் மக்கள். வற்புறுத்தும் வியாபாரங்கள். மகிழ்ச்சியில் குதிக்கும் கௌதம். காதல் மின்னும் முகத்துடன் ஷீலா; அவன் கை பற்றியபடி.

ஓ... இது வாழ்க்கை! என்று நினைத்தான் ஜீவா. இன்னமும் அவன் ஒரு குடும்பப்

பறவைதான்; உள்ளுக்குள் உறுதிப்படுத்தும் ஒரு குரல். சாகஸ ஜீவாவிற்கு இனி, ஏது இடம்?

"ஹாய் ஹாண்ட்சம்!" ஜீவாவைப் பார்த்து கையசைத்துக் கூவியபடி கடந்து சென்றது டீனேஜ் கும்பல் ஒன்று; பாப் ஸ்டைல் பெண்கள். ஷீலா வெள்ளையாகச் சிரித்தாள்.

"உனக்குப் பொறாமை இல்லையா?"

"இல்லை! ஹாண்ட்சம் என்பது உண்மை தானே... அதில் எனக்குப் பெருமையும் கூட. மேலும், என் ஜீவா பற்றி எனக்கு நன்கு தெரியும்!"

பெருமிதமுடன் மனைவியைப் பார்த்தான்.

"இம்மாதிரியான குஷி மூடில்தான் கவிதை பிறக்கிறது போல!"

"கவிதையா! விஷப் பரீட்சை வேண்டாம் ஜீவா! காய்ச்சல் வந்து விடப் போகிறது!"

சிரித்தபடி யதேச்சையாகத் திரும்பிய ஷீலா திடுக்கிட்டாள். அவள் கண்களில் மிரட்சி. அவள் கிசுகிசுப்பாக, "ஜீவா?"

"என்னடா?"

"அங்கே... அங்கே அந்தக் குறுந்தாடி!"

உடனே திரும்பாமல், "எங்கே?" என்றான் கடலைப் பார்த்தபடி.

"நமக்குப் பின்புறம். தொலைவில். அவன் கையில் பைனாகுலர் கூட!"

"ஐ சீ" என்றவன் காஷுவலாகத் திரும்பிப் பார்த்தான். குறுந்தாடி செமை கில்லாடி போல. மறுபடி, அவனைக் காணவில்லை! ஏகக் கும்பலாக இருந்தது. இந்நேரம், அவன் கரைந்திருக்கலாம்; மறைந்திருக்கலாம்; பறந் திருக்கலாம்.

தேடிச் செல்ல ஜீவாவுக்கு உத்தேசமில்லை. குடும்பத்தை அனாதரவாகத் தனியாக விட முடியாது. இந்த மாய மாரீசன் டெக்னிக் எல் லாம் தன்னிடம் எடுபடாது.

குறுந்தாடி தேடி இங்கே வந்ததில் வியந் தான். தன் காரை அவன் பின்பற்றவில்லை என்பது உறுதி. வேறு 'ஒரு புதிய எவனோ' பின் தொடர்ந்து விட்டு, குறுந்தாடிப் பயலி டம் தகவல் தந்திருக்க வேண்டும். ஆக, ஒரு கும்பலே கூட்டுச் சதி செய்ய....

திங்கள். அலுவலகம். காத்திருந்த விளம் பர வேலைகள். மூழ்கி விட்டு நிமிர்ந்த போது, 11:30. காப்பி வரவழைத்தான். அழைத்தது போன்.

"நான் குப்தா!"

"சொல்லு மேன்!"

"உன்னைச் சந்திக்க வேண்டும்."

"................................"

"யோசிக்காதே ஜீவா. அவசரம். அவசி யம்."

"எப்போது?"

"இன்னும் அரை மணியில்!"

"எங்கே?"

எக்மோரில் அந்த லாட்ஜ். சுமாரான தரத்தில். மூதலாம் மாடி. கதவு சாத்தியிருந்த அறை முன் நின்றான் ஜீவா. நிதானித்தான். தயங்கினான். அப்படியே திரும்பி விட அவன் மனம் மிக விரும்பியது. முழுவதுமாக உதறிய பின், இங்கே ஏன் நிற்கிறாய் ஜீவா? பழைய உளவு உறவு புதுப்பிக்கப்படுகிறதா? கதவைத் தட்டிய நொடியிலிருந்து, உன் வாழ்க்கை திசை மாறி விடுமா?

இல்லை! இல்லை! ஜீவா, என்றும் எஜமா னன். விருப்பப்படிதான் அவன் வாழ்க்கை. குப்தா அழைத்தான். வந்திருக்கிறான். தட்டி



"நீங்க வோட்டு கேட்க வந்திருக்கீங்க, சரி. சொல்லவே தயக்கமா இருக்கு, ஆனா நான் யாருக்கு வோட்டளிக்கறனோ அவங்க கண்டிப்பா வெற்றி பெறுவதேயில்லை. என் ராசி அப்படி..."

- விகு

னான். திறந்தவன் -

குப்தா இல்லை! வேறு யாரோ. ஸ்பெயின் தேசப் பொலி காளை போல, திடகாத்திரன். இளைஞன். "ஓ... ஜீவா!" என்று அனுமதித் தான்.

கட்டிலில் ரிலாக்ஸ்டாக குப்தா. "வெல்கம் ஜீவா!" என்று நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது.

இளைஞன், ஜீவாவை அணுகி உடம்பெங் கும் தடவினான். "நான் நிராயுதபாணி!" என்று சிரித்தான் ஜீவா.

"சாரி நண்பனே! ஒரு ஃபார்மாலிட்டி யாகத்தான். இவன் தாஸ். நம் உளவுத் துறை யில் புதியவன். தலைவர் ஆத்மா இவனை என் தலையில் சுமத்தி பயிற்சி கொடுக்கச்

சொல்லியிருக்கிறார்'' என்றான் குப்தா.

"சரி, ஜீவா. உட்கார். எப்படி இருக்கிறாய்? சந்தித்து எவ்வளவு வருடங்கள்! முதலில், என்ன சாப்பிடுகிறாய்?''

"எதற்காக என்னை அழைத்தாய்?'' என்றான் அமைதியாக.

"நீ மாறவே இல்லை ஜீவா! நேரடியாக விஷயத்துக்கு வரும் உன் குணம்!'' குப்தா சிரித்து விட்டு, ''ஒரு முக்கிய ப்ராஜக்ட். அதற்கு உன் உதவி தேவைப்படுகிறது. உன்னையும் சேர்த்துக் கொள்ளச் சொல்லி இருக்கிறார் ஆத்மா."



''காலைப் பிடிச்சு கெஞ்சிக் கேட்கறேன், உங்க வோட்டையும் உறவினர், நண்பர்கள் வோட்டையும் எனக்களித்து உதவணும்...''

''என்னங்க இது! கையைப் பிடிச்சுக்கிட்டு காலன்னு சொல்றீங்க? விழுந்து கும்பிடுங்க...!''

– விசு :

"சாரி குப்தா. என்னால் முடியாது."

"ப்ளீஸ். அப்படிச் சொல்லாதே நண்பா."

''ஆட்டம் ஓய்ந்து ஒதுங்கியவன் நான். வற்புறுத்தாதே குப்தா."

"உன் திறமை எனக்கு யானை பலம். நீ சேர்ந்து ஒத்துழைத்தால் எதிரிகளை ஓட ஓட விரட்டலாம். வானம் கூட வசப்பட்டு விடும்!''

"என்னை விட்டு விடு. ஒருவன் தலையில் உலகம் ஓடுவதில்லை."

''இவ்வளவுதானா உன் தேசப்பற்று? குடும்பம் உன்னைக் கோழையாக்கி விட்டதா?''

ஜீவா பதில் சொல்லவில்லை. குப்தா உலகம் வேறு. சொன்னால் புரியாது. குடும்பம், அன்பு, காதலின் ருசி திளைக்காமல் தெரியாது. எதையும் இழக்க முடியாது.

''சாரி தாஸ். குட்பை குப்தா!''

மாலை. லேசான தூறலில் நகரம். வீட்டினுள் நுழைந்ததும், பதற்றமாக எதிர்ப்பட்டாள் ஷீலா.

''அந்தக் குறுந்தாடி வீட்டுக்குள்ளேயே வந்து விட்டான்!''

''வாட்!''

''சற்று முன்னர்தான் வந்திருந்தான்!''

''மிரட்டினானா?''

"இல்லை ஜீவா! உங்களிடம் ஒரு முக்கியமான செய்தி சொல்ல வேண்டுமாம்! இன்று இரவு ஒன்பது மணிக்கு உங்கள் அலுவலக வாசலில் இருள் மறைவில் காத்திருப்பானாம். இந்தச் சந்திப்பு எவரும் அறியக்கூடாதாம்!''

குப்தா சந்திப்பு முடிந்தது. இரவு இன்னொருவனுடன் இன்னொரு சந்திப்பா? குறுந்தாடியிடம் முக்கியச் செய்தியாமே? அவனுடன் முதல் முறையாக நேருக்கு நேர். சீலர் கொலை ஏன்? மிரட்டல்கள் ஏன்? பின்தொடரல் ஏன்? செய்வது யார்? இரவு எல்லாம் தெரிந்து விடும். மர்மங்கள் விலகி விடும்.

இரவு 8:30.

"போய்த்தான் ஆக வேண்டும்."

"எனக்குப் பயமாக இருக்கிறது'' என்றாள் ஷீலா. கவலையில் வாடியிருந்தாள்.

''வா! 'இறுதி' முத்தம் ஒன்று கொடு கண்ணே!''

''ஜீவா!'' மளுக்கென்று உடைந்த குரல், குபுக்கென்று கண்ணீர். "சும்மா விளையாட்டுக்கு!'' என்றவன் ஷீலாவை அருகில் இழுத்துக் கொண்டான். "எனக்கு ஒன்றும் ஆகாது. ஜீவாவை உனக்குத் தெரியாதா?'' என்றான் கண்கள் மின்ன.

''தெரியும். இருந்தும், ஜாக்கிரதைடா ஜீவா!'' என்றாள் அவன் அணைப்பில் ஒடுங்கி.

காரை சீராகச் செலுத்தினான். இன்னமும் நசநசத்த மழைத் தூறல். முக்கியச் செய்தி சொல்லத்தான் அழைத்திருப்பானா? அல்லது கமுக்கமாகக் கொல்லக் காத்திருக்கிறானோ... வாழ்வோ சாவோ, சவாலைச் சந்தித்துத்தான் ஆக வேண்டும்.

ஜீவாவிடம் கத்தி மட்டும் இருந்தது. துப்பாக்கி இன்னமும் அலுவலக டிராயரிலேயே. எடுத்துக் கொள்ள மறந்தோமே என்று நொந்து கொண்டான்.

காரை நிறுத்தினான். சிக்னல். சிவப்பாக ஒளிர்ந்தது. காத்திருக்கும் ஆபத்து கண் சிமிட்டுவதாக அவனுக்குப் பட்டது.

(தொடரும்)

CONTINUE THE STORY CONTEST FOR UNDER 16s



A SWEET SORROW

BROTHER UNDIR IN HOSPITAL

FEBRUARY '98

Rs.5/-

GOKULAM

The monthly magazine for children



அரிசிப்பொரி, ஜூஸ் எல்லாம் வெளுத்துக் கட்டுங்க!

சாப்பிடாம இருந்தா உடம்பு குறையும்னு வயித்தைச் சில பேர் காயப் போடுறாங்க. ஆனா அடுத்த வேளை சாப்பிடும்போது ஒரு வாரத்துக்குச் சேர்த்துக் கொட்டிக்கிறாங்க. அதுக்கு அவங்க மூணு வேளையும் தின்னே

திக்கலாம். யோகிங்க எல்லாம் உணவை முழுசாவே ஒதுக்கி வெச்சு வயித்தைப் பழக்கப்படுத்திடுறாங்க. நாம ஒருநாள் கூத்துக்கு மீசையை எடுத்த கதையா ஒருவேளை சாப்பிடாம இருந்தா மட்டும் ஒண்ணும் ஆகாது. அது காஸ் ட்ரபிளைத்தான் உருவாக்கும்.

வழக்கமான சாப்பாட்டு நேரம் வந்தவுடனேயே நம்ம உடம்புக்குள்ள ஜீரண சுரப்பிகள் குதிபோட்டுக்கிட்டுச் சுரக்க ஆரம்பிச்சுடுதுங்க. அதுங்களுக்குத் தீனி இல்லாம போனா அதாவது நேரத்துக்கு நாம சாப்பிடாம போனா, அல்சர் ஏற்படுது. காத்து உள்ள போயி வயிறு தொம்முன்னு ஆயிடுது. ஆனா வாரா வாரம் முறையா உண்ணாவிரதம் இருக்கிறவங்களுக்கு இந்தப் பிரச்னை வராது.

பசியையும் போக்கணும், காஸ் ட்ரபிளும் வரக்கூடாது, தொந்தியும் குறையணும், அல்சரும் வரக்கூடாதுன்னு நினைச்சீங்கன்னா அதுக்கும் ஒரு வழி இருக்கு.

அரிசியை வறுத்து அதோட வேர்க்கடலையையும், கொண்டைக் கடலையையும் கொஞ்சமாச் சேர்த்து அவல் தயாரிங்க! அதை ஒருவேளை சாப்பிடுங்க. ஒரு கல்லில நாலு மாங்கா விழுதா இல்லையான்னு பாருங்க. சின்னப் பிள்ளைங்க, 'அவல் டேஸ்டாவே இல்ல மம்மி'ன்னு பிகு பண்ணிக்கும். வெறும் அவலைச் சாப்பிட வெறுப்பா இருந்தா அதில சர்க்கரை, பால் சேர்த்துக்கிட்டா சூப்பரா இருக்கும். இன்னொரு சௌகரியம், அவலை ஒரு மாசம் வரைக்கும் வச்சிக்கலாம்; கெட்டே போகாது. இதுல புரோட்டீனும் எக்கச்சக்கமா இருக்கு.

தவழ்ற குழந்தைங்க பசியெடுத்தா கல்லு மண்ணுன்னு பாக்காது. எல்லாத்தையும் வாயில எடுத்துப் போட்டுக்கும். அதுக்கு ஒரு தட்டுல அரிசிப் பொரியை பரப்பி விடுங்க. ஆர்வமா எடுத்துச் சாப்பிடுங்க. குழந்தைங்களுக்கு பேதி போனா சாப்பாட்டைத் திணிக்காதீங்க. அரிசிப் பொறி கொடுங்க. டக்குனு நிக்கும். கடையில தொங்கற பொறி உருண்டையையும் வாங்கிக் கொடுக்கலாம், தப்பில்லை.

கிராமத்தில இருக்கறவங்க, பச்ச சோளக் கதிரு, மக்காச்சோள கதிர்களைச் சுட்டுத் திம்பாங்க. டேஸ்ட்தான் புதுசா இருக்கும். சத்து எல்லாம் ஒண்ணுதான்.

டைனிங் டேபிள்

அதனால டவுன்ல இருக்கறவங்க கவலைப்பட வேணாம். சோளப் பொரி, பாப்கார்ன் அயிட்டங்களை நாமே பண்ணி வச்சுக்கலாம். ஏன்னா கடையில செய்யறதில மண்ணு சேரும். நாமன்னா கவனமா செய்வோமில்லையா!

தியேட்டருக்குப் போனா கூல்டிரிங்ஸ் மார்க்கெட்டுக்குப் போனா கூல்டிரிங்ஸ்ன்னு குழந்தைங்க பாடாபடுத்துவாங்க. அப்படிச் சாப்பிடறதுதான் பெருமைன்னு நீங்களும் பந்தா பண்ண வேணாம். பின்னாடி வாயு தொல்லை வரும். அதுக்கு பெஸ்ட் ஃப்ரூட் ஜூஸ்தான். உடம்பும் குளுமையா இருக்கும். உடம்புக்கு எனர்ஜியும் கிடைக்கும். மேங்கோ பாக்கெட் ஜூஸ் குடிக்கலாம்தான். ஆனா அதுல சரக்கு கெட்டுப் போகாம இருக்க கெமிக்கல் சேப்பாங்க. நாளானா அந்த கெமிக்கலே உடம்புக்குக் கெடுதலா மாறலாம். ஆப்பிள் ஜூஸோ, ஆரஞ்சு ஜூஸோ அப்பப்ப தயாரிச்சுக் கொடுக்கற ஜூஸ் கடையில குடிக்கிறதுதான் சேஃப்டி!

காப்பி குடிச்சதும் உற்சாகம் வந்த மாதிரி இருக்கும். டீ குடிச்சா அப்படியொண்ணும் பெரிய வித்தியாசம் தோணாது. அதுக்குக் காரணம் இருக்கு. காப்பியில 'காஃப்பீன்'னு ஒரு பொருள் இருக்கு. அது காப்பி சாப்பிட்டதும் அட்ரனலின் சுரப்பிய வேகப்படுத்துது. அதனால ரத்தச் சுழற்சி கூடுது. ரத்தச் சுழற்சி கூடுறதாலதான் உற்சாகம் வந்தது போல் தோணுது.

காப்பி இப்படி இதயத்துக்கு அதிக வேலை கொடுக்கறதால, பம்பிங் ரேட் அதிகமாகுது. அதனால ஹார்ட் அட்டாக் உள்ளவங்க கண்டிப்பா காப்பியைத் தவிர்க்கணும். டீயில இந்தப் பிரச்னை இல்லை. சோர்வா இருந்தா டீ குடிங்க. வேலை பார்க்கற இடத்தில சுக்குமல்லி காப்பி கிடைச்சா நீங்க லக்கிமேன்தான். டீ, காப்பியை சுத்தமாகவே ஒதுக்கிட்டு, சுக்குமல்லிக் காப்பி குடிங்க, உடம்புல சளி இருந்தாக்கூட அதை வெளியேத்திடும். தலைப் பித்தமும் போகும். குடிப்பீங்களா!

— சுமி

3

காதல் டைரிக் குறிப்பு :

'இரு, வைத்து விடாதே!' – என்று இருபதுமுறை போனில் சொன்னேன்.

நிர்மலா கேட்டதை கவனிக்காதவன் போல மேஜை மேல் கலைந்து கிடந்த புத்தகங்களை அடுக்கினான் அரவிந்த்.

அவன் அடுக்கி முடிக்க, கைகளைக் கட்டியபடி அவள் காத்திருந்தாள்.

அடுக்கிவிட்டு அவள் வைத்த காப்பியை நிதானமாக ஆற்றினான்.

"சூடு சரியாத்தான் இருக்கு."

மெதுவாகப் பருகி முடித்து டபரா, தம்ளரை அவள் கையில் கொடுத்த பின்பும் நகராமல் நின்றாள்.

"என்ன?" என்றான்.

"அது யாருன்னு நீ இன்னும் சொல்லலையே..."

"எது?"

"இனிமே பொறக்கப் போற சிஸ்டருக்கா? அவங்க வீட்டு கொலுவுக்குப் போனப்போ தனக்கு ஒரே பையன்தான்னு அவங்கம்மா சொன்னாங்க. அந்தம்மாவுக்காக வாங்கினான்னு சொல்லிடாதே. அவங்க அதையெல்லாம் யூஸ் பண்றதில்லை. இப்ப நீ வேற பொருத்தமான பொய்தானே யோசிக்கிறே?"

அரவிந்த் சிரித்து விட்டான். இரண்டு கைகளையும் உயரே தூக்கி, "அம்பேல்!" என்றான், "போலீஸ்ல சேர்ந்துடேன். நல்லா துப்பறியறே!"

"பாராட்டினதுக்கு சந்தோஷம். பார்ட்டி யாரு?"

"பார்ட்டி கிர்ட்டின்னு பேசினா பல்லைப் பேர்த்துடுவேன்."

"அப்போ... ஸம்திங் ஸ்பெஷல்! சொல்லு! எத்தனை நாளா லவ் பண்ணிட்டிருக்கே?"

"உதைப்பேன்" என்று புத்தகத்தை ஓங்கினான்.

"பின்னே? கேர்ள் ஃபிரெண்டா?"

"தொணப்பாதே! அவ யாருன்னே தெரியாது."

"டூப்!"

"இதுக்கெல்லாம் சத்தியம் செய்ய முடியாது. நிம்மி, நான்

நான் உன்னை ஆராதிக்கிறேன்

அவளை எங்கேயோ பாத்திருக்கேன். எங்கன்னு சட்டுன்னு ஞாபகத்துக்கு வரலை."

"பேசினியா?"

"அதெப்படி அறிமுகமே இல்லாம பேசறது? பில் போடறப்போ இன்னும் தொண்ணூறு ரூபாய்க்கு வாங்கினா ஓவியம் இலவசம்னு சேல்ஸ் கேர்ள் சொன்னா. அவ ஓவியத்தை ரசிச்சா. ஆனா பில்லை முடிச்சிக்கிட்டுப் போய்ட்டா. நான் ரெக்வெஸ்ட் பண்ணி அந்த பில்லோட சேர்த்து என் பில்லைப் போடச் சொல்லி அந்த ஓவியத்தை வாங்கிட்டேன்."

"அப்புறம்?"

"மழைக்காக கடைக்கு வெளில காத்துக்கிட்டிருந்த அவகிட்ட அந்த ஓவியத்தைக் கொடுத்துடலாம்னு நான் கிட்ட போறதுக்குள்ளே அவ ஒரு ஆட்டோல புறப்பட்டுப்

"கடையில நானூத்திப் பத்து ரூபாய்க்குச் சாமான் வாங்கி ஓவியத்தை உனக்கு விட்டுக் கொடுத்த பொண்ணு!"

"என்ன உளர்றே? அதுதான் என் ஃபிரண்டுன்னு சொன்னேனே..."

"எந்த ஃபிரண்டு?"

"என் ஃபிரண்ட்ஸ் எல்லாரையும் உனக்குத் தெரியுமா?"

"விட்டுக் கொடுக்கற அளவுக்கு நெருக்கமா இருக்கிற ஃபிரண்ட்ஸை எல்லாம் தெரியும்."

"எதுக்கு இப்படிப் போட்டுக் குடையறே?"

"ரவீந்தர் லவ் பண்ணிட்டிருக்காரா யாரையாவது?"

"இல்லை."

"பின்னே எதுக்கு லிப்ஸ்டிக், நெய்ல் பாலீஷ், ஐ லைனர் எல்லாம் வாங்கியிருக்காரு?"

"அவன் சிஸ்டருக்காக வாங்கியிருக்கலாம்."

பட்டுக்கோட்டை பிரபாகர்


போய்ட்டா. தட்ஸ் ஆல்."

"அதென்ன அறிமுகம் இல்லாத அவ மேல உனக்கு அவ்வளவு அக்கறை?"

"ஒரு சின்ன உதவிதானே... ஐந்நூறு ரூபாய்க்கு வாங்கினாத்தான் ஓவியம் இலவசம். நான் வாங்கின தொகைக்கும் கிடைக்காது. அவ வாங்கின தொகைக்கும் கிடைக்காது. ஒரே பில்லா போட்டா கிடைக்கும். அந்தச்

"இன்னைக்கு உன் கண்ணுல தனியா ஒரு பளிச் தெரிஞ்சுது. அதான் கேட்டேன்" என்று நகர்ந்தவள் திரும்பி வந்து, "ஆமாம், இந்த வீட்ல எந்த முடிவையாவது அம்மா எடுக்கறாங்களா? எதுக்கு அவங்ககிட்ட மரியாதை இல்லாம மூர்க்கமா பேசி நோகடிக்கிறே?"

"சுருக்குன்னு அம்மா அப்படிக் கேட்கலாமா?"



சலுகையை அவ அனுபவிக்கட்டுமேன்னு நினைச்சேன்."

"அவ்வளவுதானே?"

"வேற என்ன?"

"சரி, அந்த பில் கவுண்ட்டர்ல என்ன சொல்லி சம்மதிக்க வைச்சே?"

"என்னமோ சொன்னேன். இப்ப என்ன அதுக்கு? நான் என்னமோ குற்றவாளி மாதிரி ஏன் இப்படி குறுக்கு விசாரணை பண்றே?"

"அவங்க சாதாரணமாத்தான் கேட்டாங்க."

"ஆனா அந்தக் கேள்வி என் மூடை அவுட் டாக்குதே."

"அரவிந்த், உனக்குள்ளே சிறிக்கிட்டிருக்கிற கோபத்துக்கு சதா சந்தர்ப்பம் தேடிக்கிட்டே இருக்கே. ஒரு சின்ன சான்ஸ் கிடைச்சாலும் போதும், பொங்கிடறே!"

அரவிந்த் பேப்பர் வெய்ட் உள்ளே பூக்களைப் பார்த்தான்.

"இதே மாதிரி அப்பாகிட்ட பேச வேண்டியதுதானே? அப்ப மட்டும் ஏன் வாலைச் சுருட்டிக்கிறே?"

"அது மரியாதை இல்லை நிம்மி, பயம்!"

''அவர்கிட்ட அவ்வளவு பயம் இருக்கில்லே?''


''அவர்கிட்ட உள்ள பயம் இல்லை. விளைவை நினைச்சு பயம்!"

"என்ன நடக்கும்னு சொல்றே?"

"அவர்கிட்ட என் மனசுல உள்ளதையெல்லாம் பேசிட்டா, அப்புறம் அவர் பதிலுக்காக நான் காத்துக்கிட்டிருக்க மாட்டேன். உடனே வீட்டை விட்டுப் போயிடுவேன்."

"அண்ணா!"

"கவலைப்படாதே! இந்த வீட்டை விட்டு நான் போக மாட்டேன். எனக்குச் சவால் குடும்பத்துக்கு வெளில இல்லை. குடும்பத்துக்குள்ளேதான். நான் இங்கேதான் சாதிச்சுக் காட்டணும்.''



''பையன் கேட்ட டூத்பேஸ்ட்டைத்தான் வாங்கிக் கொடுத்துட்டீங்களே, அப்புறமும் ஏன் நடுத்தெருவில வைச்சு அடிக்கிறீங்க...?''

''பின்னே பேஸ்ட்டுடன் சேர்த்து, 'பாதுகாப்பு வளையம்' கொடுத்தால்தான் ஆச்சுன்னு கடைக்காரரிடம் அடம் பிடிக்கிறான்!''

— வீயெஸ்வார்

புன்னகை செய்த நிர்மலா அவன் கையைப் பற்றிக் குலுக்கி, "இதுதான் ஸ்பிரிட். எனக்கு நம்பிக்கை இருக்குண்ணா. இளங்கோ அண்ணாவை விட, யாமினி அக்காவை விட நீ சாதிப்பே! நிறைய திறமை உன்கிட்ட இருக்கு. நீ வளர்த்துக்க வேண்டியது பொறுமையைத்தான்!" என்றாள்.

"கொஞ்சம் அனுசரணையாப் பேசினா உடனே ஆளாளுக்கு அட்வைஸ் பண்ண ஆரம்பிச்சிடுவீங்களே..."

"இதான்! இந்த முன்கோபம்தான் உன்னோட வீக்னஸ்! சரி, வா! அம்மா உம்முன்னு இருக்காங்க. வந்து சமாதானமாப் பேசு!"

அரவிந்த் ஒரு பெருமூச்சு வெளியேற்றி எழுந்தான். ஹாலுக்கு வந்தான். சோபாவில் அமர்ந்திருந்த அம்மா அருகில் அமர்ந்தான்.

''அம்மா, அண்ணன் லெட்டர் போட்டிருக்கிறதா ஆரம்பிச்சியே, என்ன எழுதிருக்கார்?''

"முதல்ல சாப்பிடு."

"இப்பத்தான் காப்பி சாப்பிட்டேன். பசிக்கலை. சொல்லு."

''பெங்களூர்ல உனக்காக அவன் ஒரு வேலை பார்த்து வெச்சிருக்கானாம். நல்ல சம்பளமாம். வீட்டுக்குப் பக்கத்திலேயே ஆபீசாம். நடந்தே போயிடலாமாம்."

"வேணாம்மா. சரியா வராது."

"ஏண்டா?"

''அண்ணன் வீட்லதான் தங்கச் சொல்லுவாரு.''

''அதில உனக்கு என்ன பிரச்னை? இளங்கோவும் சரி, சியாமளாவும் சரி உன் மேல எவ்வளவு பாசம் வெச்சிருக்காங்க தெரியுமா? சித்தப்பா, சித்தப்பான்னு குழந்தைங்களும் உருகறாங்க. நீ என்ன விருந்தாளியா? அதுவும் நம்ம வீடுதானே?''

''அந்த வீட்ல அண்ணியோட அம்மா இருக்காங்க. அவங்க 'சௌக்கியமா?'ன்னு விசாரிச்சாலே அதில கூட ஒரு நக்கல் இருக்கும். சரியா வராதுன்னா விட்டுடு."

''உன் இஷ்டம். தோளுக்கு மேல வளர்ந்துட்டே. உன்னை நாங்க வற்புறுத்த முடியுமா?"

போன் ஒலித்து, நிர்மலா எடுத்துப் பேசிவிட்டு, ''அண்ணா, அக்கா பேசறா. உங்கிட்ட பேசணுமாம்" என்றாள்.

"ஹலோ, சொல்லுக்கா" என்றான் அரவிந்த் ரிசீவரை வாங்கி.

"என்னடா அரவிந்த் இப்படிப் பண்றே? நேத்து உன்னை என் ஆபீசுக்கு வரச் சொன்னேனில்ல?" என்றாள் யாமினி எதிர்முனையில்.

''நேத்து நான் ஒரு கேரம் டோர்னமெண்ட்ல கலந்துக்கிட்டேன். அதான் வர முடியலை."

"ஒரு போன் பண்ணி சொல்லக் கூடாதா?"

"உன் ஆபீஸ் நம்பர் கிடைக்கலைக்கா."

"செல்போன் இருக்கே..."

"அந்த நம்பர் என் பாக்கெட்ல இல்லை."


''எதாச்சும் சொல்லு! சரி, டோர்னமெண்ட்ல நீ ஜெயிச்சியா, தோத்தியா?"

"நான் என்ன சொன்னா நீ சந்தோஷப்படுவே?"

"இந்தக் குத்தல்தானே வேணாங்கறது. சரி, இன்னைக்கு ஈவினிங் நாலு மணிக்கு என் ஆபீசுக்கு வா!"

"என்ன, அட்வைஸ் பண்ணணுமா? அதை போன்லயே பண்ணிடேன்."

''அதில்லை. நீ வா, நான் நேர்ல சொல்றேன்."



"பாடகர் ஸ்டூலின்மேல். வயலின்காரர் எங்கோ ஒரு மூலையில். மிருதங்கக்காரர் வேறொரு இடத்தில். ஸ்ருதி சேர்ப்பவர் எங்கோ ரயிலில் அப்பர் பெர்த்தில் இருப்பது போன்ற உயரத்தில். ஏன் இப்படி?"

"என்ன செய்ய! மூன் டி.வி.யிலே நிகழ்ச்சி ஒளிபரப்பாகப்போகுதே. இப்படியிருந்தாத்தான் கேமரா கோணம் நல்ல அமையுமாம்."

— குல்லூ

"இதில என்ன சஸ்பென்ஸ்? என்னன்னு சொல்லேன்."

"ஏதாச்சும் காரணம் சொன்னாத்தான் வருவியா? உன்னை நான் பார்த்தே ரெண்டு வாரம் ஆச்சு. ஜஸ்ட் லைக் தட். உங்கக் காவைப் பார்க்கறதுக்காக வரக் கூடாதா?"

சற்றே தயங்கிவிட்டு, "சரி, வர்றேன்" என்று வைத்தான்.

"ஏண்டா அவகிட்ட வம்படியாப் பேசறே? ஏதோ விஷயம் இருக்கறதாலதானே வரச் சொல்றா. போய்ட்டு வாயேன்" என்றாள் அம்மா.

"என்ன விஷயமா இருக்கும்னு நான் சொல்லட்டுமா? அவனோட டிரைவிங் லைசென்ஸ் புதுப்பிச்சித் தரச் சொல்லுவா. இல்லைன்னா புதுசா வீடு கட்டிட்டு இருக்காளே, அந்த பில்டிங் லோன் விஷயமா விசாரிச்சிட்டு வரச் சொல்லுவா. தெரியாதா எனக்கு?"

"சும்மா அலட்டிக்காதே. அதெல்லாம் மாப்பிள்ளை பார்த்துக்க மாட்டாரா?"

"நல்லா பாத்துக்குவாரு உன் மாப்பிள்ளை. அன்னைக்கு வீட்டுக்குப் போயிருந்தப்போ ஸ்கூலுக்குப் புறப்படற வித்யாவோட பேனாவுக்கு இங்க் போட்டுத் தர நேரமில்லைன்னு சொல்லிட்டு கார்ல போயிட்டார். உனக்கு ஒண்ணு தெரியுமா? அக்காவும், மச்சானும் தினம் காலையில 'குட்மார்னிங்' சொல்லிக்கிறாங்க. அப்புறம் ராத்திரி 'குட் நைட்' சொல்லிக்கிறாங்க. அதுக்கு மேல பேசற ஒவ்வொரு நிமிஷத்திலயும் சம்பாரிக்கிற வருமானம் அநியாயமா குறைஞ்சிடுமே."

"அண்ணா, ஞாயித்துக் கிழமை மட்டும் 'குட்-ஆஃப்டர்நூன்' எக்ஸ்ட்ராவா சொல்லிக்குவாங்க" என்றாள் நிர்மலா.

"என்னடி திமிரா? நீயும் அவன் கூட சேர்ந்துக்கிட்டியா?"

அரவிந்த் சோபாவிலிருந்து எழுந்து கொண்டு, "நாலு மணிக்கு அக்கா அப்பாய்ண்ட்மெண்ட் கொடுத்திருக்கா. மூணு மணிக்குப் புறப்படுவேன். ஊறுகா, பருப்புப் பொடி ஏதாச்சும் கொண்டு போய் கொடுக்கணும்னா ரெடி பண்ணி வை" என்றான்.

அந்த டயர் நிறுவனத்தின் ஆறு மாடிக் கட்டடத்தின் லிஃப்டில் நுழைந்து ஐந்தாவது எண்ணை அழுத்திவிட்டு கசியும் சங்கீதத்தை ரசித்தபடி காத்திருந்தான் அரவிந்த்.

வெளிப்பட்டு, விற்பனைப் பிரிவின் கண்ணாடிக் கதவு தள்ளி ஹாலில் பிரவேசித்தான். முப்பது மேஜைகளில் கம்ப்யூட்டர்களை வைத்துக் கொண்டு சுறுசுறுவென்று இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

'உதவி மானேஜர்' என்று பொன் எழுத்துக்கள் எழுதின தேக்குக் கதவுக்கு வெளியே நின்ற பியூன் புன்னகை செய்தான்.

"பேசிட்டிருக்காங்க. உக்காருங்க சார், சொல்றேன்."

காத்திருப்பவர்களுக்காக வசதியான நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஏழெட்டு பேர் காத்திருந்தார்கள்.

ஒரு காலி நாற்காலியில் அமர்ந்து ஸ்போர்ட்ஸ் ஸ்டார் எடுத்துப் புரட்டிக் கொண்டான்.

"சார், மேடம் கூப்பிடறாங்க."

அரவிந்த் கதவு தள்ளி குளிர்க்காற்றில் நடந்து யாமினியைப் புன்னகைத்து விட்டு எதிர்நாற்காலியில் அமர்ந்தான்.

யாமினி பேசிக் கொண்டிருந்த போனை வைத்து, "எப்படிடா இருக்..." ஒலித்த போனை எடுத்துப் பேசிவிட்டு, "சொல்லு. ஏதாச்சும் சாப்பிடறியா?" என்றாள். தங்க ஃபிரேம் கண்ணாடியைக் கழற்றி வைத்தாள்.

"ஒண்ணும் வேணாம்."

"உன்கிட்ட நிறைய பேசணும். முக்கியமா மூணு பேர் வெய்ட் பண்றாங்க. அவங்களை டிஸ்போஸ் பண்ணிடட்டுமா? ஈச் டூ மினிட்ஸ்."

"நான் வெளில வெய்ட் பண்ணட்டுமா?"

"வேணாம். இங்கேயே இரு. நோ ப்ராப்ளம்."

யாமினி பெல் அடித்து, பியூன் வந்ததும், "கேரவன் ஏஜென்ஸிலேர்ந்து பிருந்தான்னு ஒரு ரெப் வந்திருக்காங்க. அவங்களை வரச் சொல்லு" என்றாள்.

விநாடிகளில் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்த பிருந்தாவைப் பார்த்த அரவிந்திற்குக் கண்கள் பிரகாசமாயின.

மைகாட்! நான் சூப்பர்மார்க்கெட்டில் சந்தித்த பெண்!

(தொடரும்)



ரெட்டை ஜடை வயசு

குறைகூற முடியாத கதை. ஏனெனில் அப்படி ஒன்று (குறை அல்ல, கதை) இல்லை.

'ஒரு நாளைக்கு மூன்று சிகரெட் வரை அனுமதிக்கும் மனைவி அமைய வேண்டும்' என்று நாயகனும், 'எனக்கு லிப்ஸ்டிக் பூசிவிடும் கணவர் வரவேண்டும்' என்று நாயகியும் கனவுகளை வளர்த்துக் கொள்கிறார்கள். அற்பமாக இருக்கிறது.

வயலும், ஓடைகளுமாய் கேரளக் காட்சிகள் கண்ணுக்குக் குளுமை. ஆனால் இன்னொரு 'பகைமைப் புரட்சி' அருவருப்பு ஊட்டுகிறது. சென்சார் வெட்டுகளையும் மீறி, காட்சிகளிலும், வசனங்களிலும் வீசும் 'பச்சை' நெடி. 'மயிலிறகால்' காதலுக்கு ஒத்தட எழுத்துக்களை எழுதுபவரா இப்படி?

காட்சியின் தன்மை பற்றிய கவலையின்றி எல்லா இன்டோர் காட்சிகளிலும் ஷாட்டுக்கு ஷாட் கேமிராக் கோணத்தையும், லைட்டிங்கையும் பதிய வைக்க ஒளிப்பதிவாளர் முயன்றிருப்பது எரிச்சல் அளிக்கிறது.

அஜீத்தின் வழக்கமான நடிப்பே கூட இந்தப் படத்தில் பெரும் ஆறுதலாக இருக்கிறது.

மந்த்ராவின் காதல் வெளிப்பாடு, பாத்ரூம் க்ளைமாக்ஸ், முக்கியமாக கவுண்டமணியின் அரதப் பழசான ஜோட்டிகள் - இவற்றையெல்லாம் 'குமட்டல்' என்றுதான் குறைந்தபட்சம் விமர்சிக்கலாம்.

அதிரடி நகைச்சுவைக் காட்சி ஒன்றும் உண்டு. அதுதான் இந்த திராபையான படத்தில் 'சிறுநீரக மாற்றம்' பற்றி டாக்டர் ஒருவர் சீரியஸாக லெக்சர் அடிப்பது! ●

— ஜி.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)

சர்வோ சுபீரியர் XEE-SH லூப்ரிகன்ட் உலகில் தனி இடம் வகிப்பது நீங்கள் அறிந்ததே !



அமெரிக்கன் பெட்ரோலியம் இன்ஸ்டிட்யூட்டிலிருந்து டபுள் சீல் அங்கீகாரம் பெற்ற இந்தியாவின் ஒரே என்ஜின் ஆயில் என்பதே அதற்கான மற்றுமொரு அத்தாட்சி.

API SERVICE SH/CD
SAE 10W-40
ENERGY CONSERVING II

AMERICAN PETROLEUM INSTITUTE
FOR GASOLINE ENGINES
CERTIFIED

இன்றைய கார் உரிமையாளர்கள், தம் நவீன தலைமுறை கார்களின் சீரான ஓட்டத்திற்காக தரமுயர்ந்த மல்டிகிரேடு என்ஜின் ஆயிலை மட்டுமே உபயோகப்படுத்துகிறார்கள்.

தாதுப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட ஆயில்களில், டபுள் சீல் முத்திரை பெற்ற ஒரே என்ஜின் ஆயில் சர்வோ சுபீரியர் XEE-SH. அமெரிக்கன் பெட்ரோலியம் இன்ஸ்டிட்யூட் (API) மற்றும் இன்டர்நேஷனல் லூப்ரிகன்ட் ஸ்டான்டர்டைசேஷன் அண்டு அப்ரூவல் கமிட்டியின் (ILSAC), API டோனட் மற்றும் ஸ்டார் பர்ஸ்ட் முத்திரைகளே இதன் உலகத் தரத்திற்கான அங்கீகாரம்.

சர்வோ சுபீரியர் XEE-SH, சோதனைக்குகந்த நிலைகளில் குறைந்த பட்சம் 2.7% எரிபொருள் சேமிப்புக்கு உறுதியளிக்கிறது. மேலும் என்ஜினைத் தூய்மைப்படுத்தி முழுப் பாதுகாப்பு அளிக்கிறது.

ஆசியாவின் மிக நவீனமான இந்தியன் ஆயிலின் ஆய்வுக் கூடத்தில் உருவாக்கப்பட்டதால், ஜப்பானிய, அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் இந்திய கார்களிடையே மிகவும் பிரசித்தி பெற்ற என்ஜின் ஆயிலாக சர்வோ சுபீரியர் XEE-SH திகழ்வதில் வியப்பொன்றுமில்லை.



சர்வோ ஜீவனை அதிகரிக்கிறது

உங்கள் நகரிலுள்ள இந்தியன்ஆயிலின் பெட்ரோல் நிலையங்களில் கிடைக்கிறது.

इंडियनऑयल
IndianOil